கல்கி

KALKI 15-3-81 90 காசு




"நாங்க பழனிக்குப் போயிட்டு வரோம்... நீங்க?"
"நான் வட பழனிக்குப் போயிட்டு வரேன்.
...ஒரு சினிமாப் படம் எடுக்க ஆரம்பிச்சிருக்கேன்."

# வாழ்வின் இணையிலா இனிமைகள்
# அவை என்றென்றும் புதுமைகள்




HTM-PIL-2133



# போலீஸ் விளையாட்டு

"போலீஸ்காரங்க எதுக்கு இப்படித் தலை தெறிக்க ஓடறாங்க? திருடனைப் பிடிக்கவா?"

"முப்பதாவது அகில இந்திய போலீஸ் விளையாட்டு! கபாடி ஆட்டத்திலே எப்படி எதிரியை இரண்டு பேர் வளைச்சுப் பிடிச்சு அமுக்கிறாங்க பாருங்க! பஞ்சாப் போலீஸ் ஒரே பாய்ண்ட்லே மத்திய ரிசர்வ் போலீஸை ஜயிச்சுடுச்சு!"

"திருடனை வளைச்சுப் பிடிச்ச பழக்கமோ என்னவோ!"

வெற்றி வாகை சூடிய பஞ்சாப் போலீஸில் 26 வயது சப் இன்ஸ்பெக்டர் ஸிங்தேவ் ஸிங் 1979—80ம் ஆண்டுகளில் நடைபெற்ற போலீஸ் கபாடி விளையாட்டுக்களில் சாம்பியன் குழுவைச் சேர்ந்தவர். தேசிய விருது பெற்றவர். பாகிஸ்தானுக்கெதிராக கபாடி டெஸ்டில் ஆடிய பெருமை இவருக்கு உண்டு.

"இது என்ன கால் பந்தாட்டத்திலே மல் யுத்தம்? ஆச்சரியமா யிருக்கே!"

"ஹரியானா குழுவினரும் தமிழக அணியினரும் கால் பந்தாட்டத்திலே மூனாவது இடத்தைப் பிடிக்க உக்ரமா போராடறாங்க! அதிலே கொஞ்சம் டென்ஷன்! மல் யுத்தம் மாதிரி தோணுது! டை பிரேக்கரிலே தமிழ் நாடு ஜயிச்சுடுச்சு!"

"எல்லைப் பாதுகாப்புப் படை கால் பந்து காப்டன் நரேந்திர குருங் ரொம்பப் பொல்லாதவரு!"

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"மத்திய ரிசர்வ் படைக் குழு இருக்கிற இடம் தெரியாமல் அடிச்சு 'ஒன் ஸைட் கேம்' ஆக்கிட்டாரே!"

எல்லைப் பாதுகாப்புப் படை காப்டன் நரேந்திர குருங் 1980 ப்ரீ ஒலிம்பிக்கில் பங்கேற்றவர். 1979ல் பாஹ்ரின் சென்று ஆடிப் புகழ் பெற்றவர். 1977, 78, 79 ஆண்டுகளில் சாம்பியன் பட்டம் பெற்ற குழுவில் ஆடியவர்.


"மத்திய ரிசர்வ் போலீஸ் படை டி.எஸ்.பி என்னமா ஓடறார் பார்த்தீங்களா? ஓர் உயர் தர அதிகாரி இப்படி ஓடறது அதிசயமா யிருக்கே!"

"அவர் சர்வதேசப் புகழ் ஓட்ட வீரர் சுவாமி! இங்கே ஐயாயிரம் மீட்டராக்கும் அவர் ஓடி முதல் இடம் பெற்றிருக்கிறார்!"

மத்திய ரிசர்வ் படை டி.எஸ்.பி. ஹரி சந்த். வயது 27. 1974லிருந்து 1980வரை அகில இந்தியப் போலீஸ் விளையாட்டுக்களில் 5000 மீட்டர், 10000 மீட்டர் ஓட்டப் பந்தயங்களில் ரிக்கார்ட் கண்டவர். 1976, 1980 ஒலிம்பிக் ஓட்ட வீரர். 1978 ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் சூடியவர்.

இருபத்தி ஏழு வருஷங்களுக்குப் பிறகு சென்னை மாநகரின் பல்வேறு இடங்களில் அகில இந்திய போலீஸ் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இட்டத்தட்ட 1400 போலீஸ் விளையாட்டு வீரர்கள் அனைத்து மாநிலங்களிலிருந்தும், யூனியன் பிரதேசங்களிலிருந்தும் வந்து பங்கேற்றனர். இவர்களில் சர்வ தேசப் புகழ் பெற்றவரும் உண்டு; தேசிய விருது பெற்றவர்களும், அர்ஜுனா விருது சூடியவர்களும் இருந்தார்கள். விளையாட்டுக்கள் சிறப்பாக நடைபெறத் தமிழக ஐ. ஜி. பரமகுரு, டி.ஐ.ஜி. ராஜ் மோகன், போலீஸ் கமிஷனர் ஸ்ரீபால் மற்றும் உயர்தரப் போலீஸ் அதிகாரிகள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியன.

-குண்டுமணி






பல்வேறு பணிகளின் பொருட்டு அங்குமிங்கும் அலைந்தபோது நம் கண்ணில் பட்டவைகளும் காதில் விழுந்தவைகளும்

● 'நாச ப்ரகாஷ்' அருகிலுள்ள, 'விஸ்வ ஹிந்து பரிஷத்' அலுவலகச் சுவரில் தினமும் ''அனுபவ முத்து'' என்ற தலைப்பில் ஒரு பொன்மொழி எழுதப்படுகிறது. இதற்கென சுவரில் ஒரு கரும்பலகை நிரந்தரமாகப் பதிக்கப்பட்டிருக்கிறது.

● 'தீ' படத்திற்கான விளம்பரம் ஒன்றில் தென்னகமெங்கும் 'தீ' பரவுகிறது எனக் கூறப்பட்டுள்ளது. அமங்கலமாக இப்படிக் கூறலாமா?



● சிமெண்ட் விற்பனையால் பணக்காரரான ஒருவர், 'ராம்கோ', 'சங்கர்', 'எவரெஸ்ட்' என பிரபல சிமெண்ட் கம்பெனிகளின் பெயர்களைத் தம் மகன்களுக்குச் சூட்டியிருக்கிறார்.

● வெங்காய தோசையில் வெங்காயம் இருக்கும். மசால் தோசையில் மசாலா இருக்கும். வீட்டு தோசையில் என்ன இருக்கும்? இங்கே வீட்டுத் தோசை கிடைக்கும் என்ற அறிவிப்பை ஒரு ஹோட்டலின் வாசலில் கண்டு ஆவலுடன் நுழைந்தேன். எனக்குக் கிடைத்ததோ ஒரு அங்குல உயரத்துக்குக் கனமாக வார்க்கப்பட்ட மொர மொரப்பல்லாத ஒரு 'சோதா' சாதா தோசை.

● 37 எண் பேருந்து. பாவம் பெண் கண்டக்டர். (கண்டக்ட்ரஸ் என்று சொல்ல வேண்டுமோ?) காசுகளை வாங்கிப் பையில் போடுவதற்கு மிகவும் சிரமப்பட்டார். பெண் கண்டக்டர்களுக்குத் தோல் பை வழங்குவதைவிட தோள் பை வழங்கினால் என்ன?



● கன்னிமாரா நூலகத்தில் ஆராய்ச்சி மாணவர்களுக்கெனத் தனிப்பட்ட வசதிகள் அளிக்கப்பட்டபோதிலும் அவ்வசதிகளைப் பயன்படுத்த முன்வருபவர்கள் மிகவும் குறைவாம். இதற்கான காரணத்தை யாராவது ஆராய்ந்தால் என்ன?

● ''திடுக்கிட்டான்(ள்)'', ''சிலையாக நின்றான்(ள்)'', ''காலச் சக்கரம் உருண்டது''... இதுபோல் எழுத்தாளர்கள் வழக்கமாகப் பயன்படுத்தும் சொற்கள் – சொற்றொடர்களைப் பட்டியலிட்டு அவை தன் கதையில் இடம் பெறுதவாறு தன்னைப் பாதுகாத்துக் கொள்வதாக சென்னை வானொலி நிலையத்தில் நடந்த ஒரு ஒலிப்பதிவின்போது 'சுஜாதா' கூறினார்.

● பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலையில் பணிபுரியும் ஒரு தொழிலாளி மரணமடைந்தால், அத்தொழிலாளியின் குடும்பத்துக்கு வழங்கப்படுவதற்காக அனைத்து தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து ஒரு ரூபாய் பிடித்தம் செய்யப்படுகிறதாம். இதன் மூலம் இறந்த தொழிலாளியின் குடும்பத்துக்குக் கிடைக்கும் தொகை ரூ. 13150.

● எழும்பூரில் உள்ள மாநில பெண்கள் பள்ளியில் பயிலும் இரு மாணவியரின் பெயர்கள்: 'மினி', 'டியூன்'. புதுமையாக இல்லை?




● அசோக் நகரில் உள்ள ஒரு மருந்துக் கடையில், "Service with prayer is our principle" என்ற அறிவிப்பு காணப்படுகிறது.

–ஜெயம்ஜி



விஜயேந்திரன்

# ரஜினிகாந்தின் கண்கள்!

ரஜினிகாந்த் லதாவைத் திருமணம் செய்துகொண்டுவிட்டார் என்பது பழைய செய்தி. அவர் தம் திருமணத்துக்கு நேரில் சென்று அழைத்தவர்கள் ஐந்து பேர்கள்தான். பாலசந்தர், மகேந்திரன், பஞ்சு அருணாசலம், எஸ். பி. முத்துராமன், ஒளிப்பதிவாளர் பாபு. எவ்வளவு சிக்கனமான திருமணம்! ரஜினியின் திருமணத்துக்கு வாழ்த்துத் தெரிவிக்கச் சென்றபொழுது அங்கு நடிகை லட்சுமியைப் பார்த்தேன். கல்கியில் ''போல்லாதவன்'' நூறுவது விழாவைப் பற்றி எழுதியிருந்ததை அவர் குறிப்பிட்டு, ''நானும் ஸ்ரீப்ரியாவும் யாராவது ஒருவராவது சுருளிராஜனைப் பற்றிப் பேச மாட்டார்களா என்று ஏங்கிக் கொண்டிருந்தோம். ஒரு கூட்டத்தில் இருவரும் எழுந்து கத்திவிடலாமா என்றுகூட நினைத்தோம். அது எந்த ரஸனையாக இருந்தாலும் சரி. நம்முடன் வாழ்ந்த ஒருவரை, குறிப்பிட்ட அந்தப் படத்தில் நடித்த ஒருவரை மறப்பது என்பது எவ்வளவு பெரிய பாவம். அதுவும் சினிமா உலகத்தில் மட்டும்தான் இதுநடக்கும். விழாவுக்கு அடுத்த நாள் எனக்கு போன் கால்களும், கடிதங்களும் தந்திகளும் நன்றிகூறி வந்தன. மனைவி முத்துலட்சுமி எனக்கு போன் செய்து நன்றி கூறினார். இனிமேலாவது இதுமாதிரி நடக்காம லிருக்கவேண்டும்'' என்றார்.

* ரஜினிகாந்தின் வலது கையில் கல்யாணமானதின் அடையாளமாகக் கட்டியிருந்த காப்பு அப்படியே இருந்தது. அப்படியே நடித்துக்கொண்டிருந்தார். படத்தில் அது தெரியாதா? இயக்குனர் அதை மறந்து போய் விட்டாரா?

* 'போல்லாதவன்' படத்தில் ரஜினிகாந்தின் கண்களாக இரண்டு பயங்கரக் கண்கள் அவ்வப்பொழுது தெரியுமே! ஞாபகமிருக்கிறதா? அது ரஜினியின் கண்களே அல்ல. இலங்கை விஜயேந்திரன் என்பவருக்குச் சொந்தமானவை அவை. விஜயேந்திரன் ஒரு சிறந்த தமிழ்க் கவிஞர். கவியோகி சுத்தானந்த பாரதியின் சிஷ்யர். அடையாறு யோக சமாஜத்தில் வாழ்ந்து வருபவர். தமிழில் தயாராகும் 'டிராகுலா' படத்தில் டிராகுலாவாக நடிப்பவர். படத்தின் பெயர் 'உயிர் உள்ளவரை'. - சலன்



பாரெக்ஸ்

# கல்கி

# குழந்தை பராமரிப்புப் போட்டி



**வென்றிடுவீர் மாபெரும் பரிசுகளை!**
**ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு**
**பரிசைப் பெறலாம்!**

முதல் பரிசு ரூ. 500/-


இரண்டாம் பரிசு ரூ. 300/-

2 மூன்றாம் பரிசுகள்
ரூ. 200/- (ஒவ்வொருவருக்கும்)

8 நான்காம் பரிசுகள்
ரூ. 100/- (ஒவ்வொருவருக்கும்)

எளிதிலே வெல்லக்கூடிய 12 அரிய பரிசுகள்!

அதோடு கூட, போட்டியில் பங்குபெறும் ஒவ்வொருவருக்கும் இச்சிறு புத்தகங்கள் இலவசமாகக் கிடைக்கும்.




"குழந்தையின் முதலாண்டு புத்தகம்"

"குடும்பத்திற்கான பூரணச் சத்துணவு வழிகாட்டி"




நீங்கள் 35 வயதிற்கு உட்பட்ட தாயாயின்

"என்னுடைய குழந்தையின் முதலாண்டில் ஏற்பட்ட இனிய அனுபவங்கள்"

என்ற தலைப்பில் உங்களுடைய கருத்துக்களை தொகுத்து ஒரு கட்டுரையாக (சுமார் 300–400 வார்த்தைகளுக்குள்) எளிய நடையிலே எழுதியனுப்புங்கள்.

கட்டுரையை அனுப்ப வேண்டிய முகவரி:
''ஃபாரெக்ஸ்—கல்கி குழந்தை பராமரிப்புப் போட்டி''
கல்கி
ரேஸ் கோர்ஸ் சாலை
கிண்டி
சென்னை 600 032

உங்களுடைய பெயர், வயது, முகவரி ஆகியவற்றை தெளிவாக எழுதியனுப்புங்கள்.

முதலாவது, இரண்டாவது பரிசு பெறும் கட்டுரைகள் அடுத்தடுத்த கல்கி இதழ் களில் பிரசுரிக்கப்படும்.

பரிசுக்குரிய கட்டுரைகளை மூன்று பிரபல நடுவர்கள் தெரிந்தெடுப்பார்கள்.

**கட்டுரைகளை அனுப்பவேண்டிய கடைசி தேதி:ஏப்ரல் 30, 1981.**

**இது ஃபாரெக்ஸ் தயாரிப்பாளர்களும் கல்கியும் சேர்ந்து நடத்துவதாகும்.**

# தப்புத் தாளங்கள்

அபரிமிதமான நேர்முக வரிகளால் மிக அதிகமாகப் பாதிக்கப் படுகிறவர்கள் மாதச் சம்பளம் வாங்கும் மத்தியதர வகுப்பினர்தான் என்பதை உணர்ந்து அவர்களுக்குச் சில சலுகைகள் காண்பித்திருக்கிறார் ஆர். வி. இதனால் மத்திய தர வர்க்கத்தினரின் நல்லெண்ணத்தைத் தமக்கும் இந்திரா காங்கிரஸ் அரசுக்கும் சம்பாதிக்க எண்ணியிருக்கிறார். ஆனால் பட்ஜெட்டை மேலோட்டமாகப் பார்த்ததுமே ஏற்படும் நல்லெண்ணம் நீண்ட காலம் நீடிக்காது. தமக்குக் காண்பிக்கப் பட்ட சலுகைகளை விட விலைவாசிகள் உயர்வு காரணமாகத் தாம் மிக அதிகமாகப் பாதிக்கப்படுவதை ஸ்ரீமான் பொதுஜனம் சீக்கிரமே உணர்வார்.

ஜனவரியிலேயே பெட்ரோலியம் பொருள்களின் விலைகளை உயர்த்தியாகி விட்டது. பட்ஜெட்டுக்குச் சில வாரங்களுக்கு முன்பு நிலக்கரி, எஃகு, செமெண்ட் ஆகியவற்றின் விலைகளை ஏற்றியாகிவிட்டது. ரயில்வே பட்ஜெட் வேறு உணவுப் பொருள்கள் உள்பட அனைத்துக்கும் சரக்குக் கட்டணத்தையும் நமது பயணக் கட்டணங்களையும் உயர்த்தி விட்டது. இவ்வளவுக்கும் மேல் புதிதாக 271 கோடி ரூபாய்க்கு வரிகள் விதித்துள்ளார் ஆர். வி. எல்லா வரிகளும் விலை உயர்வுகளும் கடைசியில் பொருள்களை விலை கொடுத்து வாங்கும் பொதுஜனம் தலையில்தான் விடியும். அவன்தான் குடியிருப்புக்கு அதிக வாடகையும் பண்டங்களுக்கு அதிக விலையும் தரப் போகிறவன்.

271 கோடிக்குப் புதிய வரிகள்; கறுப்புப் பணப் பத்திரங்கள் வழங்குவதன் மூலம் அரசுக்குக் கிடைக்கப்போகும் நிதி; அரசுத்துறை நிறுவனங்கள் பொது மக்களிடமிருந்து பெறப்போகும் கடன் ஆகிய அனைத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்ட பிறகும் 1539 கோடி பட்ஜெட்டில் துண்டு விழுகிறது! இது மதிப்பீடு தான். உண்மையில் பற்றுக்குறை இன்னும் அதிகமாகவே இருக்கும் என்பதற்குச் சென்ற ஆண்டு பட்ஜெட்டே சாட்சி! (மதிப்பீடு பற்றுக்குறையைவிட அசல் பற்றுக் குறை 530 கோடி அதிகம்!) இவற்றுக்கெல்லாம் சேர்த்து நோட்டு அச்சடிப்பதால் பணவீக்கம் அதிகரித்து விலைவாசிகள் மேலும் உயரும்.

ஆர். வி. நடனக்கலை வல்லுனராயிருக்கலாம்; ஆனால் இந்திரா காங்கிரஸ் கொள்கைகள் என்ற தப்புத் தாளங்களுக்கு ஏற்ப அவர் ஆட வேண்டியிருக்கிறதே! திட்டச் செலவினங்களைக் குறைப்பது; அரசாங்கத்தின் நிர்வாகச் செலவினங்களில் சிக்கனத்தைக் காட்டுவது; ஆரோக்கியமான அயல்நாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து, நேசப்பான்மையை அண்டை அயல் நாடுகளுடன் வளர்த்துக் கொள்வதன் மூலம் ராணுவச் செலவுகளைக் கட்டுப்படுத்துவது; அரசு வழங்கும் அனாவசியமான மானியங்களை ரத்து செய்வது; மேன்மேலும் நஷ்டமே கண்டு வரும் அரசுத்துறைத் தொழில்களில் மேன்மேலும் பணத்தை முதலீடு செய்வதற்கு முடிவு காண்பது போன்ற நடவடிக்கைகளே உபரி பட்ஜெட் தயாரிக்கவும் வரிகளைக் குறைக்கவும் கறுப்புப்பணம், பணவீக்கம் முதலியவற்றை அடித்து விரட்டவும் விலைவாசிகளை ஸ்திரப்படுத்தவும் உதவும்.

புதிய வரிகளில் மிகவும் அநீதியானது பத்திரிகைக் காகிதத்தின் மீது 15 சதவீதம் இறக்குமதி வரி. ஏற்கெனவே பத்திரிகைப் பொருளாதாரம் சரியில்லை. சர்வதேச மார்க்கெட்டில் காகித விலை நாளுக்கு நாள் ஏறுகிறது. அண்மையில் பாலேகர் கமிஷன் தீர்ப்புப்படி பத்திரிகை நிறுவனங்கள் புதிய சுமைகளை ஏற்றுள்ளன. இவ்வளவுக்கும் மேல் இந்தப் புதிய வரி பேரிடி. பத்திரிகைகளின் பொருளாதாரத்தை அளவுக்கு மீறிச் சோதிக்கும் எந்த நடவடிக்கையும் பத்திரிகை சுதந்திரத்தில் தலையிடுவதேயாகும்.

பத்திரிகைகளின் வளர்ச்சி காரணமாக மக்களின் பொது அறிவு வளர்ந்து விடக் கூடாதே என்று இந்த அரசு கவலைப்படுவது போலிருக்கிறது. மக்களின் அறியாமை தானே இந்தியாவில் அரசியல்வாதியின் மாபெரும் பலம்! அரசாங்க இலாக்காக்களாகவே நடக்கும் வானொலியும் தொலைக்காட்சியும் போதாதா? பத்திரிகைகள் எதற்கு? சதா அரசையும் ஆள்வோரையும் குறை கூறுகிற பத்திரிகைகளைப் பழி வாங்கிவிட வேண்டியதுதானே!

1981 மார்ச் 15

ரௌத்திரி பங்குனி 2

மலர் : 39 இதழ் : 33



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்



உன் உடம்பு தான் தடையா இருக்கு!
ரேகன்
SUMMIT PRODUCTIO
உங்களோட நடிக்கணும்னு ஆசையா இருக்கு!
ஆப்கனில் ஆக்கிரமிப்பு
15% லெவி
பத்திரிகைகள்
ரயில்வே பட்ஜெட்
இதோபார்! உன் பாரத்தைக் குறைச்சுட்டேன்! இனிமே உன் பாடு ஜாலி தான்!

## 11. மற்றொரு சிக்கல்!

அவசரத்துக்கு அனுப்பப்பட்ட அறை இருட்டாக இருந்தது. மேலேயிருந்து ஒரே ஒரு கண்ணாடி ஓடு தயவு செய்ததில் கிடைத்த வெளிச்சத்தில் வஸந்த் கணேஷைப் பார்த்தான். கணேஷ் சுற்றிலும் பார்த்தான். பிற்பகலில் பாதி ராத்திரி. இருந்தும் சில பொருட்களின் வடிவங்கள் தெரிந்தன. பழங்காலத்து மர பீரோ, அதனருகில் ரிட்டையரான கட்டில், கட்டிலின் மேல் கட்டிலுக்குச் சம்பந்தமில்லாத சாமான்கள். உதாரணமாகப் புத்தகங்கள், சோப்பு டப்பா, காய்ந்த மாலை, மோட்டாரின் உதிரி பாகங்கள்; இப்படி.

கட்டிலுக்கு அருகே இருட்டு விளிம்பில் ஒரு மகத்தான இரும்புப் பெட்டி தெரிந்தது.

''என்ன பாஸ்?''

''வெளியே அந்தாளு பேசறது கேக்கறதா பாரு.''

வஸந்த் காதைத் நீட்டிக்கொண்டு கதவின் மேல் வைத்துக் கேட்டான்.

''ராத்திரிக்குள்ள வந்து வாங்கிட்டுப் போறதாச் சொன்னாங்க. அவங்களுக்காகத் தான் காத்துக்கிட்டிருக்கேன்.''

''பத்திரமா வெச்சிருக்கல்ல?''

ரொம்பப் பத்திரமா.''

''பிரிச்சும் பாத்தியா?''

''நான் ஏங்க பிரிக்கிறேன்? நான் ஒரு போஸ்ட் ஆபீஸ் மாதிரிதானே! ஹி! ஹி!''

''சிரிக்காதே. நல்லால்லே.''

''என்னடா பேசறாங்க?''

''அந்தப் பார்சலைப் பத்தித்தான் பாஸ். சதாசிவம் பிலியா பொய் சொல்லிக்கிட்டிருக்காரு.''

''என்னவாம்?''

''பிரிக்கவே இல்லையாம்.''

''அது என்ன பாத்தியா வஸந்த்?''

''புதுக் கவிதை மாதிரி ஒரு வடிவமற்ற சமாசாரம் பாஸ்.''

''அவன் அதைத் தூக்கறபோது கொஞ்சம் கஷ்டப்பட்டான்.''

''கவனிச்சேன் பாஸ்! என்ன கொஞ்ச நாழியா சத்தடியே இல்லே? ஆசாமி நம்மை வெச்சுப் பூட்டிட்டுக் காப்பி சாப்பிடப் போயிட்டானா?''

''திறந்து பாரு!''

வஸந்த் கதவை முயன்று பார்த்தான். ''வெளியே தாப்பாப் போட்டிருக்கு பாஸ்.''

''வெளியே சத்தடி ஏதாவது?''

''இல்லே.''

''அப்ப உலுக்கிப் பாரு.''

வஸந்துக்குக் கதவை உலுக்கச் சந்தர்ப்பம் இல்லாமல் திறக்கப்பட்டது.

''என்னங்க அடைச்சு வச்சுட்டுக் காணம போயிட்டீங்க.''

''மன்னிச்சுக்குங்க. கொஞ்சம் நெருக்கடியாயிடுச்சு. அந்த ஆசாமிக்கு நீங்க இங்க வந்தது தெரியக் கூடாது.''

''அந்தாளு யாரு?''

''தெரியாது போலக் கேக்கறீங்க! அவனும் உங்களை மாதிரி விசாரிக்க வந்த ஆளு தான்.''

''அப்படியா? இப்ப நீங்க பொருளைக் காட்டறீங்களா?''

''நீங்க விலையைச் சொல்லுங்க, அப்புறம் பார்க்கலாம்.''

கணேஷ் வஸந்தைப் பார்த்தான். ''எவ்வளவு கேக்கலாம் வஸந்த்?''

''பத்து கேக்கலாம்! அதுவரைக்கும்தான் பாஸ் நமக்கு அனுமதி இருக்கு!''

சதாசிவம் சிரித்து, ''பத்துக்கு விரல் கூட வராதுங்க!'' என்றான்.

''நீங்க எவ்வளவுதான் சொல்றீங்க?'' என்றான் கணேஷ்.

''மினிமம் நாப்பத்தஞ்சுக்குக் குறையாதுங்க.''

''அடேயப்பா! கட்டுப்படியாகாதுங்க! பாஸ் வாங்க போகலாம்.''

''இரு வஸந்த். ஏங்க நீங்க நாப்பத்தஞ்சு கேக்கறது இதுக்கு மட்டுமா இல்லே....''

''இதுக்குமட்டும்தான். மத்தது கிடைச்சா நான் ஏன் இங்கே சிங்கியடிச்சிக்கிட்டிருக்கேன்!''

''வாஸ்தவம்தான். ஆனா, பொருளைப் பாக்காததுக்கு முன்னாடி எங்களாலே நிர்மானிக்க முடியாதுங்க. கொஞ்சம் காட்டறீங்களா?''

அவன் சற்று யோசித்ததாகப் பட்டது. ''கொஞ்சம்இருங்க பளயபடி எடுத்தாறேன்'' என்று அந்த வீட்டின் பின்புறத்துக்குச் சென்றான்.

கிடைத்த தனிமையில் வஸந்த், ''பாஸ்! அத்தரதையா கதை வசனம், நடிப்பு எதுவுமே புரியலே. ஸாம்யுவெல் பெக்கட் டிராமா போல இருக்கு'' என்றான்.

''எனக்கும் புரியலேதான் வஸந்த்! அவன் எதையோ விக்க விரும்பறான். எதை? தெரி

# வஸந்த்! வஸந்த்!

சுஜாதா



யலே. ஆனா, ஒரு விதமா பேரம் பேசி யாரு ஜாஸ்தி ஆஃபர்பண்றீங்களோ அவங்களுக்குத் தரதா அவசரமா பேச்சு வார்த்தை நடத்திக்கிட்டிருக்கான்னு தெரியுது. இவனைப் பாத்தா ஏதோ மிடில்மேன்னு தெரியுது.''

''எல்லாம் சரிதான். விக்கிற மால்என்ன?''

''ஆன்க் மி அனதர்.''

''வரான்.''

வந்தவன் கையில் அந்தப் பார்ஸல் இல்லே. ''காட்டறதுக்கு முன்னாடி ஒரு சின்ன விஷயங்க.''

''என்ன விஷயங்க?''

''நாப்பத்தஞ்சுக்கு நீங்க சம்மதிக்கிறீங்களா?''

''அப்படித்தான் வெச்சுக்கங்களேன்.''

''அதுக்கு முன் பணமா கொஞ்சம் வெக்கறீங்களா?''

''எவ்வளவு வேணும்?''

''ஒரு பத்து பதினஞ்சு.''

''சரிதான்'' என்று வஸந்த் கணேஷைப் பார்த்தான். கணேஷ்: ''அவ்வளவு பணத் துக்கு நாங்க இன்னும் தயாரா வல்லிங்க.''

சதாசிவத்தின் முகம் சுருங்கியது. ''அப்ப நாப்பத்தஞ்சு எப்படிப் புரட்டப்போறிங்க?''

''உங்களுக்கு எப்பத்துக்குள்ளப் பணம் வேணும்?''

''சாயங்காலம் நாலு மணிக்குள்ள வேணும். அதுக்கப்புறம் பொருள் கை மாறிடுது.''

''சாயங்காலத்துக்குள்ள ஏற்பாடு பண்ணிடறேம். பொருளைக் கொஞ்சம் காட்டிடுங்களேன்.''

''இல்லிங்க. முன் பண உத்திரவாதம் இல்லாமக் காட்டறதில்லிங்க.''

''அப்ப எங்க மேலே நம்பிக்கை இல்லிங்களா?''



## அன்பார்ந்த வாசகர்களுக்கு,

பத்திரிகை அச்சாவதற்கு இறக்குமதி செய்யப்படும் நியூஸ்பிரிண்ட் காகிதத்தின் விலை கடந்த பதினைந்து மாதங்களில் 12 சதவிகிதத்துக்கு மேல் உயர்ந்து விட்டது. பத்திரிகைத் தொழிலுக்கு அத்தியாவசியமான இதர மூலப் பொருள்களின் விலையும் கடந்த பல மாதங்களில் அபரிமிதமாக உயர்ந்து விட்டது. தொழிலாளர்களுக்கான ஊதியமும் சமீபத்திய பாலேகர் சிபாரிசுப்படி கணிசமாக உயர்ந்துவிட்டது. இவ்வளவும் போதாது என்று இறக்குமதி செய்யப்படும் நியூஸ்பிரிண்ட் காகிதத்தின் மீது 15 சதவிகிதம் இறக்குமதி வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இவற்றின் விளைவாக ஏற்படும் அதிகப்படி செலவையோ, நஷ்டத்தையோ தாங்கிக் கொள்ளும் சக்தி நமது ஸ்தாபனத்துக்கு இல்லை. எனவே மிகுந்த மன வருத்தத்துடன் வருகிற 22-3-1981 இதழிலிருந்து கல்கி பத்திரிகையின் விலையை ரூ. 1-20 ஆக உயர்த்தியுள்ளோம். தயவு செய்து இந்த விலை உயர்வைப் பொருட்படுத்தாமல் உங்கள் அபிமான கல்கி பத்திரிகைக்கும், அதன் விற்பனை வளர்ச்சிக்கும் உங்கள் நல்லாதரவைத் தொடர்ந்து அளித்து வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

மானேஜர், கல்கி

''இல்லீங்க. பச்சை நோட்டைப் பார்த்தாத்தான் நம்பிக்கை வரும். ஏற்கனவே ஒரு கொலை விழுந்து போச்சு! நீங்க போங்க. மூணுப் பணமும் கொண்டு வாங்க. அப்புறம் நல்லாப் பாத்துக்கங்க.''

''அப்ப காட்ட மாட்டிங்க.''

''ம்ஹூம்.''

''சரி, வா வஸந்த் போகலாம்.''

இருவரும் வெளியே வந்தபோது தெருவில் சூரியச் சரிவின் நிழல்கள் நீளத் துவங்கியிருந்தன. கணேஷ் அவனிடம் விடைபெறும் போது ''இன்னும் ஒரு மணி நேரத்தில் வரோங்க. வீட்டில இருப்பீங்க இல்ல?'' என்றான்.

''தாராளமா! நான் எங்கேயும் போறதில்லே.''

காரில் வஸந்த், ''எம் பாஸ் நேரா போலீஸுக்குப் போய், 'இந்த வீட்டில நிழலா ஏதோ வியாபாரம் நடக்குது'ன்னு சொல்லி ரெய்டு பண்ணச் சொல்லிட்டா என்ன?'' என்று கேட்டான்.

''இல்லே வஸந்த்! ஆளு உஷாராயிடுவான். அவங்க என்ன விக்கிறாங்கன்னு முதல்லே தெரிஞ்சுக்கணும்.''

''எப்படி?''

''நாம மறுபடி அங்க போகணும்.''

''நாப்பத்தாஞ்சாயிரம் ரூபாயோடயா? என்ன விளையாடறீங்களா?''

''இல்லே, பணம் இல்லாம!''

''புரியலே.''

''வஸந்த்! இந்த மாதிரி பழைய வீடுகள் எல்லாம் பின் பக்கம் சுவர் அதிக உயரமா இருக்காது இல்ல?''

''இப்பப் புரியுது. பின்பக்கமா சந்து வழியாப் போயி சுவரேறிக் குதிச்சு உள்ளே போய்... அப்புறம் என்ன?''

''அங்க ஏதாவது மாட்டுக் கொட்டகையில் மறைஞ்சிருந்து...''

''பட்டப் பகல்லயா? யாராவது பார்த்தா முட்டியைப் பேத்துடுவாங்க.''

''பாக்காம உன்னால இதைச் செய்ய முடியும்.''

''வெய்ட் எ மினிட்! உன்னாலன்னு? நீங்க கழண்டுக்கறீங்களா?''

''ஆமாம், நான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் ஸ்டேட்மெண்ட் கொடுக்கறேன். இன்ஸ்பெக்டர் காத்துக்கிட்டிருப்பாரு. நீ என்ன பண்றே...''

''முடியாது பாஸ்! மாட்டுத் தொட்டியெல்லாம் சுவரேறிக் குதிக்க முடியாது. இந்தக் கள்ள பார்ட் வேலையெல்லாம் நம் கைல ஆவறதில்ல.''

''நான் சொல்றதை முழுக்கக் கேளு. நீ ஒண்ணும் பெரிசா ஏதும் செய்ய வேண்டாம். பின் பக்கமாப் போய்ப் பாரு. சந்து வழியா மேலேயும் கீழேயும் நட. யாரும் பார்க்காம ஏதாவது சான்ஸ் கிடைக்குதுன்னு ட்ரை பண்ணிப் பாரு. இல்லே என்னால முடியலேன்னு திரும்பி வந்துடு. உன் பலம் உனக்குத் தெரியாதுடா!''

''அய்யோ உங்களோட பெரிய ரோதனையாப் போச்சு. பேசாம மெட்றாஸ்ல இந்நேரம் ஒரு பீர் சாப்ட்டுண்டு இருப்பேன். அதுக்குப்பதிலா இங்கவந்து, சாணி மாட்டையெல்லாம்.....''

''ஜஸ்ட் ட்ரை மேன்! ஏதாவது ஆபத்துன்னு ஓடி வந்துடு.''

வஸந்த் முணகிக் கொண்டே தெரு முனையில் இறங்கிக் கொண்டான்.

பெட்டிக் கடையில் ஒரு வில்ஸ் ஃபில்டர் பற்ற வைத்துக் கொண்டான். கோயிலுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த ஒரு பாவாடை தாவணியை அதன் பின்னல் ஆடுவதை மூக்கு திரும்பும்வரை கவனித்தான். சிகரெட்டை மிதித்துவிட்டு நடந்தான். ஏரோப்ளேன் பாண்டியைக் கடந்தான். ''அம்மா பால்'' லைக் கடந்தான். குறுக்கே ஓடின சிறார்களைத் தவிர்த்துத் தெரு முனைக்கு வந்தான். பலமாக யோசித்தான்.

கணேஷுக்கு வேண்டியது என்ன? அந்தக் காகிதப் பார்சலில் என்ன வைத்திருக்கிறான்? அந்தச் சதாசிவம் என்ன விற்கிறான்? அந்தத் தகவல்தானே? அதைக் கண்டுபிடிக்க எதற்குச் சுவரேறிக் குதிக்க வேண்டும்? வேறு வழி இல்லையா? யோசி வஸந்த்!

ஆ! இப்படிச் செய்தால் என்ன?

டேய் வஸந்த்! என்ன மூளைடா உனக்கு! இந்த சிம்பிள் ஐடியா அப்பவே தெரியாமப் போச்சே! ப்ரில்லியண்ட்! சின்ன வயசில் சாப்பிட்ட காட் லிவர் ஆயில் எல்லாம் இப்பத்தான் வேலை செய்யுது!

வஸந்த் தீர்மானித்து நேராக அந்த சதாசிவத்தின் வீட்டை நோக்கி நடந்தான். முன்

# கல்கி

ஏப்ரல் 5

கோடை சிறப்பிதழ்

அதிக பக்கங்கள்.

ஸ்ரீவேணுகோபாலன் எழுதும்

சரித்திரத் தொடர்கதை—

# சுவர்ண முகி



செம்பியன்

அளிக்கும்

முழு நீள

நாவல் *

புறமாகத்தான்! மறுபடி அங்கே சென்று கதவைத் தட்டினான். பதில் இல்லை.

சற்று அழுத்தமாகத் தட்டி, ''சதாசிவம்! சதாசிவம்!'' என்று கூப்பிட்டான்.

பதில் இல்லை. ஆசாமி கொல்லைப் பக்கம் போயிருக்கானா என்ன! ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். உள்ளே நிசப்தமாக இருந்தது. ஏதோ நகர்த்தப்படும் சப்தம் கேட்டது.

''சதாசிவம்!''

ம்ஹூம்.

என்னடாது! கொல்லைப் பக்கம்தான் போயிருப்பான். கதவைச் சற்றுப் பலமாகத் தட்டலாம்.

தட்டினான். அந்த மரக் கதவு முனகலுடன் திறந்து கொண்டது. உள்ளே அடியெடுத்து வைத்தான். வஸந்தின் நடு முதுகில் குறுகுறு வென்று பூரான் ஓடியது போல் உணர்ந்தான்.

''ஹலோ! சதாசிவம்! எங்க இருக்கீங்க? வாசக் கதவைத் திறந்து வெச்சிட்டு எங்க போயிட்டீங்க?''

வஸந்த் தயக்கத்துடன் உள்ளே நடந்தான். பின்கட்டில் ஏதோ சப்தம் கேட்டது. சரிதான் அங்கேதான் இருக்கான் போலிருக்கிறது. என்ன செய்யலாம்? காத்திருக்கலாம். வந்துவிடுவான். வரட்டும், வரட்டும். வந்தவுடன் என்ன சொல்லலாம்? ''என்னங்க பணம் கொண்டு வந்தீங்களான்னு கேட்பான். ''ஓ! கொண்டு வந்திருக்கேனே'' ''எடுங்க'' ''நீங்க பொருளைக் கொண்டு வந்து மேசை மேலே வைங்க, நான் பணத்தைக் காட்டறேன். நீங்க பொருளைக் காட்டுங்க'' அவன் அதைக் கொண்டு வந்து மேசை மேலே வைப்பான். பைக்குள்ளிருந்து பணத்தை எடுப்பதுபோல் பாவித்து, சரேல் என்று சற்றும் எதிர்பாராத விதமாக 'கடான் கக்கி' கராத்தே வெட்டு. சதாசிவம் தன் தாயாரைக் கூப்பிட்டுவிட்டு அப்படியே குப்பையாக 'கரபூம்' என்று விழுந்து விடுவான். உடனே பார்சலைப் பிரித்து அதற்குள் என்ன இருக்கிறது என்று... என்னது! பிரம்ம கவசமாக இருக்கிறதே! ஆளையே காணுமே. வஸந்த் சுற்றிலும் பார்த்தான். இரண்டு கை நீட்டின

---

ஜோசியர்: பொருத்தம் பாருங்கோன்னு கொடுத்தீங்களே! ரெண்டுமே பொம்பிளைங்க ஜாதகமா இருக்கே!

வந்தவர்: கரெக்ட்! ஒண்ணு என் பெண்ணோடது இன்னொண்ணு அவ வருங்கால மாமியாரோடது. சண்டை, சச்சரவு இல்லாம இருக்குமா பாருங்க...!

வெ. சீதாராமன்



சாய்வு நாற்காலி, மீன் எம்ப்ராய்டரிபோட்டு மூடப்பட்ட ரேடியோ, அனாவசிய டெலிவிஷன் ஓரத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மூட்டைகள், உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டரின் காலாவதியான காலண்டர், கண்ணாடி பீரோ, தரையில் ஒரு செருப்பு, ஒரே ஒரு செருப்பு! வஸந்த் இப்போது கீழே தண்ணீர் கசிவதைப் பார்த்தான். ஓரத்தில் பானை உருண்டு கிடந்ததையும், அதிலிருந்து இன்னும் சொட் சொட்டையும் பார்த்தான். கண்ணாடி தம்ளர் உடைந்து சிதறி இருந்ததைப் பார்த்தான்.

''சதாசிவம்'' என்று மறுபடியும் கூப்பிட்டுப் பார்த்தான். பதில் கிடைக்காமல் மெல்ல வீட்டின் பிற்பகுதிக்குச் சென்றான். ''யாரும் இல்லையா?'' ''யாரும் இல்லையா'''

ணங் என்று நெற்றியில் இடித்தது நிலைப்படி. தேய்த்துக் கொண்டு குனிந்து கொண்டு நடந்தான். கிணறு தெரிந்தது. பின்கட்டின் வெட்டவெளி தெரிந்தது. மரத் தொட்டி. சந்துக்குச் செல்லும் கதவு திறந்திருந்தது. அதன் வாசலில் பாதியாகக் கால் தெரிந்தது. வஸந்த் திடுக்கிட்டான். சதாசிவத்தின் வேட்டி தனியாகக் கிடக்க, பட்டைபட்டை டிராயரில் படுத்திருந்த மாதிரி, பாதி உள்ளே – பாதி வெளியே அவன் கிடந்தான்.


வஸந்த் ஓடிப்போய் அவனருகில் சென்று குனிந்து ''ஓ மை காட்!'' என்றான்.

சதாசிவத்தின் கடைவாயின் ஓரத்தில் புதிய ரத்தம் இன்னும் சிந்திக்கொண்டிருந்தது. வாய் திறந்திருந்தது. ''அடபாவி! ஆள் அவுட்டா?'' வஸந்த் அவன் கையைத் தூக்கி பல்ஸ் பிடித்துப் பார்த்தான். இருப்பதாகத் தெரியவில்லை. மார்பில் காது வைத்துப் பார்த்தான். ஒரு மைல் தூரத்தில் இதயம் கேட்டது. ''அய்யய்யோ! இப்ப என்ன செய்வேன்'' சதாசிவத்தின் முகம் முழுதும் வீங்கியிருந்தது. அங்கங்கே கன்னிப் போயிருந்தது. பல்லோ ஏதோ எகிறிப்போயிருக்க வேண்டும். ரத்தத்தின் வெற்றிலை பாக்குப் போட்டாற் போல இன்னும் சிந்திக் கொண்டிருந்தான். ''சதாசிவம் யோவ்! சதாசிவம் என்னய்யா ஆச்சு உனக்கு? போய்ட்டியா?'' பதில் சொல்லக் கூடிய நிலையில் இல்லை. தூக்கலாமா! என்ன எழவுடா இது, சரியான சமயம் பார்த்து பால் கழண்டுட்டார். நம்ம கைல பாடியை ஒப்படைச்சுட்டு என்ன இது! இந்தக் கேஸை ஆரம்பிச்சதிலிருந்தே மூலைக்கு மூலை.... இது என்ன? கீழே ஏதோ கறுப்பாக இருந்தது. எடுத்துப் பார்த்தான். இன்ச் அகலத்துக்குப் பாசி பிடித்தாற் போல் கரும் பச்சையாக... என்ன என்று பார்க்க நேரமில்லை. பைக்குள் போட்டுக் கொண்டான்.

வெளியே ஓடிவந்தான். ரேஸின் கைவண்டிக்குப் பின் சிலர் துரத்திக் கொண்டிருந்தார்கள். ''யோவ்! வாங்கய்யா! வாங்கய்யா ஆளு அடிபட்டிருக்காரு.''

''எங்க எங்க?''

அவர்களில் சிலரைச் சேகரித்துக் கொண்டு உள்ளே ஓடினான் வஸந்த். (தொடரும்)




சாதாரண தேங்காய் எண்ணெயைக் காட்டிலும் உங்கள் கூந்தல் வளர்ச்சிக்குகந்தது எது?

# கேசவர்த்தினி

கலந்த தேங்காய் எண்ணெ!




ஆம்! நீங்கள் அன்றாடம் உபயோகிக்கும் தேங்காய் எண்ணெயுடன் சிறிது (சில சொட்டுகள்) கேசவர்த்தினி கலந்து தலையில் தடவிக்கொள்ளுங்கள். உங்கள் கூந்தல் எழில் மிளிர காண்பீர்கள்.

அழகிய அடர்த்தியான கூந்தலின் பரம்பரை ரகசியம் — கேசவர்த்தினி. ஒரு பாட்டில் இன்றே வாங்குங்கள்.




கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ்

சென்னை-600 087

OBM 6119 TM

ஸ்தாபிதம் : 1942 | **லலிதா பார்மஸி** | போன் : 123

## லலிதா பார்மஸி

### கும்பகோணம்

DRUG LICENCE No. 40 / 78

மத்திய அரசால் சட்டத் தொகைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது

எமது விசேஷத் தயாரிப்புகள் :

**ச்வாஸாசயத்திற்கு பலமூட்டவும், சரீர எடையை அதிகரிக்கவும்**

1. **ச்யவனப்ராசம்**
2. **காந்த பஸ்பம்**
3. **அயஸ்ஸிந்தூரம்**
4. **அச்வகந்தி தைலம்**

மேற்கண்ட எமது கிராஞ்சுகளிலும் கிடைக்கும்

1. லலிதா பார்மஸி, 52, மஹாதானத் தெரு, மாயூரம், போன் : 379
2. லலிதா பார்மஸி, 81, வடக்கு ரத வீதி, சிதம்பரம்
3. லலிதா பார்மஸி, 6, ரெங்கநாதன் தெரு, தியாகராயநகர், சென்னை - 600 017, போன் : 441454
4. லலிதா பார்மஸி, 60-B, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை - 600 004, போன் : 73007

மற்றும் சிறந்த ஆயுர்வேத மருந்துகள் யாவும் கிடைக்கும்.

---



Dr. S. R. சிவராஜ்

**வாலிபர்கள் !** **மணமானவர்கள் !!**

வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பலஹீனங்களை நீக்கி,
தாம்பத்திய வாழ்வை இன்பமுடன் அனுபவித்து மகிழ,
இன்றே புகழ் பெற்ற 'ரகசிய வியாதி நிபுணர்'
ஆண்மைக் குறைவு நீக்கும் 'அரிய வைத்திய மேதை'

## 'கவிராஜ்' டாக்டர் S. R. சிவராஜ், R.I.M.P.

*அவர்களிடம் சிறந்த முறையில் சிகிச்சை பெற, அவர் சுற்றுப்பயண முகாம்களில் நேரில் சந்தித்து வாழ்வில் மகிழ்ச்சி காணுங்கள். நேரில் சந்திக்க முடியாதவர்கள், குறைகளை விபரமாகத் தலைமை அலுவலகத்துக்கு எழுதவும். (கடிதங்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்.) மருந்துகள் விரிவான விளக்கங்களுடன் வி.பி.பி. மூலம் அனுப்பி வைக்கப்படும்.*

❋ **குழந்தை பாக்கியம் (கர்ப்ப அணுக்கள்) இல்லாதவர்கள்**
❋ **கல்யாணமாகி பல ஆண்டுகளாகக் குழந்தை பாக்கியமே இல்லாதவர்கள்**

*சிறந்த முறையில் சிகிச்சை பெற்று, கர்ப்ப அணுக்கள் தேவையான அளவு உற்பத்தியாகி குழந்தை பாக்கியம் பெற்று மகிழ்ச்சியடையும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். 25 வருட சுற்றுப் பயணத்தில், அவரிடம் சிகிச்சை பெற்றுப் பலன் அடைந்தவர்கள் பல்லாயிரம் பேர்கள். அவர்களைப் போல் நீங்களும் பலன் அடைய வேண்டுமல்லவா?*

**விரைவில் பலன் காண விசேஷ 1 மாத சிகிச்சை ★ குறைந்த ஸ்பெஷல் 1 மாத சிகிச்சை**

| A-வகுப்பு | B-வகுப்பு | C-வகுப்பு | மீடியம் | ஸ்பெஷல் | 1-ம் நெம்பர் | நேரில் பெறலாம் |
|---|---|---|---|---|---|---|
| ரூ. 350-00 | 250-00 | 175-00 | 115-00 | 90-00 | 75-00 | V.P.P.யிலும் பெறலாம் |

தலைமை அலுவலகம் :

## சிவராஜ் சித்த வைத்தியசாலை

**C-56, தமிழ்ச் சங்கம் ரோட் பின்புறம்**

*(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுறமுள்ள ஏரியின் முன் பக்கம்)*

**காந்தி ஸ்டேடியம் – சேலம்-636007**

---

## ஸ்ரீ காஞ்சி காமாட்சி அம்மனுக்கு தங்க விமானம்

நம்ப முடியாத அளவுக்கு தங்கத்தின் விலையேற்றத்திலும் ஸ்ரீ காமாட்சி அம்மனுக்கு தங்க விமான அமைப்புத் திருப்பணி நடைபெற்று வருகிறது.

இத்திருப்பணி துரிதமாக நடந்து அன்னையின் விமானத்தில் தங்கம் ஜொலிக்க நாம் காரணராக, பக்தர்களான நாம் நிறைய காணிக்கைகளை அள்ளிக் கொடுத்து உதவ வேண்டும். ரூ. 25/- காணிக்கை அளிக்கும் ஒவ்வொரு பக்தருக்கும் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீச்வரர் ஸ்ரீ **சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்** அவர்களின் அரிய படம் ஒன்றும் ரூ. 101/- கொடுக்கும் ஒவ்வொரு பக்தருக்கும் பிரேம் போட்டு பெற்ற அத்தகைய படம் ஒன்றும் கொடுக்கப்படும்.

இதைக் காண்போர் இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்தி அன்னை அருளைப் பெறுவதோடல்லாமல் அவரவர் நண்பர்களுக்கும் இதைப்பற்றி தெரிவித்து அவர்களும் அருள் பெற உதவ வேண்டும்.

படங்கள் மேற்கண்ட விலாசங்களில் கிடைக்கும்

**50, வெங்கடாசல செட்டி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005**

**114, ராமகிருஷ்ண மடம் சாலை, சென்னை - 600 028**




# மணியோசை

— ஜாக்கி

ஹோட்டல் அறையில் நிம்மதியாகத் தூங்க முயன்றபோது இரு முறை கதவு மணி அடித்துப் புன்முறுவலுடன் ஹோட்டல் சிப்பந்தி பிரசன்னமானான். 'கூப்பிடவில்லையே, இவன் ஏன் வந்து வந்து கழுத்தை அறுக்கிறான்?' என்று திகைத்தபோது, கட்டிலருகில் சுவரில் பதித்து வைத்துள்ள 'பியானோ கீ' ஸ்விட்சின் ஏழு கட்டைகளில் ஒன்று கூப்பிடு மணி ஓசையை எழுப்பும் தன்மை படைத்த காலிங் பெல் என்று புரிந்து கொண்டேன். புன்முறுவலுடன் பிரசன்னமானவனின் சந்தேகத்தை நிவர்த்தி செய்து வழியனுப்பினேன்!

விளக்கை அணைத்தோமா, ஏற்றினோமா, ஃபேனைப் போட்டோமா என்று குழப்பத்தில் ஆழ்த்த இந்த ஸ்விட்ச் முறை என்னவேண்டியிருக்கிறது? சம்பிரதாய முறை கொக்கி ஸ்விட்சைக் கைவிட்டது நாம் செய்த பெரும் தவறுகளில் ஒன்று! விளக்கு அணைந்திருக்கும் போது அவசரத்துக்கு ஒரு சட்டையைத் தொங்க விட உதவியது! 'துக்கினியூண்டு' 'ஸ்விட்ச்மீது பல்ப், மின்விசிறி, மணி போன்ற வடிவங்கள் இருட்டில் யாருக்குத் தெரிகிறது? ஸ்விட்சின் இருப்பிடத்தையே தடவிக் கண்டு பிடிக்க வேண்டியிருக்கிறது. இந்த ஆர்மோனிய ஸ்விட்ச் கட்டைகளை சரிகமப வரிசையில் ஒரே பலகையில்தான் பொருத்த வேண்டுமா என்ன? தனித் தனியாகப் புரியும்படியாக வைத்தால் எந்தக் குடி மூழ்கிப் போய்விடும்?

தொலை பேசி மணி அலறும். வெளியே யாரோ கூப்பிடுகிறார் என்று கதவைத் திறப்போம். ஆள் யாரும் இருக்காது. தொலை பேசி தொடர்ந்து அலறிக் கொண்டிருக்கும். விளக்கைப் போட ஸ்விட்சை அழுத்துவோம். மின்விசிறி நின்றுவிடும். மின்விசிறியைச் சுற்றவைக்க முயன்றால் மறுபடியும் மணி ஒலிக்கும்.

வீடு கட்டும்போது இந்த ஆர்மோனிய கட்டை ஸ்விட்சை அறைக்கு அறை வரிசை வரிசையாக வைத்தால்தானே ஒரு அலங்காரம்! தவிர பஸ்ஸர், பார்க்லர் (திருடர் வரவைத் தெரிவிக்க) அலாரம் என்று நவீன முறை ஒலியெழுப்பிகள் வேறு. நிம்மதியான தூக்கத்துக்குச் சோதனை விளைவிக்கும் மணியோசைக் கருவிகள் இவை! வருகைதரும் பால்காரர், தபால்காரர், அழையாத விருந்தாளி, கடன் வாங்க, வசூலிக்க வரும் நபர்கள் . என ஒவ்வொருவரையும் அடையாளம் காட்டத் தனித் தனி அடையாளக் குறிகளுடன் ஸ்விட்ச் கட்டை வகைகளை வெளியே பொருத்தி விட்டால் மணி ஓசைகளிலும் வித்தியாசம் புகுந்து விட்டால் உள்ளிருப்பவர்களுக்குத் தக்க பந்தோபஸ்துடன் வெளி வந்து வரவேற்க உதவியாக இருக்கும்!

மணியோசைக்கு ஒரு சரித்திர–வரலாறு உண்டு. யானை வருவதை முன்கூட்டியே அறிய உதவும்! எலிகளுக்குப் பூனை வருவதை அறிய யார் மணியைக் கழுத்தில் கட்டுவது என்று எழுந்த பிரச்னை எல். கே. ஜி. குழந்தைகளுக்கும் நமக்கும் தெரியும்! இழந்த கன்றின் சோகக் கதையை மனு நீதி மன்ன

னுக்கு எடுத்துரைக்க ஆராய்ச்சி மணி பயன்பட வில்லையா கன்றின் தாய்க்கு? கோவில், சர்ச் ஆகியவற்றில் பிரார்த்தனை நேரங்களை வரையறுத்து இன்றும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன தேவனின் ஆலய மணிகள். வீட்டின் பூஜை அறைக்குக் கையடக்கமான நந்தி உருவத்துடன் ஒரு மணி உண்டு. அதை யொலிக்கப் பக்தி சிரத்தையுடைய குழந்தைகளுக்குள் ஒரு போட்டி எழும். கைகள் மாறி ஆட்டி ஆட்டி மணியின் நாக்கே வெளிவந்து விழுந்துவிடும்!

ஆபீஸில் பியூனைக் கூப்பிட, லிஃப்டை வரவழைக்க, ரயில் நிலையத்தில் புகைவண்டி வருகையை அறிவிக்க, இளம்புவதைத் தெரிவிக்க, சிறையில் உணவு தயார் என்று கைதிகளுக்கு உணர்த்த எல்லாவற்றுக்கும் மணி தான். ஆடு மாடு மேயும்போது கழுத்து மணிகள் எழுப்பும் ஒலி அலாதி இன்பம் தரும். அதைவிட மகிழ்ச்சி அளிப்பது பள்ளிக்கூட, கல்லூரி முடிவு நேரத்தைக் குறிக்கும் மணி ஓசை.

ரசிகப் பெருமக்களை உசுப்பி, உஷார்படுத்த வெளியே வெற்றிலை பாக்கு, சிகரெட்டுடன் அசிரத்தையாக உலவிக் கொண்டிருக்கும் அரட்டைக் கும்பலை சர்க்க நாடக, சினிமா அரங்குகளில் மணியோசைக்கு மகத்துவம் உண்டு. நல்லது பொல்லாதது இரண்டுக்கும் மணியோசை தேவைப்படும். தீப்பற்றிக் கொண்டால் தீப்படை வாகனம் விரைந்துசெல்ல மணியோசை வழியமைத்துக் கொடுக்கும். மறைந்த ஆத்மாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்த சங்கு முழக்கத்துடன் ஒலிப்பது ஒருவகை மணி. மேடைப் பிரசங்கங்களில் மிரட்டலுக்குப் பயன்படுவது ''சாவு மணி'' என்ற சொல்.

இதை எழுதிக் கொண்டிருக்கும் போதே ஒரு மணி ஓசை கேட்கிறது. காலிங் பெல்லா, தொலைபேசியில் ராங் நம்பரா, பக்கத்து வீட்டு சுப்பிரமணியா என்று தெரியவில்லை. யாருமில்லை. காலை ஐந்து மணிக்கு எழுப்ப வைத்த அலாரம் டைம்பீஸ் நிதானமாக ஓடி (நடந்து) நினைவு தடுமாறி, ஏழு மணிக்கு ஒலிக்கிறது அவ்வளவுதான்!

எந்த மணி எப்படியாவது போகட்டும். ஆங்கில 'மணி' தேவையான அளவு கைக்கு வந்து சேர்ந்தால் சரி, அதுதான் என் கண் மணி!



# இன்சாப் - கா தராசு

**படம் பார்ப்பதற்கு முன் எதிர்பார்ப்புகள்:**

ஜீனத் அ(ம்)மன்: வழக்கம்போல் நடிப்பதைத் தவிர எல்லாம் செய்து காட்டுபவர்.
ராஜ் பாபர்: அறிமுக நடிகர். அதற்குள் நம்மூர் ரத்தியுடன் கிசுகிசுவாகிப் பிரபலமான பேர்வழி.
பத்மினி கோலாபூரி: பிரிட்டிஷ் இளவரசர் சார்லஸுக்குப் பரபரப்பான முத்தம் கொடுத்த வீராங்கனை.
ஸோ சுவாரஸ்யமாய் 'ஏதாவது' எதிர் 'பார்க்கலாம்'.

**படம் பார்த்தபின் எண்ணங்கள்:**

சண்டைகள், கார் துரத்தல்கள் இல்லாமல் இப்படம் வெற்றி பெற்றுள்ளது — நம்பிக்கை தருகிறது.
இன்னொரு சட்டம் ஒரு இருட்டறை. காதலன்-காதலி. மூன்றுமவன் ஒருவன் அந்தக் காதலியை விரும்பி அவளைக் கற்பழித்து விடுகிறான்.
கோர்ட்டில் அவனுடைய கிரிமினல் மூளை வக்கீலின் வாதத்திறமையால் தண்டனையிலிருந்து தப்புகிறான்.
ருசி கண்ட அவன் தொடர்ந்து அவளின் தங்கையையும் ஒருகை பார்க்க, அக்கா துணிந்து அவனுக்கு முடிவு வழங்குகிறாள். சட்டம் விழித்து அவளை மன்னிக்கிறது.
ஸ்லோவாக ஆரம்பித்து சூடு பிடிக்கிறது படம்.
ராஜ் பாபர் விஷயமுள்ளவர்தான். பத்மினி கோலாபூரி விஷயமுள்ளவர்தான். ஜீனத்கூட விஷயமுள்ளவர் தான். இருந்தாலும் நடிப்பில் பரிசைத் தட்டிச் செல்பவர் ராஜ்பாபரின் வக்கீல். யதார்த்தமான ஹீரோ - கம் - வில்லன் ராஜ்பாபர் புதுவிதமான இரண்டு பலவந்தங்களை ஆற அமர ரஸித்துச் செய்கிறார். ரஸிக்கச் செய்கிறார்.
படத்தில் பாதிக்கு மேல் கோர்ட் சீனே வந்தாலும் போரடிக்காமல் இருப்பது டைரக்டரின் திறமையால். தராசு ஆரம்பத்தில் ஒரு பக்கமாய் ஊசலாடினாலும் கடைசியில் நடுநிலைமையாகி நீதியை நிலைநாட்டுகிறது.

— நளினி சாஸ்திரி




**இது ஒன்றே 30% அதிக ஒளிதரும் பால் வெண்மையான பல்பு.**

PEL-5720-R

## தேவையான இடத்திலே ஒளி

புதிய ஆர்ஜென்டா ஸூப்பர்லக்ஸ் வீட்டின் கூரை மேலே சிதறி வீணாகும் ஒளியையெல்லாம் திரட்டிக் கீழ்நோக்கி, உங்களுக்குத் தேவையான இடத்தில் பாயச்செய்யும் வகையில் உருவாக்கப்பட்டது. எனவே 30% அதிக ஒளி கிடைக்கிறது. (வீட்டின் உட்கூரை மேலே ஒளி வீணாவதில்லை) பல்பின் கீழ் பாகம், ஒளி நன்கு ஊடுருவும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளதால், செறிவான ஒளியையெல்லாம் குவித்துச் சீராகக் கீழ்நோக்கிப் பாயச்செய்கிறது. எனவே, நேர்த்தியான, துல்லியமான வேலைகளுக்கு—படித்தல், எழுதுதல் ஆகிய வேலைகளைச் செய்ய மிகவும் ஆதர்சமானது ஆர்ஜென்டா ஸூப்பர்லக்ஸ். நிழலும் ஏற்படுத்துவதில்லை. ஆர்ஜென்டா ஸூப்பர்லக்ஸ். புதிய தொழில்திறம். பொங்கும் ஒளி வெள்ளம்.

PHILIPS

அளவான மின்னலகில், அதிக ஒளிவெள்ளம்.

**பிலிப்ஸ்**

பீகோ எலெக்ட்ரானிக்ஸ் அண்ட் எலெக்ட்ரிகல்ஸ் லி.

## 19

சீமங்களா அவனுடன் மனம் விட்டுப் பேசத் தனிமையை நாடி வந்தவுடன், அவன் தன் திட்டத்தின் முதல் கட்ட வெற்றியின் கதவுகளைத் தானே திறந்து கொண்டு பிரவேசிப்பதாகவே புளகாங்கிதப்பட்டுக் கொண்டான்.

அவனுடைய முகத்திலிருந்து, அவன் உள்ளத்துள் ஓடும் குரூர தெளிவு களிவுகளை அவளும் உணர்ந்து கொள்ளத் தவறவில்லை.

அவள் பேச்சு அன்று அவனுக்கு வந்த விவாக ரத்துக்கான நோட்டீஸ் பற்றியே இருந்தது.

அவனுடைய உள்ளத்துள் இடம் பெற வேண்டுமானால் தானும் ஏதேனும் மனம் விட்டுப் பேச வேண்டும், பேசுவது போலப் பாவனை காட்டவேண்டும் என்கிற முடிவுடன் பரமேஸ்வரனைப் பற்றின சில குறைபாடுகளை அவள் மனம் திருப்தியடையும்படி பேசினான்.

''எனக்கு நீங்கள் நிச்சயமாக உதவுவீர்களா?''

''மனப்பூர்வமாக உதவுவேன். ஏனெனில் என்னையும் நான் தற்காத்துக் கொண்டேயாக வேண்டும்.!''

''அதற்குரிய சரியான வழி...?''

''பணத்துக்குப் பரமேஸ்வரன் ஆசைப் பட்டே அம்பிகாவை மணக்கும் முடிவுக்கு வந்திருக்கிறான். இனி என்னதான் செய்தாலும் அவனைத் தடுக்க முடியாது. ஆகவே அவன் வழியில் அவனைப் போக விட்டுவிட்டு ஒதுங்குவதுதான் நல்லது. இப்பொழுது அவனாக ஒரு வழியைத் திறந்து விட்டிருக்கிறான். அதன் வழியே இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வெளியே ஓடிவந்து விடுங்கள். அப்படி வந்தால்தான் நமது வருங்காலத் திட்டம் சரியாக நிறைவேறும்.''

அவனுடைய உள் மனத்தின் சபலங்கள் இன்னதென் ஒவ்வொன்றாக அவள் குறித்துக் கொண்டாள்.

''பரமேஸ்வரன் உங்கள் மீதும் ஓர் அபவாதத்தைத் திணித்திருக்கிறாரே, அவர்மேல் உங்களுக்குக் கோபமில்லையா?''

''அசாத்தியமான கோபம் இருக்கிறது.''

''இதற்காக அவரை நீங்கள் தண்டிக்க வேண்டாமா?''

''தண்டிக்க வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?''

''என்னை விடுங்கள். உங்களுக்கு ரோஷம் வேண்டாமா?''

''எல்லாம் உனக்காகத்தான் பொறுத்துக் கொண்டிருக்கிறேன்.''

அவளை ஒருமையில் அழைக்க ஆரம்பித்து விட்டான். அதன் குழைவையும், நெருங்கி வரத் துடிக்கின்ற தன்மையையும் கண்களே காட்டிக் கொடுத்தன.

''அவர் என்னை விவாகரத்து செய்வது சுலபமாக இருக்கலாம். ஆனால் அதன் பின் விளைவுகள் பற்றி அவருக்குத் தெரியாது. நீ உதவா விட்டாலும் பரவாயில்லை. நான் அவரிடமிருந்து விடுதலை பெறத் தயார். ஆனால் சுலபமாக அப்படி வந்து விடமாட்டேன். இந்த இடத்தில்தான் நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். உனக்கு அவரைப் பற்றி ஒன்றும் தெரியாதுதானே!''

''சத்தியமாகத் தெரியாது! அன்று ஒரு நாள் கடைக்கு வந்தாரே அப்பொழுதுதான் தெரியும்.''

''சரி! நீ வசதி படைத்தவனா?''

''ஐயோ! நான் ஒரு பரம ஏழை! இந்த லாண்டரியை விட்டால் வேறு போக்கிடமின்றிச் சோற்றுக்கு ஆலாய்ப் பறக்கணும். ஒரு வேலை தேடினேன். என் படிப்புக்கும் அந்தஸ்துக்கும் இந்த வேலை பொருந்தியிருந்தது. ஆறேழு வருஷமாக இதிலேயே இருக்கேன்... ஒரு பைசாகூட சேர்க்க முடியவில்லை.''

''பரமேஸ்வரனின் சொத்து மதிப்பு எவ்வளவு இருக்கும் தெரியுமா?''

''எனக்குத் தெரிந்த வரை ஐந்து லட்சத்துக்குக் குறையாது. பழவந்தாங்கலில் ஒரு சின்ன பங்களா இருந்தது. அதை மிகவும் அவசரமாக விற்றுக் கேஷ் பண்ணிட்டார். அந்தப் பங்களாவை எவ்வளவுதான் குறைந்த விலைக்கு விற்றிருந்தாலும் இரண்டரை லட்சத்துக்குத் தேறும். அதைத் தவிரச் சென்னையில் சில கட்டிடங்களைக் கட்டி, கடை வாடகைக்கு விட்டிருந்தார். அவைகளை ஒன்னரை லட்சத்துக்கு விற்றிருக்கிறார்.''

# விட்டில் அணைத்த விளக்கு

**மகரிஷி**

''இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?''

''எனக்கா?'' — அவன் கேள்விக் குறியாய் அவளைக் கவனித்தான்.

அவள் வாய் விட்டுச் சிரித்தாள்.

''சண்டைக்கென்று கோதாவில் இறங்கும் போது கண்மண் தெரியாமல் இறங்கிவிடக் கூடாது. சுகுமாரன் ஸார்! நாமும் தயார் செய்து கொண்டு இறங்க வேண்டும். எதிரி

யின் பலத்தை நாம் சமாளிக்கிறேமோ இல்லையோ... ஆனால், குறைந்த பட்சம் தெரிந்து வைத்துக் கொள்ளவாவது வேண்டாமா? பாவம் நீ! என் மேல் உயிரையே வைத்திருக்கிறாய். அளவற்ற அன்பும் பாசமும் வைத்திருக்கிறாய். உன்னுடைய முடிவு வேறு மாதிரியாக எனக்கு நிரந்தரமாக உதவ-வேண்டுமென்று கூட இருக்கலாம். பிற்பட்டு நாம் இருவரும் போடும் ஒரு திட்டம் உருவாகலாம். இதற்குப் பணம் வேண்டாமா?''

அவன் இப்படிப் பேசியதும் சுகுமாரன் அப்படியே மயங்கிப்போய் உட்கார்ந்திருந்தான்.

''சொல்லு. நாமாக அவரிடம் விவாகரத்துக் கோரவில்லை. நமக்குத் தெரியும் நாம் இருவரும் நிரபராதிகள் என்று. நம்மை வேண்டுமென்றே பிணைத்து அவர், வம்புக்கு இழுக்கிறார். நாம் அவரைச் சும்மா விடலாமா? அப்படியே அவர் விருப்பப்படி நான் அவரிடமிருந்து பிரிந்து வந்தாலும் வெறுங் கையுடன் உன்னுடன் வரமுடியுமா?''

''சுமங்களா!''

''நான் சொல்வது நியாயமா இல்லையா?''

''அவர் எல்லாச் சொத்துக்களையும் விற்றுப் பணமாக்கிப் பேங்கில் போட்டிருக்க வேண்டும். அல்லது யாரிடமேனும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அதில் பாதியையாவது கறந்தாக வேண்டும். ஜீவனாம்சமாக வாங்க வேண்டும். அப்படியில்லாமல் இதை ஏற்கவே முடியாது. அவர் ஒரு கணிசமான தொகையைத் தந்தேயாக வேண்டும். அந்தத் தொகை நமது பிற்கால வாழ்வுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். இதுதான் என் திட்டம். இதற்கு நீ ஒத்துழைத்தால் நாம் மேற்கொண்டு பேசலாம். இல்லையேல் இதை இப்படியே விட்டுவிடலாம்.''

அவன் எழுந்து விட்டான்.

''சுமங்களா... உட்கார். நீ என்னைத் தீவிரமாகச் சிந்திக்க வைத்து விட்டாய்'' — அவன் இரண்டாவது தடவையாக அவளை ஒருமையில் அழைத்ததையும் அவள் குறித்து வைத்துக் கொண்டாள். மிக நெருக்கமாக அவளிடம் வரத் துடித்தவனாகக் காணப்பட்டான். வேகம். அந்த வேகத்தையெல்





அருள்வாக்கு

## நன்றி கெடாத ஊண்

நாம் செய்யும் உபசாரங்களுக்கும் நாம் மனமறிந்து செய்யும் அபசாரங்களுக்கும் உண்டி கிட்டுவது கூட அவனுடைய கருணை ஒன்றாலேயே என்பது நாம் ஆலோசித்தால் நமது மனச்சாட்சிக்குத் தெரியும். அவர் கொடுத்த பொருட்களை அவருடைய நினைவே யின்றி நாம் சாப்பிட்டுவிட்டு, கெட்ட வழியிலும் அனுபவித்துவிட்டு, இவ்வுலகிலிருந்து ஒரு நாள் மாய்ந்து போவதில் ஒரு லட்சியமும் நிறைவேறவில்லை. நமது வாழ்க்கையே வாழ்க்கையுடன் சேர்ந்ததில்லை. ''பேசாத நாளெல்லாம் பிறவா நாளே!'' ''இருவிழி மிழலையானைச் சேராதார் தீதருக்கே சேருகின்றார்''. நம்மால் செய்ய முடியாமல், நம் சக்திக்கு மீறின ஒரு சக்தியால் ஆக்கப்பட்ட பொருள்களை அப்பராசக்தியாம் அம்மையப்பனுக்கு அர்ப்பணம் செய்யாமல், நாம் தின்றுவிட்டுச் சாதல், பெரும் நன்றியற்ற செயலாகும். அவர் கொடுத்தபொருளை அவருக்கு நன்றியுடன் அர்ப்பணம் செய்துவிட்டு அவைகளை அனுபவிக்க, அந்த நன்றி ஊறி, மனிதத் தன்மைக்கு அறிகுறியான அமிர்தமாய் ஆறாய்ப் பரவி உலகமும் உலகத்தில் வளரும் பொருள்களும் ஆன்ம கோடிகளும் பன்மடங்கு செழிக்கத் துணையாய் நிற்கும். அந்த நன்றிக்குப் பூஜை என்று பெயர்.

நாம் உடுக்கிறோம். ஒரு சிறு ஆடையைச் சுத்தமாய் அவருக்கு அர்ப்பணம் பண்ணிவிட்டு உடுத்தால், உடைப் பஞ்சம் குன்றிவிடும். நாம் புசிப்பதற்கு முன் அவருக்கு நிவேதனம் செய்துவிட்டு உண்டோமானால் அதுவே நன்மைக்கான ஊண். நன்றி கெடாத ஊண்.

— ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

லாம் அவன் வெகு சாமர்த்தியமாக ஒரு அணை கட்டித் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தான்.

''நீ சிந்திக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை.''

''ஆமாம்... சுமங்களா... உன் வாதத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதன் பேரில் ஒரு முடிவெடுக்கிறேன். 'இதை முடிவு செய்யாமல் நான் கோர்ட்டுக்கு வர மாட்டேன்.''

''அவர்தான் மற்றொரு லட்சாதிபதியின் மகளை மணக்கப் போகிறாரே இதில் ஏற்கெனவே உள்ளதில் எனக்குப் பாதி தருவதில் அவர் அப்படி யொன்றும் ஏழையாகி விடப் போவதில்லை.''

''ஆமாம். நீ சொல்வது உண்மைதான். அட்வகேட் சந்தானத்தை எனக்கு நன்றாகத் தெரியும். நகரத்தில் ஒரு லீடிங் கிரிமினல் அண்ட் சிவில் லாயர். அவர் அப்பியராகிறார் என்றாலே போதும்... பயந்து கொண்டு சமாதானத்துக்கு வந்து விடுவார்கள்.''

''அட்வகேட் சந்தானமா?''

''ஆமாம்...''

''நீ முடிவு செய்து விட்டாயா?''

''பிரச்னைகள் என்னை ஒரு முடிவை நோக்கித் தள்ளும்போது நான் அதை எதிர்கொள்ளாமல் சும்மா இருக்க முடியுமா? அவ்வளவு சுலபமாக அவரை நான் விடுவதாக இல்லை. அவர் செய்திருக்கிற பல கிரிமினல் குற்றங்கள் எனக்குத் தெரியும். பழைய மாம்பலத்தில் இவரால் ஏற்பட்ட ஒரு சச்சரவில் ஒரு கொலையே மறைக்கப் பட்டிருக்கிறது. நான் அதைக் கிளப்பப் போகிறேன். அம்பிகாவைக் காதலித்துக் கொண்டே மற்றொரு பெண்ணைச் சினிமாவில் சேர்த்து விடுவதாகக் கூறி அவளையும் பாழடித்திருக்கிறார். அவள் இப்பொழுது எந்த மருந்தைச் சாப்பிட்டுவிட்டு எந்த மருத்துவ மனையில் படுத்திருக்கிறாள் என்றும் எனக்குத் தெரியும். கோர்ட் என்று போனால் எல்லாம் வெளியே கொண்டு வருவேன். அது என்னால் முடியும். எனக்கு இன்னொன்றும் தெரியும். பரமேஸ்வரனுக்கு ஒரு நண்பன் இருக்கிறான். அவனுடைய யோசனையின்றி அவர் எதையும் செய்வதில்லை. இன்னும் அந்த ஆள் மட்டும் யாரென்று எனக்குத் தெரியவில்லை.''

எங்கும் மெல்லிய அஸ்தமனத்தில் திரை கவிழ்ந்து கொண்டிருந்தது. ரஸ்தாவில் விளக்குகள் எரியத் துவங்கின. பரபரப்பான ஜனநடமாட்டம் குறையத் தொடங்கியது. எனினும் வாகனப் போக்குவரத்தின் சுறுசுறுப்புக் குறைந்தபாடில்லை.

தன் முகத்தில் அரும்பிய வியர்வையைச் சுகுமாரன் அவசரம் அவசரமாக ஒத்தித் துடைத்துக் கொண்டான்.

'யார் இவள்! ஒரு சம்பவம் கூட விடாமல் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறாளே! இவ்வளவு ரகசியங்களை இவளுக்கு யார் சொல்லியிருப்பார்கள்! எப்படி இவைகளைச் சேகரித்திருப்பாள்? பரமேஸ்வரனின் நண்பன் ஒருவன் இருக்கிறான்... அவன் சொல்படிதான் கேட்கிறான்... என்கிற வரை தெரிந்துகொண்டிருக்கிறாளே! ஒருவேளை என்னையும் இவளுக்குத் தெரியுமோ? தெரிந்து வைத்துக் கொண்டுதான் இப்படித் தெரியாதவள் போல் நடிக்கிறாளோ?' — அவன் 'அலர்ட்'டாகி விட்டான்.

அவளிடம் நடிக்க வேண்டும் என்று ஆரம்பித்தவன் ஒரு தோல்வியைத் தழுவிக்கொள்கிற நிலையில், இன்னும் அதிகம் பேசினால் வம்பு என்கிற தற்காப்புடன் மௌனமாகி விட்டான். எது எப்படியாயினும் இவ

ளுடைய இளமையைத் தனதாக்கிக் கொள்ளத் தான் போட்டிருக்கும் திட்டத்தை மட்டும் மாற்றிக் கொள்ள கூடாது என்கிற பிசாசுத்தனம் அவனுடைய கண்களை மறைத்து, ஒரு மோகினியாய் அவனை உள்ளுக்குள் ஆலிங்கனித்துக் கொண்டிருந்தது. இவள் நடிக்கிறாளோ என்ற சந்தேகம் உள்ளத்துள் தலைகாட்டியபோதும்... தானே இறுதி வெற்றியை அடை.யப் போகிறவன் என்கிற அசட்டுத்தனமான துணிச்சல் அவனை ஆக்கிரமித்தது.

சமங்களா எழுந்தாள்.

சுகுமாரனும் எழுந்தான்.

என்னதான் துணிவு இருந்த போதிலும் திடீரென்று தான் வலுவிழந்து விட்டதான தடுமாற்றம். அவன் எழுந்து நிற்கையில் அப்படி ஒரு பிரமை. அவளுடைய அடிமை போலத் தன்னை எண்ணத் தொடங்கிவிட்டது மனம். 'பரமேஸ்வரன் பணத்தாலும் அடாவடித்தனத்தாலும் பலமுள்ளவன் போலத் தோன்றினாலும் இவள் அவனை விட உள்ளும் புறமும் சக்தி வாய்ந்தவளாகத் தெரிகிறாளே! எல்லா சக்திகளையும் கட்டுப்பாடாக வைத்துக் கொண்டு ஒரே சமயத்தில் ஒரே அழுத்தாக அழுத்தி ஆளைச் சாய்க்கிற மாதிரி இவளிடம் ஏதோ பின் பலம் ஒளிந்து கொண்டிருக்கிறது. அந்தப் பின்பலம் பிறரை நினைத்த மாத்திரத்தில் பலவீனப்படுத்திவிடும் பலம்' என்று எண்ணிக் கொண்டான்.

உண்மையில் சமங்களாவிடம் அப்படிப்பட்ட பலம் ஏதும் இல்லைதான். ஆபத்தான நேரங்களில் அப்பாவிகளைக் காப்பாற்ற இறைவன் கொடுத்திருக்கின்ற மின்வெட்டான யோசனைகள்தான் அவளுள் தானாக முளைவிட்டன. எதிர்ப்பு வலுக்க வலுக்க அவளுடைய ஆத்ம பலமானது கம்பீரமாக எழுந்து நின்று ஆயுதம் தரித்துக் கொண்டது. அந்த ஆயுதங்களும் எழுச்சியும் ஒரு பெண்ணிடம் இயற்கையாகவே வந்து குவிந்துவிடுகிற இயல்புகள்.

அவள் அதன் பின் ஒன்றும் பேசவில்லை. மௌனமாக அவனுடன் நடந்து நடைபாதைக்கு வந்தாள். சுகுமாரனும் மௌனமாகவே நடந்தான்.

இன்னும் இரண்டே நாட்களில் பரமேஸ்வரனுடைய மூல பலத்தைத் தான் கண்டுபிடித்து விடக் கூடும் என்று அவள் அவனிடம் கூறும்போது சாலையின் எதிர்ப்புறத்தில்....

மர நிழலில் அந்த மோட்டார் சைக்கிள்!

நடைபாதையில் பரமேஸ்வரன்....! சமங்களா பார்த்து விட்டாள்.

தெரு விளக்கின் ஒளியாலும், அருகிலிருந்த பெரிய கிளாத் எம்போரியத்திலிருந்து வெளிப்பட்ட மெர்க்குரி வேப்பர் லேம்ப் ஒளியாலும் அவனுடைய உருவம் நன்றாகவே தெரிந்தது.

'அவனுடைய மூலபலம் என்று இவள் எதைச் சுட்டிக் காட்டுகிறாள்? என்னையா? அல்லது அவனுடைய பாங்க் பாலன்ஸையா?'

அவள் அவனுடைய பலமான சிந்தனையைக் கலைத்தாள்.

ஒருமையிலேயே அவனை அழைப்பதன் மூலம் தன்னை இன்னும் நெருக்கப்படுத்திக் காட்டினாள்.

''எனக்கு உன்னால் உதவ முடியுமா முடியாதா? நான் முறையாக உனக்குக் கிடைக்க வேண்டுமானால்இதில் நீ எப்படிச் செயல்படப் போகிறாய் என்பதை நான் பார்க்க வேண்டும். அதோடு இன்னொன்றையும் விளக்குகிறேன். அவரைப் பற்றி உனக்குத் தெரியாது! தெரிந்தவை அரை குறைகள். நம் இருவரையும் இணைத்து விவாக ரத்துக்கான நோட்டீஸை அனுப்பியதிலிருந்தே அதில் ஓர் உள்ளர்த்தம் இருக்கிறதை நீ புரிந்துகொள். அர்த்தம் மட்டுமல்ல. அவருடைய எதிர்காலச் சதியும் இருக்கிறது என்பதையும் உணர்ந்துகொள். இது இந்த வெறும் விவாகரத்துடன் மட்டும் முடியப் போகிற பிரச்னை அல்ல. பிற்பட்டு நிறையத் தொல்லைகள் தர நம்மை இப்படித் தனிமைப்படுத்தத் திட்டமிட்டிருக்கிறார். இதையும் யோசனை செய்'' என்றாள் சமங்களா.

எதிர்ப்புறமுள்ள நடைபாதையில் நின்று கொண்டிருந்த பரமேஸ்வரன் இங்கேயும் கவனித்துக் கொண்டிருந்தான்.

அவள் ஏறிக் கொள்ள வேண்டிய டவுன் பஸ் வந்து நின்றது. அதில் ஏறிக் கொண்டு விட்டாள்.

சுகுமாரன் நடைபாதையில் நின்றான்.

பஸ் கிளம்பிவிட்டது.

பரமேஸ்வரன் மோட்டார் சைக்கிளில் சாலையைக் கடந்து வந்து சுகுமாரனருகே நின்றான்.

## துணுக்கு வேட்டை

இந்த வாரக் கல்கி இதழில் இடம் பெறும் துணுக்குகளைத் தேர்ந்தெடுத்துத் தரும் துணுக்கு எழுத்தாளர் சிறுமுகை ஜி. கதிரேசன் சொல்லுகிறார், ''துணுக்கு எழுதுவதைவிட அதைத் தேர்ந்தெடுப்பது எவ்வளவு கடினம் என்று தெரிகிறது'' நெல்லை மாவட்டம் கோவில்பட்டிக் காரரான இவர், கோவை மாவட்டம் சிறுமுகையிலுள்ள 'சௌத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட்'டில் பணியாற்றி வருகிறார். நல்ல மேடைப் பேச்சாளர். துணுக்கு எழுத்தாளர்களை ஒன்று சேர்க்கும் பணியில் முழுமூச்சுடன் ஈடுபட்டு வரும் திரு கதிரேசன், 79 நவம்பரில் சென்னையில் துணுக்கு எழுத்தாளர் மாநில மாநாட்டினை நடத்தினார். அப்போது ஏற்பட்ட து. எ. சங்கம் இவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. அமெரிக்காவிலிருந்து வரும் 'டிட். பிட்ஸ்' பத்திரிகையின் ஆதரவோடு சர்வதேச அளவில் துணுக்கு எழுத்தாளர்களை ஒன்று திரட்டி மாநாடு நடத்த முயற்சி மேற்கொண்டிருக்கிறேன்.'' என்கிறார் இவர். பள்ளியில் படிக்கும்போது 'ஒளி' என்கிற பெயரில் கையெழுத்துப் பத்திரிகை நடத்தினாராம்.

-அமைப்பு 'யெஸ்பால்' புகைப்படம்: பிரபுசங்கர்



இருவரும் அங்கிருந்த சிமெண்ட் ஆசன மொன்றில் வந்து உட்கார்ந்தனர்.

இவர்களுடைய சந்திப்பு நிச்சயமாக நடக்கப்போகிறது என்பதைச் சுமங்களா யூகித்துக் கொண்டு விட்டாள்.

அடுத்த பஸ் ஸ்டாப்பிலேயே இறங்கி விட்டாள். வேகவேகமாக அந்தத் தூரத்தைக் கடந்து வந்தாள். சற்று நேரத்துக்கு முன் தான் எங்கு நின்றிருந்தாளோ அங்கே வந்து மறுபடியும் நின்றாள்.

பரமேஸ்வரனின் மோட்டார் சைக்கிள் இப்போது இந்தப் பக்கம் சாலையோரமாக நின்று கொண்டிருந்தது. சுகுமாரனும் அவனும் இருளில் அந்தரங்கமாக ஆலோசனையில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களை நன்கு கவனித்தாள்.

''அவளுக்கு யாரோ பின்பலமாக நிற்கிறார்கள். யாரென்று தெரியவில்லை. உன்னைப் பற்றிய எல்லாத் தகவல்களும் அவளுக்குத் துல்லியமாகத் தெரிந்திருக்கிறது. நாம் கடைகளை விற்றது...பங்களாவை விற்றது எல்லாம் கூடச் சொல்லுகிறாள்.''

''அப்படியா?''

''இன்னொன்று...போன மாதம்...அதான் சாந்தியைச் சினிமாவில் சேர்த்து விடுவதாகச் சொல்லி, ஏமாற்றி...அது உன் மேல் கோபித்துக்கொண்டு விஷ மாத்திரை சாப்பிட்டதே.. அதுகூடத் தெரிந்திருக்கிறது, அவளுக்கு.''

''டைவர்ஸ் பற்றி என்ன சொன்னாள்?''

''அவள் பேசுவதைப் பார்த்தால், இதை லேசில் விடமாட்டாள் போலத் தெரிகிறது. கோர்ட், டைவர்ஸ். வழக்கு எல்லாவற்றுக்கும் துணிந்து நிற்கிறாள் என நினைக்கிறேன். ஆனால் ஓரிடத்தில் அவளுடைய எண்ணத்தை லேசாக வெளிக் காட்டினாள். சொத்தில் சரி பாதி ஜீவனாம்சம் கொடுத்தால் அது பற்றிக் கொஞ்சம் இறங்கி வருவாள் என்று தெரிகிறது.''

''அந்த அநாதை நாய்க்கு ஜீவனாம்சமா? அவளுக்கும் எனக்கும் பரஸ்பர விருப்பத்தின் பேரிலா கல்யாணம் நடந்தது? போலீஸ் வைத்து மிரட்டி ரிஜிஸ்தரார் ஆபீஸில் கல்யாணத்தை நடத்திக் கொண்டிருக்கிறாள். அதைச் சட்டப்படி உடைக்க முடியாது என்பதால்தானே இப்படியொரு உத்தியை நான் கையாள்கிறேன். அவளுடைய மிரட்டல்களுக்கெல்லாம் பயந்தால் நான் ஆண் பிள்ளையே அல்ல!'' என்றான் ஆத்திரத்துடன்.

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நான் சொல்கிறபடி செய். பேசாமல் அவளுக்கு ஜீவனாம்சமாக ஒரு தொகையை நீயே கொடுத்துவிடு. எல்லாப் பிரச்னையும் தீர்ந்து விடும். வழக்கு நீதி மன்றம் வரை போகாமல் வெளியிலேயே முடித்துக் கொள்ள நான் ஏற்பாடு செய்கிறேன்.''

''அவளுக்கு நான் ஒரு பைசாக் கூடத் தரமாட்டேன்.''

''அது அவ்வளவு நல்லதில்லை. நீ எதிர்பார்க்கிற மாதிரி சுமுகமாகவும் தீரக்கூடிய விஷயமில்லை, இது.''

''சுகுமார்!'' என்று பரமேஸ்வரன் ஆத்திரத்துடன் கத்தினான்.

''ஆத்திரப்படாதே. யோசித்துப் பார்! உனக்கு நான் எல்லா வகையிலும் எல்லா இக்கட்டிலும் யோசனை கூறிக் கொண்டே வந்திருக்கிறேன். இதையும் உன் நலனை உத்தேசித்துத்தான் சொல்கிறேன்.''

''நோ. என்னுடைய திட்டங்களுக்குக் குறுக்கே அவள் வருகிறாள். அம்பிகாவிடம் போய் என்னவெல்லாமோ கூறி அவளைக் குழப்பி யிருக்கிறாள். அம்பிகாவை அவள் எப்படித் தெரிந்து கொண்டாள் என்பதே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. முன்பெல்லாம் 'நமது திருமணத்தை என்றைக்கு வைத்துக் கொள்ளலாம்?' என்று கேட்டுக் கொண்டிருந்தவள், இப்பொழுது, 'என் மனம் சரியில்லை. விவாகத்தைக் கொஞ்சம் தள்ளிப் போட்டுக் கொள்ளலாம்' என்று கூறுமளவுக்கு அவளைக் குழப்பி யிருக்கிறாள். இவளுடன் வாழ்வது என்பது இனி இல்லை. அந்த எண்ணங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து வெகு நாட்களாகி விட்டன. ஒன்று, அவள் என் வழியிலிருந்து விலக வேண்டும்... அல்லது ஒரேயடியாக விலக்கி விடுவேன்!'' என்றவன் சுகுமாரனை முறைத்துப் பார்த்து, ''அர்த்தம் புரிகிறதா?'' என்றான். (தொடரும்)



• டைரக்டர் ஈஸியாக பாஸ் பண்ணி விட்டார். , வழக்கமான பழிக்கதை தான். சொல்லும் முறையால் விழிக்கிறது. மூன்று பேர் ஜெயிலில் இருக்கும் கைதிகள். வெளியே தப்பி வந்து ஒருவனைக் கொன்று விட்டு உள்ளே போய் விடுகிறார்கள். சட்டம் அவர்களை ஒன்றும் செய்ய முடியாமல் வாய் மூடி நிற்கிறது. மகன் அதே சட்டத்தைச் செயலற்ற தாக்கி மூவரையும் பழிவாங்குகிறான். வெகுவாக முன்னேறி நம்பிக்கை தரும் விஜய் காந்த். (போலீஸ் ஸ்டேஷனில் ஸ்டைல் தேவையில்லை.) அடுத்த வில்லன் எப்படி கொல்லப்படுவான் என்று எதிர்பார்க்க வைக்கிறார்கள். டைரக்டரிடம் நிறைகளும் உண்டு குறைகளும் உண்டு. ஆனால் குறைகளை மறக்கச் செய்து விடுகிறார். தைரியமான முடிவு. —ஜனனி சாஸ்திரி

## சட்டம் ஒரு இருட்டறை




# உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர்

CAS/OPPL/3/80/TAM/C

# ரீட்ரெடிங் தொழிலகங்களே!

## ஸைரப்பர் க்யூரிங் காற்றுப்பைகள் உபயோகித்து அதிக லாபம் பெறுவீர்.



ஸைரப்பர் க்யூரிங் காற்றுப் பைகள் டயர்களை புதுப்பிக்கும் பணியில் கணிசமான பலன்களை அளிக்கின்றன.

அகில உலகத் தர நிர்ணய நியதிக்குட்பட்ட தயாரிப்பு.


மிகச் சிறந்த கலவைப் பொருள்களினால் தயாரிக்கப்படுவதினால் அதிகமான உஷ்ணத்தையும் இடைவிடாத உபயோகத்தினையும் தாங்க வல்லவை.

பல்வேறு சீதோஷ்ண நிலைகளையும் ஈடு கொடுக்கிறது. மிகவும் நுண்ணிய சோதனைக் கட்டங்களை ஏற்று நாத்திற்கும் நீடித்த உழைப்பிற்கும் தகுதிபெறும் அளவில் சிறந்த உபகரணமாகத் திகழ்கிறது.

மீண்டும் மீண்டும் உபயோகப்படுத்த முடிவதால் பல தடவைகள் டயர்களை புதுப்பித்துக்கொள்ள உதவுகின்றன.

**SIRUBBER**

ஸைரப்பர்
க்யூரிங் காற்றுப்பைகள்



VSK 914

TVS தரத்திலும் சேவைச் சிறப்பிலும் நிறுவனத்தின் பாரம்பரியம்.

**சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்**
உசிலம்பட்டி ரோடு, கோச்சடை,
மதுரை - 625 016

# உண்மையை உணர்ந்தால் உவகை உண்டாகும்



## திருமுருக கிருபானந்தவாரியார்

சோமனும் காமனும் இணைபிரியாத நண்பர்கள். கள்ளமில்லாமல் உள்ளம் ஒன்றி அன்பாகப் பழகுவார்கள். வஞ்சம் இல்லாத நெஞ்சம் உடையவர்கள். அன்பினால் இன்பத்தை நுகர்வார்கள். இருவரும் சேர்ந்து ஆலய வழிபாடு செய்வார்கள்.

ஒரு சமயம் சோமனும், காமனும் திருத்தல யாத்திரைக்குப் புறப்பட்டார்கள். பழைய காலத்தில் ஒட்டல்கள் கிடையா. என்ன விற்பனை செய்தாலும் அன்ன விற்பனை செய்ய மாட்டார்கள். இதனால்தான் பழைய காலத்தில் அன்னச் சத்திரம் கட்டி சோறு போட்டார்கள். அன்னதானத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். அதனால் உணவுக்கு ஆகும்படி வறுத்த கோதுமை மா, (சத்துமா) கம்பு மா, அவல், காய்ந்த திராட்சை முதலிய பண்டங்களைக் கூடையில் நிரப்பிக் கொண்டு யாத்திரை செய்தார்கள்.

புண்ணிய நதிகளில் நீராடியும், நதிகளில் பிதுர்க் கடன்கள் கழித்தும், தலத்திலுள்ள மூர்த்திகளைத் தரிசித்தும், மகிழ்ச்சி அடைந்தார்கள். திருத்தல யாத்திரை மக்களுக்கு இன்பம் தரும். யாத்திரையில் பல துயரங்கள் நேர்ந்தாலும் இன்பம்தான் அதிகமாக இருக்கும். மனோ சாந்தி உண்டாகும். பசி தாகத்தின் அருமை தெரியும். பாவங்கள் விலகும். புண்ணியம் உண்டாகும்.

இவர்களுடைய யாத்திரை முடிகின்ற தருணம். இறுதியில் ஒரு புண்ணிய ஸ்தலத்தை அடைந்தார்கள். சுவாமி தரிசனம் செய்து விட்டு ஒரு சத்திரத்தில் தங்கினார்கள். அந்த நேரத்தில் இருவருக்கும் வேண்டிய நண்பனாகிய இராமன் வந்து சேர்ந்தான். வந்தவனை அகமும் முகமும் மலர்ந்து வரவேற்றார்கள். இரவு மணி பத்து. மூவருக்கும் நல்ல பசி.

சோமனுடைய கூடையில் 3 கோதுமை ரொட்டிகள் இருந்தன. காமனுடைய கூடையில் 5 ரொட்டிகள் இருந்தன. ஆக எட்டு ரொட்டிகள். இவற்றை மூவரும் உண்ண வேண்டும். ஒவ்வொரு ரொட்டியிலும் நிலாப் பிறை போல் மூன்று துண்டுகளாகச் செய்தார்கள். எட்டு ரொட்டிகளும் 24 துண்டுகள் ஆயின. ஆளுக்கு 8 துண்டுகளை உண்டு தண்ணீர் பருகிப் பசியாறி பரமனை தியானித்துப் படுத்துச் சுகமாக நித்திரை செய்தார்கள்.

விடியற்காலை இராமன் எழுந்தான். பொதுவாக பரான்னம் உண்ணக்கூடாது. அதிலும் புண்ணிய ஸ்தலத்தில் கூடவே கூடாது. ஆதலால் இவர்களுடைய உணவை உண்டு நாம் புண்ணியத்தை இழக்கக் கூடாது. கடவுள் நமக்குச் சிறிது பொருள் தந்திருக்கிறார்'' என்று எண்ணி, மேசைமீது 8 ரூபாய்களை வைத்துவிட்டுச் சென்றான். பின்னர் சோமனும், காமனும் எழுந்து மேசை மீது 8 ரூபாய்கள் இருக்கக் கண்டார்கள். சோமன், ''அண்ணே! மேசையில் எட்டு ரூபாய்கள் இருக்கின்றன. உனக்கு நான்கு ரூபாய், எனக்கு நான்கு ரூபாய் என்று பங்கிட்டுக் கொள்ளலாம்'' என்றான்.

காமன் ''தம்பி! நீ சொல்வது என்ன நியாயம்? உன் கூடையில் 3 ரொட்டிகள் மட்டுமே இருந்தன. என்னுடைய கூடையில் 5 ரொட்டிகள் இருந்தன. ஆதலால் ஐந்து ரொட்டிக்கு நான் ஐந்து ரூபாய் எடுத்துக் கொள்வேன். நீ மூன்று ரூபாய் எடுத்துக் கொள். இதுதான் நியாயம்'' என்றான்.

சோமன், ''நாம் ஒன்று சேர்ந்து யாத்திரை செய்தோம். லாப நஷ்டத்திலும் சரிபாதி தான். ஆதலால் ஆளுக்கு நான்கு ரூபாய் எடுத்துக் கொள்வதுதான் முறை. நீ வீணே தகராறு பண்ணாதே'' என்றான்.

இவ்வாறு ஒரு ரூபாய்க்காக இருவரும் சண்டை போட்டுக் கொண்டார்கள். இந்தத் தகராறு முடிந்தது. இருவரும் அந்தக் கட்டிடம் இடிகின்ற மாதிரி பலத்த குரலில் வாதம் செய்து கொண்டார்கள். அங்கு காவல் துறை அதிகாரி வீமன் என்பவர் வந்தார். இருவருடைய வாக்கு மூலங்களைக்

கேட்டார். எட்டு ரூபாயை வாங்கித் தம் மடியில் வைத்துக் கொண்டார்.

சோமன் கூடையில் 3 ரொட்டிகள் இருந்தன. காமன் கூடையில் 5 ரொட்டிகள் இருந்தன. ரொட்டி ஒன்று 3 துண்டுகளாகச் செய்யப்பட்டன. மொத்தம் 24 துண்டுகளாயின. மூவரும் ஆளுக்கு 8 துண்டுகள் உண்டனர். ராமன் கொடுத்தது 8 ரூபாய். இதுதானே நிகழ்ந்தது?'' என்று சிறிது நேரம் சிந்தித்தார். ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தார். சோமனுக்கும், காமனுக்கும் மனக் கலக்கம் உண்டாயிற்று. நமக்குள்ளேயே ஒத்துக் கொள்ளாமல் போய் விட்டோமே! போலீஸ் அதிகாரியிடம் பணம் சேர்ந்து விட்டதே! அவர் 2 ரூபாய் எடுத்துக் கொண்டு நம்மிடம் ஆளுக்கு 3 ரூபாய் என்று தருவாரோ! என்ன செய்வாரோ! என்று எண்ணி இஞ்சி தின்ற குரங்குகளைப் போல் விழித்தார்கள்.

சில நிமிஷங்கள் கழித்து வீமன் என்ற அந்த அதிகாரி சோமனிடம் ஒரு ரூபாயும், காமனிடம் ஏழு ரூபாயும் கொடுத்தார். அவர் யாதொன்றும் எடுத்துக் கொள்ளவில்லை. இதில் சோமனுக்குப் பெருத்த ஏமாற்றம் உண்டாயிற்று. ''எஜமான்! இவர் கூறியது போல் எனக்கு 3 ரூபாயாவது கொடுங்கள்'' என்று கெஞ்சிக் கேட்டான்.

வீமன், ''ஐயா! நான் நியாய விரோதமாகச் செய்ய மாட்டேன். உன் கூடையில் மூன்று ரொட்டிகள் இருந்தன. காமன் கூடையில் 5 ரொட்டிகள் இருந்தன. ஆக மொத்தம் 8 ரொட்டிகள். ரொட்டி ஒன்று 3 துண்டுகளாகச் செய்யப்பட்டன. 24 துண்டுகளாயின. மூவரும் தலா ஒன்றுக்கு 8 துண்டுகள் தின்றீர்கள். ராமன் வைத்தது 8 ரூபாய். ஆதலால் உனக்கு ஒரு ரூபாயும், காமனுக்கு ஏழு ரூபாயும் கொடுத்தது முற்றிலும் நியாயம். வீணே நீ தகராறு செய்ய வேண்டாம்.'' என்றார்.

சோமன், ''என்ன நியாயம்?'' என்று வினவினான். வீமன் கூறுகின்றார்: ''சோமன்! உன் கூடையில் 3ரொட்டிகள் மட்டும் இருந்தன. 3 ரொட்டிகள் 9 துண்டுகளாயின. 8 துண்டுகளை நீ தின்று விட்டாய். ஒரு துண்டு மட்டுமே ராமனுக்குத் தரப்பட்டது. காமனுடைய கூடையில் 5 ரொட்டிகள் இருந்தன. அவை 15 துண்டுகளாயின. அதில் 8 துண்டுகளைக் காமன் உண்டான். 7 துண்டுகள் ராமனுக்குத் தரப்பட்டன. எனவே ஒரு துண்டு கொடுத்த உனக்கு ஒரு ரூபாயும், 7 துண்டுகள் கொடுத்த காமனுக்கு 7 ரூபாயும் தரப்பட்டன. ஒரு துண்டுக்கு ஒரு ரூபாய், ஏழு துண்டுகளுக்கு ஏழு ரூபாய் தந்தது நியாயம்தானே? இது உனக்கு விளங்கவில்லையா?'' என்று வீமன் நியாயத்தை விளக்கிச் சொன்னார். இந்த நியாயத்தைக் கேட்டவுடனே சோமனுடைய உள்ளத்தில் உவகையும், அமைதியும் ஏற்பட்டன.

சமாதானமாகத் தங்கள் இருப்பிடம் சேர்ந்தார்கள்.

---

சில மாதங்களுக்கு மூன் திருமணப் பத்திரிகை ஒன்று எனக்கு வந்தது. சனிக்கிழமை திருமணம் என்று பத்திரிகையில் அச்சடிக்கப்பட்டிருந்தது.

எனக்கு நம்பவே முடியவில்லை. திருச்சிக்குத் திருமணத்துக்குப் போனேன். திருவானைக்காவலிலிருந்து வந்திருந்த வி. நாராயண அய்யர் என்பவரைக் கேட்டதில் கிடைத்த பதில் எனக்கு மேலும் வியப்பை அளித்தது. ''என்னுடைய பெண் ஜெயலட்சுமிக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால் திருமணம் செய்தேன். அதுவும் இதே போல் சனிக்கிழமைதான். ஆனால் இவர்கள் 12--1-30 முகூர்த்தம் வைத்திருக்கிறார்கள். என் பெண்ணுக்கோ காலை 9 முதல் 10-30க்குள் இராகுகாலத்திலேயே நடந்தது. இப்பொழுது என் பெண் ஜெயலட்சுமியும் மாப்பிள்ளை ராமநாதனும் நாலைந்து குழந்தைகளோடு சௌகர்யமாக இருக்கிறார்கள்'' என்றார்.

இரு மணி கனபாடிகளை அணுகிக் கேட்டபோது அவர் கூறினார்:

எந்தெந்த ரிஷிகளுக்கு எந்தெந்த கிழமை நட்சத்திரம், திதியில் நல்ல காரியம் செய்யலாம் என்று இருக்கிறது. முன்னோர்களுக்குக் கௌரவம் தரும் வகையில் காலத்தை அனுசரித்து, நம்முடைய சௌகரியத்தையும் உத்தேசித்து நல்ல காரியங்கள் செய்வதில் எந்தவிதமான குறைபாடும் இல்லை.

கேரளாவில் செவ்வாய்க் கிழமை, சனிக்கிழமை, ராகுகாலம், இரவு நேரங்களில் திருமணம் செய்யலாம் என்று வைத்துக் கொண்டு திருமணங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. பொதுவாக நாங்கள் இராகு காலம் பார்ப்பதே இல்லை. எமகண்டம்தான் பார்ப்பது உண்டு. தமிழ்நாட்டில் ராகு காலத்தில் நல்ல காரியங்கள் செய்வது இல்லை. எமகண்டத்தில் செய்கிறார்கள்.

சமீப காலமாக கேரளப் பெண்கள்—பிள்ளைகளைத் தமிழ் நாட்டில் கொடுப்பதும், ஏற்பதும் வழக்கமாகி, கேரள முறைப்படி சில திருமணங்கள் இங்கும் நடக்கின்றன.''

—அன்பு





தமிழுக்கு அமுதென்று பேர்...!
நல்ல காபிக்கு நரசுஸ் என்று பேர்...!
ஜீவனுள்ள ஒரே காபி!
நரசுஸ்
"தெர்மலோ" காபி!
நரசுஸ் காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.
ADWAVE/NC/1370

# மீண்டும் வருவான்!

சுலோசனா ராணி தமிழாக்கம்: ஆர். சுசீலா

"என் சின்னக் கண்ணுக்கு என்னவாச்சு? என் தங்கக் கட்டிக்கு என்னவாச்சு? என் சிங்காரச் செல்லத்துக்கு என்னவாச்சு? என் ஆட்டு வெளக்குக்கு என்ன வேணும்?"— குழந்தையைக் குளிப்பாட்டி விட்டுத் துடைத்துக்கொண்டே செல்லம் முத்த மாரி பொழிந்து கொண்டிருந்தாள்.

"இன்னைக்கு உன் மவனை விட்டு வரப் போவதில்லையா? நா போவணும். சட்டுனு வா, சோறு போடு" — சத்யம் ரிக்‌ஷாவைத் துடைத்துக் கொண்டே சொன்னான்.

ஆனால் செல்லம் கணவனின் வார்த்தையை லட்சியப்படுத்தும் நிலையில் இல்லை. துடைத்து முடித்துவிட்டு, மாடப் பிறைக்கருகில் போய் அதிலிருந்து பவுடர் டப்பாவை எடுத்து மகனின் மேனி முழுதும் பவுடரைத் தெளித்தாள்.

"என் ரோஜாக் கண்ணுக்கு என்ன வேணுமாம்? என் கட்டித் தங்கத்துக்கு என்ன வேணுமாம்?" என்று அப்பவுடர் முழுவதையும்அப்பிய குழந்தையின் மேனி முழுவதும் தடவினாள். ரிக்‌ஷாவைத் துடைத்துக் கொண்டிருந்த சத்யம், இடையிடையே செல்லத்தையும், அவள் கையிலிருந்த வெண்ணெய் உருண்டை போலிருந்த குழந்தையையும் பார்த்தவாறிருந்தான்.

மகன் பிறப்பதற்கு முன்னால் செல்லம் தீயைக் கக்குவாள். பேசினால் போதும் உய்யென்று சண்டை போடுவாள். பேச்செல்லாம் துடுக்குத்தனம்தான். பார்வையில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும். குழந்தைக்குத் தாயானவுடன் அந்தச் சுபாவமே மாறிவிட்டது.

செல்லம் மகனுக்கு மையிட்டு, சொக்காயும் சராயும் அணிவித்துவிட்டு, தூக்கிக் கொண்டு சத்தியத்திடம் வந்தாள்.

"இதோ உங்கப்பாரு. எந்த ஜன்மத்திலே எந்த புண்யம் செஞ்சாரோ, தங்கக் கட்டி கிடைச்சிருக்கே" என்று சத்தியத்தைக் காட்டினாள்.

பத்து மாதம் நிரம்பப் பெற்ற மகன் அப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சமாய் முகத்தை அடையாளம் புரிந்து கொள்ளத்தொடங்கி யிருந்தான். சத்யத்தைக் கண்டவுடன் கைகளை ஆட்டிக்கொண்டு பொக்கை வாயால் சிரிக்கலானான்.

"கொஞ்ச நேரம் எடுத்துக்கோ! சோறு வெக்கறேன் ஒனக்கு" என்றாள். ரிக்‌ஷாவைத் துடைத்து முடித்த சத்யம் மகனை எடுத்துக் கொள்ளக் கையை நீட்டினான். செல்லம் அருவருப்பால் முறைத்தாள். "சீ, சீ, சனியன் பிடித்த கைகள். எல்லாம் தூசி. போய்ச் சோப்புப் போட்டுக் கழுவிக்கிட்டு வா" என்று அதட்டினாள்.

"அப்பா... மகா சுத்தம்! மண்ணைப் பிசைந்து பிழைக்கிற ஆளுங்க நாம்ப..." என்றான் சத்யம்.

"ஆறு மாத்திரம்? மண்ணுலே கிடந்து பொறளணுமான்னேன். என் தங்கக் கட்டி அழுக்காகிட மாட்டான்?"



''நாளக்கி அவன் பெரியவனானதும் ரிக்ஷா ஓட்டப் போறதில்லையா? ரிக்ஷா தொடைக்க மாட்டானா?''

''ஒன் பாழும் புத்தியை ஏன் காட்டிக்கிறே? என் கண்ணுக்குட்டி ரிக்ஷா ஒண்ணும் ஓட்ட மாட்டான். இங்ஙன பாரு. ஒரு நிமிஷம் என் தங்கத்தைச் சரியாப் பாரு. இவன் ரிக்ஷா ஓட்டறவனாகவா தெரியுது?''

''ஆஹா! ராஜ்யம் ஆள்றவனைப் போல இருக்கான்'' — சத்யம் பழிப்பது போலச் சொன்னான்.

''ராஜ்யந்தான் ஆளுவான். நா கஷ்டப் பட்டுப் படிக்க வெக்கிறேன். எங்கண்ணு சூட்டு பூட்டோட துரையாயிடுவான்'' என்று அவன் வயிற்றில் கை வைத்துக் கிச்சு கிச்சு மூட்டினாள்.

குழந்தை கிடுரென்று கை கொட்டிச் சிரித்தான்.

சத்யம் அலுத்துக் கொண்டே தண்ணீர்ப் பானையை அணுகி, சோப்புப் போட்டுக் கைகளைக் கழுவிக் கொண்டு வந்தான்.

''செத்த ஜாக்கிரதையாத் தூக்கிக்க'' என்று தந்தாள். உள்ளே போய் சத்தியத்துக்குச் சாப்பாடு வைக்கத் தொடங்கினாள்.

சத்யத்துக்கும் மகன் மேல் வாஞ்சைதான்.

''என்னடா, சூட்டுப் பூட்டுப் போட்டுக்குவியா? பாருடா, உங்கம்மாவுக்கு எம்மாம் ஆசை!'' என்று முத்தமிட்டான்.

''சாயந்திரம் அம்மாவைக் கேட்டு ஜல்தி வா'' என்று உத்தரவிட்டாள் செல்லம்.

''ஏன்?''

''புள்ளே ரெண்டு நாளா தூங்கறதில்லே சரியா. திருஷ்டியோ என்னவோன்னு சந்தேகம். கோவில்லே சாமியாரு விபூதி இடுறாராம்.''

''அவனே எடுத்துக்கினே எப்போ பார்த்தாலும் இருக்கிறே. எறக்க மாட்டே. எப்படித் தூங்குவானாம்?''


செல்லம் உர்ரென்று முறைத்தாள்.

''கறுப்பு மனுஷங்களுக்கு செகப்பு பொறக்கக் கூடாதா? நாம எந்த ஜன்மத்துலபுண்ணியம் பண்ணினோமோ! நமக்கு வட்டு மாதிரி புள்ளே பொறந்திருக்கான். மத்தியிலே இவங்களுக்கு என்ன வந்திச்சாம் கவலே? ஏதோ விபரீதம் வந்தூட்டாப் போல தவிக்கிறாங்க. இவங்க வயிறெரிந்து எம் புள்ளேக்கு ஏதுனாச்சும் வந்துடப் போவுதேன்னுதான் என் கவலே.'' செல்லம் மூக்கைச் சிந்திப் போட்டு அழுது கொண்டே சொன்னாள்.

''பைத்தியக்காரி! அவங்க ஏதுனாச்சும் சொன்னா நீ ஏன் கிடந்து அழுவறே? சொல்லுவாங்க! லோகத்துக்குஏதோ ஒண்ணு சொல்றதுதான் வழக்கம். நாம்ப கண்டுக்கக் கூடாது. அவ்வளவுதான். எழுந்திரு. எழுந்திரு. அவன் தூங்கிட்டானா பாரு. நீ போய்த் துன்னு. நா அம்மா கிட்டே சொல்லிட்டுச் சீக்கிரமாவரேன். நீ தயாரா இரு'' என்று சத்யம் ரிக்ஷாவை எடுத்துக் கொண்டு போய் விட்டான்.

புருஷன் போனதும் செல்லம் அப்படியே கதவருகில் நின்று விட்டாள்.

பிறந்தவுடன் மகனைக் கொண்டு வந்து



நர்ஸ் காட்டியதுமே தன் கண்களையே நம்ப முடியவில்லை அவளால். கண்ணைப் பறிக்கும் படியாக இருந்தான். அன்று சத்யம் அடைந்த ஆனந்தத்துக்கு எல்லை இல்லை. நர்சுகளும் டாக்டர்களும் கூட ஆச்சரியமடைந்தனர்.

சாயந்திரம் ஆயிற்று. செல்லம் மகனுக்குச் சொக்காயும், பூக்குல்லாயும், கால்சராயும் அணிவித்து பவுடர்போட்டு, பெரிய பொட்டிட்டு முடித்துத் தானும் சித்தமாயிருந்தாள். சொன்னபடியே சத்யம் வந்து விட்டான்

சாமியார் குழந்தையின் நெற்றியில் விபூதி இட்டார். ''ரொம்பத் திருஷ்டி விழுந்திருக்கு. ஜாக்கிரதை! ஒரு வாரம் வரையிலும் தினந்தோறும் வந்து விபூதியைப் பெற்றுக் கொண்டு போ'' என்றார். செல்லத்தின் தொண்டையைத் துக்கம் அடைத்தது.

வழியில் செல்லம் தன் பழைய சிநேகிதி கௌரியம்மாவைச் சந்தித்தாள்.

''ஆங்... இந்தப் புள்ளை யாரு?'' என்றாள் கௌரியம்மா.

''வேற யாரு? எம்புள்ளை. பேறு பார்த்த நீயே மறந்துட்டியா என்ன?''

''அவனா? எவ்வளவு பெரியவனாயிட்டான்? பூசனிப் பத்தை போல இருக்கானே!'' என்று செல்லத்தின் கையிலிருந்த குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

''டாக்டரம்மா சொகமா?'' என்று கேட்டாள் செல்லம்.

''டாக்டரம்மா ரொம்பத் தவிச்சுக்கிட்டு இருக்காங்க. அவங்க மேலே யாரோ ஏதோ கேசு போட்டிருக்காங்க.''

''அப்படியா? வா எங்க வூட்டுக்கு முடிஞ்சா வா''

''உங்க வூடு எங்கே?''

செல்லம் சொன்னாள்.

மறுநாள் காலையில் பத்து மணியளவில் செல்லம் மகனைக் குளிப்பாட்டி விட்டுத் தூங்கவைக்க முயன்றவாறிருந்தாள்.

அப்பொழுது வாசலுக்கு முன்னால் கார் ஒன்று வந்து நின்றது.

''செல்லம்மா உன்னைப் பார்க்க டாக்டரம்மா வந்திருக்காங்க'' என்றாள் கௌரியம்மாள் காரிலிருந்து இறங்கி வந்த படியே.

''ஓ, யப்பா! என் வூடு புண்ணியம் பண்ணிச்சு. நிசமாவா?'' என்றாள்.

டாக்டரம்மா, கௌரிம்மா இருவருக்கும் பின்னால் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்த பெரிய மனிதர் ஒருவரும் உள்ளே நுழைந்தார்.

டாக்டரம்மா ஒரு நிமிஷம் தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருந்த குழந்தையைப் பார்த்தாள். பிறகு அவனைத் துணியோடு சுருட்டி எழுப்பி, எடுத்துக் கொண்டாள். அவன் அழத் தொடங்கி விட்டான். டாக்டரம்மா குழந்தையைக் கண்ணாடிக்காரரிடம் காட்டி விட்டு ''ப்ளீடர் சார், நோ டௌட்! ஹி இஸ் தட் பாய்! காட் சேவ்ட் மீ!'' என்றாள்.

செல்லத்துக்கு தஸ்புஸ்ஸென்ற அந்த பாஷை புரியவில்லை.

அன்று மாலை சத்யம் நர்ஸிங் ஹோமுக்கு அழைத்து வரப்பட்டான்.

டாக்டரம்மா சத்யத்திடம் சொன்னாள்:

''பாரு, சத்யம், நடக்கக் கூடாத பெரிய பிழை நேர்ந்து விட்டது. உன் பெண்சாதிக்கு இங்கே பேறு நடந்ததில்லையா? அதே தினத்தன்று ஜட்ஜ் அனந்தராவின் பெண்ணுக்கும் குழந்தை பிறந்தது. அன்றுதான் என் புருஷனுக்கு மாரடைப்பு வந்ததால் தான் இவ்விரண்டு கேசுகளையும் கவனித்துக் கொள்ள முடியாமல் நர்ஸிடம் ஒப்படைத்தேன். இருவருக்கும் சுகப் பிரசவம்தான் ஆயிற்று. எங்கள் ஆஸ்பத்திரியில் வேலை பண்ணும் நர்ஸுக்கும் அனந்தராவின் மாப்பிள்ளைக்கும் சம்பந்தம் உண்டாம். அவன் இந்த நர்ஸை மணந்து கொள்வதாய்க் கூறி ஏமாற்றி விட்டானாம். அந்தக் கோபத்தில் நர்சு உன் பிள்ளையை அவர்களுக்கும் அவர்கள் பிள்ளையை உனக்கும் மாற்றி விட்டுத்தன் கோபத்தைத் தீர்த்துக் கொண்டாளாம். கறுப்பாய் இருந்த அந்தக் குழந்தை அவர்கள் வீட்டில் விரல் சுட்டிக் காட்டுமாறுதான் இருந்தது. அனந்தராவுக்குச் சந்தேகம் தோன்றி ரத்தப் பரிசோதனை பண்ணிப் பார்த்தபோது அக்குழந்தை அவர்கள் குழந்தை இல்லை என்று தெரிந்து விட்டது. இந்த நர்ஸிங் ஹோமில் தான் ஏதோ மாறுபாடு நிகழ்ந்திருக்க வேண்டும். அவர் அந்த நர்ஸுடன் வேலை பண்ணிய ஆயாவை வலையில் போட்டுக் கொண்டார். ஆயா உண்மையைச் சொல்லி விட்டாள். அந்த நர்ஸோ இப்போது எங்களிடம் இல்லை. ராணுவத்தில் சேர்ந்து விட்டாள். அனந்தராவ் என்மேல் வழக்குப் போட்டார். ஆறு மாதங்களாய் நான் இதனால் அவஸ்தைப் படுகிறேன். அவர்கள் குழந்தையை அவர்களிடமே ஒப்படைத்து விடுங்கள்.''

''உங்களுக்குக் கோடி புண்ணியங்க! டாக்டரம்மா எவ்வளவு நல்லவங்கன்னு எனக்குத் தெரியுங்க. ஆனா, ஆனா, செல்லத்திடம் இது ஒங்குழந்தை இல்லேன்னு என்னாலே சொல்ல முடியாதுங்க. அவள் பிராணனே போயிடுங்க. நீங்களே சொல்லிடுங்க.''

சத்யம் விருட்டென்று திரும்பிவிட்டான்.

ஒன்பது மணியளவில் டாக்டரம்மாவின் கார் வந்தது. கௌரியம்மா வந்தாள்.

''புள்ளையை ஃபோட்டோ எடுத்து எதுக்கோ அனுப்ப

''உன் மனைவிக்குத்தான் வீணை வாசிக்கத் தெரியுமே இப்போ எதுக்குப் புல்லாங்குழலும் வாசிக்கக் கத்துக் கொடுக்க ஏற்பாடு செய்யறே? சங்கீதத்தில் அவ்வளவு ஈடுபாடா?''

''வயிற்றெரிச்சலைக் கிளப்பாதே! அந்த ஒரு வாத்தியம் கத்துக்கிட்டாதான் கூட தானும் பாடாமல் இருப்பாள்!''

— ரமணி ரங்கநாதன்



ருங்களாம். உன்னே எடுத்துண்டு வரச் சொன்னுங்க'' என்ருள்.

அவ்வார்த்தைகளைக் கேட்ட செல்லத்தின் முகம் மலர்ந்தது.

சத்யமும் செல்லமும் காரில் ஏறினர்கள். ''எம்புள்ளே எம்மாம் அதிர்ஷ்டசாலி பாரு. என்னே கார் சவாரி பண்ண வச்சுட்டான்''— அவன் கன்னத்தை நிமிண்டினுள்.

டாக்டரம்மா செல்லத்திடம் நடந்த சங்கதிகளைக் கூறிவிட்டாள். செல்லம் அதிர்ந்து விட்டாள்.

''என்னது? இவன் எம்புள்ளே இல்லேயா?'' டாக்டரம்மா சிறு குழந்தைகளே எடுத்துக் கொண்டு போகும் மந்திரவாதிப் பெண் மணியாய்த் தெரிந்தாள்.

டாக்டரம்மாவின் கவனம் நோயாளி ஒருத்தியிடம் திரும்பியபோது வேகமாகக் குழந்தையுடன் வெளியே வந்துவிட்டாள் செல்லம். சத்யம் ரிக்ஷாவை வீட்டுக்குத் திருப்பிக் கொண்டு வந்தான். செல்லம் மள மளவென்று இருக்கும் இரண்டு துணிமணிகளே யும் ஒரு பையில் திணித்துக் கொண்டாள்.

''நாம்ப இங்கே இருக்க வேணும்... ஊருக்குப் போயிடலாம். புறப்படு'' என்ருள்.

''எந்த ஊரு?''

''ஏதோ ஒரு ஊரு. இங்கே இருந்தா அவுங்க வந்து புள்ளேயைப் புடுங்கிக்கினு போயிடுவாங்க.''

செல்லம் பெண் புலியாய் இருந்தாள். சத்யம் மறு பேச்சுப் பேசாமல் கிளம்பினன்.

இருவரும் கிளம்பி வெளியே வருவதற்குள் வீட்டு வாசலில் கார் நின்றது. அதிலிருந்து டாக்டரம்மாவும் போலீசும் இறங்கினர்.

''பார்த்திங்களா? நான் நினைத்ததே நடந்தது. குழந்தையை எடுத்துக் கொண்டு ஓடி விட எண்ணி விட்டார்கள்.''


போலீஸ் அதிகாரி அருகில் வந்தார்.

''பாரும்மா, இந்தக் குழந்தை உன்னுடையது என்கிருய். அவங்க எங்க குழந்தை என்கிருங்க. இதென்னவோ கோர்ட்டார் தெரிவிக்க வேண்டிய விஷயம். உனக்கு நாங்கள் அநியாயம் பண்ணுவதற்கு வர வில்லே.உன் குழந்தை எங்கேயும் போயிடாது. எங்களிடம் இருப்பான். வேணுமானல் நீ தினந்தோறும் வந்து பார்த்துக் கொள்ள லாம். போதுமா?''

கோர்ட்டில் வழக்கு நடந்தது. அன்று தீர்ப்பு வழங்கினர்கள். அந்தக் குழந்தை அனந்தராவின் குழந்தையே சந்தேகமில்லே. ரத்தப் பரிசோதனையில் நன்கு வெளிப்பட்டு விட்டது. அதனல் அதற்கு மறு பேச்சில்லே. குழந்தைகளே அவரவரிடம் ஒப்படைத்து விட்டனர்.

அக்குழந்தையைச் செல்லம் தொடவுமில்லே. சத்யமே எடுத்துக் கொண்டான். குழந்தை கறுப்பாய் ஒல்லியாய் இருந்தது. சிறிய கண் களுடன் இருந்தது.

செல்லம் வீட்டில் உட்கார்ந்திருந்தாள். அவள் முகத்தில் குழந்தையைப் பறி கொடுத்துவிட்டு மயானத்திலிருந்து திரும்பி வந்த சோகமும் வைராக்கியமும் இழை யோடின.



மந்திரி நெ. 1: உலகப்படத்தில் நீங்கள் என்ன தேடிக் கொண்டிருக்கிறீர்கள்?

மந்திரி நெ. 2: நாம் கடனுதவி வாங்காத நாடு ஏதாவது இருக்கிறதா என்று தேடிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் என்ன தேடிக் கொண்டிருக்கிறீர்கள்?

மந்திரி நெ. 1: நான் சுற்றுப் பிரயாணம் செய்யாத நாடு ஏதாவது இருக்கிறதா என்று தேடிக் கொண்டிருக்கிறேன்!

- கல்கத்தா மிக்கி

''எம் புள்ளேயை எனக்குக் கொண்டு வந்து தா. இந்த நோஞ்சான் புள்ளே எனக்கு வேண்டாம்.''

சத்தியம் வேலே செய்யும் கம்பெனி மகா லட்சுமி அம்மாள், ''செல்லத்துக்கு எப்ப டிடா இருக்கு?'' என்று கேட்டுக்கொண்டே வந்தாள். செல்லத்திடம் திரும்பி, ''இந்தா செல்லம், நீ இப்படித் திலேயடைத்து போய்ச் சாவை வரவழைத்துக் கொள்வதால் என்ன லாபம் சொல்லு? அங்கே வளர்ந்தால் மாத் திரம் அவன் உன் மகன் இல்லேன்னு ஆயிடுமா?'' என்ருள்.

''அவங்க எங்களே மோசம் பண்ணிட் டாங்கம்மா.''

''அவங்க பண்ணின மோசடி இல்லேயே! பகவான் ஆடிய நாடகம்! அங்கே துரையைப் போல வளர்வான். அழகாய்ப் படிப்பான். கலெக்டராவான். பெரியவனுனதும் இந்த ரகசியம் எப்படியோ தெரிந்து விடும். உன் னேத் தேடிண்டு வருவான். அப்போ உனக்கு எத்தனே சந்தோஷமா இருக்குமோ யோசித் துப் பார்!''

இவ்வார்த்தைகள் செல்லத்தின் உள்ளத் தில் அமிர்த தாரையாய் வேலே பண்ணத் தொடங்கிற்று.

''நிஜமாகவா அம்மா! அவன் மறுபடியும் எங்கிட்டே வருவாங்கிறீங்களா?''


''வராம எங்கே போவான்? பெத்த பாசத்தின் ருசியே இழுத்துண்டு வந்துடும்.''

''நீங்க நூறுண்டு நல்லா இருக்கணுங் கம்மா. உம்... அது எந்த நாளோ?'' என்று முணு முணுத்துக் கொண்டாள் செல்லம்.


''நாட்கள் நிமிஷமாய்ப் பறந்து விடும். கண் மூடித் திறப்பதற்குள் வந்து விடாதா?''


செல்லம் ஆமாம் என்று தலையாட்டினுள். சத்யம் பெரிய பாரம் இறங்கி விட்டாற் போல இலேசான உள்ளத்துடன் நிமிர்ந் தான். அவன் கண்களில் அம்மாவினிடம் நன்றியானது பெருக்கெடுத்தோடியது.


''இந்த மாதிரி தைரியம் சொல்றவங்க பக்கத்திலே இருந்தால் எம்மாம் பெரிய கஷ்ட மானுலும் சுலுவாய்த் தாண்டிடலாம்'' என்றெண்ணிக் கொண்டான். சில ஆண்டு களில் அந்த நோஞ்சான் குழந்தையும் தேறி விடும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை ஏற்பட்டது.







JONES








கர்ர்ர்ர்ர்



# ஜோன்ஸ் ஜோக்ஸ்!




இந்த ஊரில் எல்லோரும் கராத்தே கத்துக்கிறாங்களே ஏன்?
இந்த ஊர் கொசுக்களைப் பார்த்தால் இந்தக் கேள்வியை நீ கேட்கமாட்டாய்!

# மேனியழகு மிளிர இயற்கை உங்களுக்குத் தரும் சீதனம்




ஓர் அரசு
நிறுவனத்தின்
தரமிகு
தயாரிப்பு

## வேப்

மேனிக்கு மெருகூட்டும்
இயற்கையின் கைவண்ணம்

## வேப்

வேப் சோப்பு, உங்கள் சருமம் உலர்ந்து கருங்கிவிடாமல் பாதுகாத்து, மழ மழப் பாக இருக்க உதவுகிறது.
கொழிக்கும் நுரை, நீடிக்கும் நறுமணம். உங்கள் மேனியின் இளமையையும் அழகையும் பேணிக் காக்கிறது வேப்.

**கேரளா சோப்ஸ் & ஆயில்ஸ் லிமிடெட்
கோழிக்கோடு.**

FDS KSO 3383A TAM

‘‘ப்ரதா கொஞ்சம் தயவுசெய்து என்னைப் புரிந்துகொள்ளேன் ப்ளீஸ்!’

ப்ரதாவுக்கு என் உள்ளத்தின் குரல் புரிந்திருக்க வாய்ப்பில்லைதான்.

நான் கண்ணனையும், மோகனையும், ரவியையும் கவனித்தேன். கண்ணன் ஓரக் கண்ணால் என்னைப் பார்ப்பது மாதிரி தெரிந்தது. பிரமையா அல்லது உண்மையா? பார்வையில் தெரிவது அலட்சியமா? அல்லது கேலியா? ‘அடேய் பையா நீ இந்த அழகுச் சிலைக்கு அறிவுச் சிலைக்கு ஒரு ஜோடியா?’ என்று அவனுள் ஓடிய எண்ணம் கண்கள் வழியாக வழிவது போலத் தெரிந்தது.

‘‘நான் உங்கள் வாதத்தை ஒத்துக்கொள்ள மாட்டேன் மிஸ்டர் மோகன்! பெண்கள் வேலைக்குப் போவது வெறும் பொழுது போக்குக்கு என்பதை நான் ஒத்துக்கொள்ளவே மாட்டேன். எத்தனையோ வீடுகளில் பெண்கள் வேலை பார்த்துத்தான் சாப்பிடணும்னு நிலைமை இருக்கு...’’

‘‘இருக்கலாம்!’’ — ரவி குறுக்கிட்டான். ‘‘ஆனால் எல்லோரும் அப்படின்னு சொல்ல முடியுமா?’’

‘‘கரெக்ட்!’’ — கண்ணன் பேசினான். ‘‘நான் படிச்ச காலேஜ்லே மேத்ஸ் டிபார்ட்மெண்டில் ஒரு பெரிய தொழில் அதிபரோட மனைவி லெக்சரராக இருந்தாங்க.’’

‘‘அவங்களுக்கு என்ன தகுதி?’’

‘‘ம்...ஃபாரின்லே டாக்டரேட் வாங்கி...’’

‘‘கரெக்ட், ஐ நோ ஹெர்!’’

‘‘ஓகே. அவங்களைப் பத்தி என்ன சொல்றீங்க?’’

நான் பல்லைக் கடித்துக் கொண்டேன். ‘முகுந்தன், பொறுத்துக்கொள்!’ எனச் சொல்லிக் கொண்டேன்.

‘‘கண்ணன் நீங்களே சொல்லுங்க. அவ்வளவு தகுதி உள்ளவங்களைச் சும்மா இருக்கச் சொல்லலாமா? அவர்களைச் சரியான முறையில் பயன் படுத்திக்கொள்ளவில்லையென்றால், யாருக்கு நஷ்டம்? ஃபார் யுவர் இன்ஃபர்மேஷன், அவங்களிரும்பி இருந்தால் வெளி நாட்டுப் பல்கலைக் கழகத்திலேயே உயர்ந்த பதவி கிடைச்சிருக்கும்.’’

ப்ரதாவை விவாதத்தில் வெல்வது ரொம்பக் கடினம். ப்ரதாவா கொக்கா? எதைப் பற்றி வேண்டுமானாலும் அவளுடன் பேச முடியும். ஆனால், அவளுக்கு எதிரான நிலையைக் கொண்டால், தோல்வி நமக்குத்தான்.

ஆரம்பத்திலேயே என் அம்மாவிடம் அடித்துக் கொண்டேன். கேட்கமாட்டேன் என்றான்.

அம்மா, எங்கேயோ கல்யாணத்தில் தனக்குத் தூரத்து உறவாக இருந்த மிஸ்டர் பாணியைச் சந்தித்தாளாம். சாரங்கபாணியின் சுருக்கம். ரொம்பப் பெரிய ஆளாம்! அநேக வெளி நாடுகள் எல்லாம் சுற்றி இருக்கிறாராம்.

விஷயம் வந்தது. அவருடைய பெண் ப்ரதாவை நல்ல இடமாகக் கொடுக்க வேண்டும் என்று அவருக்கு ஆசையாம். வழக்கமான ஆசை! ஆசாரம், பண்பாடு எல்லாவற்றையும் காற்றில் பறக்க விடும் ஒவ்வொரு தந்தைக்கும் வரும் ஆசை. தன் பெண்

# உள்ளமும் வெளியும் ஒன்றானால்...

சுந்தரராஜன்.



மட்டும் நல்ல பண்பாடு, ஆசாரம் மிக்க இடத்தில் வாழ்க்கைப்பட வேண்டும் என்ற ஆசை.

''என்னம்மா நீ. அவாளெல்லாம் நமக்குச் சரிப்பட்டு வருவாளா?'' என்றேன்.

''ஏன்டா வரமாட்டா?''

''போம்மா, வெளி நாடு போய்ப் படிச்சவன்னு சொல்றே! அவனை நான் கல்யாணம் பண்ணிண்டு... உனக்கு எப்படியம்மா அவ சரிப்பட்டு வருவா?''

அம்மா என்னைப் பார்த்தாள்.

''நீ எனக்காகத்தான் கவலைப்படறியா? உன்னைப் பொறுத்த வரைக்கும் பிரச்னை இல்லையோன்னோ?''

நான் தயங்கினேன்.

''கவலைப்படாதே. நான் உன் கூட வந்து இருக்கப் போறது கிடையாது. பொண்ணைப் பார்த்தா எனக்குப் பிடிச்சுப் போச்சு. வெளி நாட்டிலே படிச்சாலும், கண்ணியமா இருக்கான்; அடக்கத்தோட இருக்கா. புடவை தான் கட்டிக்கறு. என் பிள்ளை உசந்த இடத்திலே மாப்பிள்ளை ஆகணும்னு ஆசை இருக்காதாடா?''

நான் மௌனமானேன்.

போய், எல்லோருமாக ப்ரதாவைப் பெண் பார்த்தோம்.

ப்ரதா நன்றாக இருந்தாள். அவளைப் பார்த்தவுடன் என் இதயம் துள்ளிக் குதித்தது. ஆஹா, இவள் மட்டும் என் மனைவியானால்....? எனக்குப் பெருமையாக இருந்தது. இவளைக் கையில் பிடித்துக்கொண்டு ஒவ்வொரு நண்பனின் வீட்டுக்கும் போவேன்.

அம்மா சொன்னது சரிதான். அவள் அடக்கத்தோடுதான் வந்து எங்களை நமஸ்கரித்தாள்.

''என்னம்மா, ஜானகி?'' என்றார் பாணி—என் வருங்கால மாமனார்(!)

''நான் என்ன சொல்றது? அவனைன்னா கேக்கணும்?'' என்றாள் அம்மா. அவள் என் கண்களில் பரவியிருந்த மயக்கத்தையும் பிரமிப்பையும் கவனித்து, உணர்ந்து இருக்க வேண்டும்.

''என்ன மிஸ்டர் முருகன்?'' என்றார் பாணி.

நான் ''ம்...ம்'' என்று முனகினேன்.

''ஐ ஆம் ஹேப்பி!'' என்றார் அவர்.

''ப்ரதா, உண்மையிலேயே எனக்கு ஆச்சரியமாத்தான் இருக்கு!'' என்றேன் நான் அவளைப் பார்த்தபடி. இதோ, இத்தனை அழகும் எனக்கே எனக்குத்தான் என்ற எண்ணமே வெறி ஏற்றியது.

''ஏன், ஆச்சரியத்துக்கு என்ன இருக்கு?''

''இல்லே...'' — நான் தயங்கினேன். என்ன என்று சொல்வது?

''எங்கப்பாவுக்கு ஒரு என்ஜினியர் மாப்பிள்ளை வேணும்னு ஒரே வெறி! அதனால்தான் உங்களைப் பார்த்ததும் பிடிச்சுப் போச்சு. தவிர, உங்க அம்மாவையும் அவருக்குத் தெரியுமாம்....''

''அவரை விடு! உன் விஷயம்....''

''எனக்கு உங்களைப் பார்த்தவுடனேயே பரந்த மனப்பான்மை கொண்டவராகத்தான் இருக்கணும்னு தோன்றிவிட்டது.''

பரந்த மனப்பான்மையா?

''நீங்களும் இவ்வளவு படிச்சு இருக்கிறீர்கள். கண்டிப்பா பெண்கள்னு அவங்களை வீட்டுக்குள்ளே அடைச்சுப் போடணும்னு நினைக்கிறவரா இருக்க மாட்டீர்கள்னு தெரிஞ்சு போச்சு...''

அவள் எப்படி என்னென்னவோ கண்டு பிடித்து இருக்கிறாள்!

''ப்ரதா, நீ வேலைக்குப் போகணும்னு ஆசைப்படறயா?''

''பின்ன, வேண்டாமா?''

என் உற்சாகம் அப்போதுதான் சற்று விரிசல் கண்டது.

''நீங்களே சொல்லுங்கள். என் தகுதியை வச்சிண்டு நான் சும்மா இருந்தா அது நியாயமா?''

ஐயோ, ப்ரதா, உன்னிடம் எப்படி என் உணர்ச்சிகளை விவரிக்கப் போகிறேன்? நீ வேலைக்குப் போவதில் எனக்குக் கொஞ்சம் கூட இஷ்டம் கிடையாது. ப்ரதா, நீ எனக்கு உரிமையானவள். எனக்கே உரிமையானவள்! வேறு யாரும் உன்னை ஏறிட்டுப் பார்ப்பதைக் கூட என்னால் பொறுக்க முடியாதே!

அவள் கண்களில் தெரிந்த குழந்தைத்தனமான மலர்ச்சியும், நம்பிக்கையும் என்னைப் பேச முடியாமல் செய்தன. என்னால், அவளிடம் என் எண்ணங்களை விவரிக்கவே முடியாமல் போய்விட்டது.

**மா**லை வீடுவந்ததும் இருவருமாக வெளியே கிளம்புவோம். எனக்குள் பெருமை பிய்த்துக் கொண்டு ஓடும். ஆஹா, இதோ ப்ரதா என் கூட வருகிறாள்.

ஷாப்பிங் முடித்துக் கொண்டு வரும்போது ப்ரதா ஒரு கேள்வி கேட்பாள். என் பெருமையின் ஒருமூலை எரிச்சலாக மாறிப்போகும்.

''உங்கள் நண்பரைப் பார்த்துவிட்டு வரலாமா?''

நண்பர் என்பது ஒரு நாள் மோகனாக இருக்கலாம்; ஒரு நாள் ராஜன்; ஒரு நாள் கோபாலன்...

''ம்...ம்...'' என்பேன். வேறு என்ன சொல்வது? அழகிய மனைவி ஆயிற்றே?

பிறகு அவன் வீட்டுக்குப் போவோம். அவனுடன் எதைப் பற்றியாவது விவாதிப்பாள் ப்ரதா.

மோகனுக்கு உலக விஷயங்கள் பற்றித் தெரியும். ஸ்ரீதரனுக்கு ஆங்கிலப் புத்த

* ''நேற்று காலையில் காலண்டர் மாட்டத் தூணில் ஒரு பெரிய ஆணியை அடிக்கப் போய்த் தூண் இரண்டாகப் பிளந்துடுச்சி...''

''அடடே அப்புறம்?''

''தூண் பிளந்ததைப் பார்த்த ஹவுஸ் ஓனர் நரசிம்ம அவதாரம் எடுத்துட்டார்...''

- என்.எஸ்.வி. குருமூர்த்தி



"அதான் எல்லா விரல்களுக்கும் மோதிரம் போடுறதா பெண்ணோட அப்பா சொல்லிட்டாரே. இன்னும் என்ன யோசனை?"
"கால்விரல்களுக்கும் சேர்த்தான்னு பையன் தெரிஞ்சுக்க ஆசைப்படுகிருன்!"

-அ. இராமதாஸ்



கங்கள் பற்றி. ரவிக்கு அரசியல் தெரியும். கண்ணனுக்கு ஆங்கிலப் படங்கள் பற்றித் தெரியும். ப்ரதாவுக்கோ எல்லாவற்றையும் பற்றித் தெரியும். எனக்கோ எதிலும் குறிப்பிட்ட மாதிரி ஒன்றும் தெரியாது.

நான் வழக்கமாக விவாதத்தில் கலந்து கொள்ள மாட்டேன். உள்ளத்தை அழுத்திக்கொண்டு இருக்கும் கோபம், வாயைத் திறக்க விடாது.

''முகுந்த். நீங்கள் ஏன் எங்க பேச்சில் கலந்து கொள்வது இடையாது?'' என்பாள். நான் பேசாமல் இருப்பேன்.

அவள் என்னை 'முகுந்த்' என்றுதான் கூப்பிடுவாள். எனக்கும் அது பிடித்தது. அவளுடைய இனிய இதழ்களில் விளையாடுவது என் பெயர் என்ற உணர்ச்சி இனிமையாக இருக்கும்.

''நான் சொல்லவா? உங்களுக்கு அவங்க மேலே ஒரு அலட்சியம். இல்லையா?''

ப்ரதா, காரணத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளேன். என்னை ரொம்ப உசத்தியாக எண்ணுவதை நிறுத்திவிட்டு, சாதாரண மனிதனாக என்னிப் பாரேன்! எனக்கும் பொறாமை, குறுகிய மனப்பான்மைபோன்ற உணர்ச்சிகள் உள்ளன என அறிந்து கொள்ள மாட்டாயா, ப்ரதா?

"என்னடா ரொம்பப் பயந்தயே. எப்படி இருக்கா?''

நான் அம்மாவைப் பார்த்தேன். இங்கே இரண்டு நாள் விடுமுறைக்காக வந்திருந்தோம்.

அம்மாவிடம் சொல்லி விடலாமா? அம்மாவைக் கட்டிக் கொண்டு, ''அம்மா, அவளை நீதான் புத்தி சொல்லித் திருத்தணும். அவ பாட்டுக்கு என்னோட எல்லா நண்பர்களோடயும் சகஜமாப் பழகி எனக்கு எரிச்சல் மூட்டறா'' என்று அழுது தீர்க்கலாமா?

வேண்டாம்! அம்மாவால் என்ன செய்ய முடியும்?

''என்னவோ அவ வேலை பார்க்கணும்னு ஆசைப்பட்டதா அவ அப்பா சொன்னர்.''

''தெரியலையே!''

''அவ ஆசைப்பட்டா, கொஞ்ச நான் பாத்துட்டுப் போட்டும்டா. பெரிய இடத்துப் பொண்ணு....''

எனக்குச் சட்டென்று கோபம் மூண்டது.

'போங்கள். எல்லோரும் குட்டிச்சுவராகப் போங்கள். அவள் செய்யும் காரியத்துக்கு நீ வேறு துணையா? அவள்தான் புதுமைப் பெண் என எண்ணிக் கொண்டு, என்னென்னவோ மானம் கெட்ட செயல்கள்...'

"மீட் நளினி! என் தோழி!''

நான் என் கண்களை நிமிர்த்திப் பார்த்தேன். ப்ரதாவின் அருகில் ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். கிட்டத்தட்ட ப்ரதாவின் வயது, உயரம், உடல் வாகு...

''ஹலோ!'' என்ருள் நளினி.

''ஹலோ!''

''இவள் என்னுடன் பி.யு. பண்ணினுள்.''

நான் மெல்லமாகச் சிரித்தேன்.

''இன்னிக்குத் தற்செயலா இரண்டு பேரும் யு. எஸ். ஐ. எஸ். ல பார்த்துண்டோம்...''

நளினி உட்கார்ந்து கொண்டாள்.

கொஞ்சம் வக்கிரமான சந்தோஷமாக இருக்கிறது. ப்ரதாவுக்குக் கூடப் பெண் தோழிகள் உண்டா?

இருவரும் என்னென்னவோ பேசினுர்கள். நானும் அவ்வப்போது கலந்து கொண்டேன். நளினி என்னை ஏறிட்டுப் பார்க்கையில் எல்லாம், உடலில் ஒரு கிளுகிளுப்பு பரவுவது போல உணர்ச்சி! 'சீ, இதெல்லாம் தப்பு' என்று சொல்லிக் கொண்டேன்.

தூரத்திலிருந்து பார்த்தபோதே தெரிந்தது நளினி மட்டும் தனியாக அந்த 'பஸ் ஸ்டாப்'பில் நின்று கொண்டிருந்தாள். உள்ளம் களிப்புடன் தொண்டை வரை வந்து விட்டுச் சென்றது. அவள் அருகில் போய் என் 'மோட்டார் பைக்'கை நிறுத்தினேன்.

''ஹலோ!''

அவள் முகம் மலர்ந்து போனது.

''ரொம்ப நேரமாகக் காத்துக்கொண்டிருக்கிங்களா?''

''ஆமாம், இந்த பஸ்...''

''நெவர் மைண்ட்! வாங்க நான் கொண்டு விடறேன்.''

அவள் தயங்குவது தெரிந்தது.

''என் மேலே பயமா?''

''நோ...நோ...'' — அவள் சிரித்துக் கொண்டே வண்டியின் பின்னல் ஏறிக் கொண்டாள்.

என் வார்த்தைகள் என்னைச்சுட்டுக் கொண்டிருந்தன. அவள் என்னை நம்புவது உண்மையாக இருக்கலாம். ஆனல் நான் அவள் நம்பிக்கைக்குத் தகுந்த மாதிரி நடக்கிறேனு?

நான் என்னைச் சரி செய்து கொள்வது போல, அவள் மேல் ஒரு தடவை சாய்ந்து அந்த ஸ்பரிசத்தை அனுபவித்தேன். அவள் மறுத்தும் ஒரு ஹோட்டலுக்கு அழைத்துப் போனேன். பட்டும் படாததுமாகக் கைகளை உரசினேன்.

சீ, கேவலமான புத்தி!

என் மனத்தை அடக்கினேன். ப்ரதாவைப் பழிவாங்குவது போன்ற திருப்தி! அவளுக்கு இது தெரிந்தால் என்ன செய்வான். அவன்தான் புதுமைப் பெண்ணாச்சே — கணவனாவது. மனைவியாவது என்ற எண்ணம் உடையவள்தானே! ,

வண்டி அவள் வீட்டுக்கு முன்னால் போய் நிற்கையில், அவள் என்னையும் வீட்டுக்குள் அழைத்தாள்.

''வாங்களேன், அப்பாவைப் பார்த்து விட்டுப் போகலாம்.''

எனக்கு மனசுக்குள் உறுத்திக் கொண்டிருந்தது.

இவள் குழந்தை மாதிரி. என் மன வக்கிரங்களைக் கொஞ்சம் கூடச் சந்தேகிக்காமல்...

நான் உள்ளே போனேன். கூடத்திலேயே அவள் அப்பா இருந்தார்.

''அப்பா, இவர்தான் மிஸ்டர் முகுந்தன். என் ஃப்ரண்ட் ப்ரதாவின் கணவர்.''

அவர் என்னை நிமிர்ந்து பார்த்தார். பார்வை என்னைத் தகிப்பதுபோலப் பட்டது.

''நீ இவரோடயா சேர்ந்து வந்தே?''

''ஆமாம்ப்பா...'' அவள் குரல் உடைந்து கொண்டு இருந்தது.

''ஸ்கூட்டர்லயா?''

''ஆமாம்ப்பா...மோட்டார் பைக்கிலே''

''என்னது?'' — அவர் விருட்டென்று தம் இருக்கையில் இருந்து எழுந்தார். ''கழுதை! என்ன ·· துளுத்துப் போச்சா? பர புருஷனோட ஸ்கூட்டர்ல வந்துட்டு, அதைப் பெருமையா வேற பேசறியே! நாளைக்குக் கல்யாணம் நடக்க வேண்டாமா? யார் பண்ணிப்பான் உன்னை?''

அவள் கண்கள் குளம் வெட்டத் தயாராயின. நான் திகைத்துப் போனேன். என் விஷமத்தனமான செயலுக்கு இவள் பலியாகிறாளே!

''சார்....''

அவர் கோபாக்கினியுடன் என் பக்கம் திரும்பினார்.

''நீங்க, கம்மா இருங்கோ. ரொம்ப யோக்கியர் மாதிரி பேசப் போறேளாக்கும்? கல்யாணம்னு லைசென்ஸ்னு நெனைச்சுண்டு இதெல்லாம் பண்றேளாக்கும்?''

வார்த்தைகள் என் மேல் மோதின. அதில் இருந்த உண்மை என்னைத் தீவிரமாகத் தாக்கியது.

வாசலில் நிழலாடியது. திரும்பினோம் மூவரும்.

ப்ரதா!

அவள் என்னருகில் வந்து நின்றாள்.

''இன்னும் இங்கே என்ன வேலை? கிளம்புங்கோ!''

''ப்ரதா நீ எங்கே இப்படி....''

ப்ரதா குரலில் உணர்ச்சி மாற்றங்கள் இன்றிப் பேசினாள்.

''நளினியைப் பார்க்கலாம்னு வந்தது நல்லதாப் போச்சு. இவர் என்ன இவ்வளவு கேவலமாப் பேசறார் — கேட்டுக் கொண்டு...''

''ஓஹோ, பதிவிரதையா? புருஷன் பண்றது ரொம்பச் சரின்னு சப்பைக் கட்டு கட்டறயாடி பெண்ணே?''

அவள் அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

''ஆமாம், அப்படித்தான். ஒண்ணு உங்களை மனுஷன்னு மதிச்சு, உங்க எண்ணம் தப்புன்னு நிரூபிக்கணும்! ஆனா நீங்க மனுஷா மாதிரியே பேசலியே! சோ, ஜஸ்ட் இக்னோர் பண்ணிட்டுப் போறோம்!''

அவள் நளினியின் பக்கம் பார்த்தாள்.

''நளினி, உங்கப்பாவுக்குத்தான் புத்தி குறுகி இருக்கு — ஒத்துக்கலாம்! படிச்ச நீ கூடவா அவர் பேசறது தப்புன்னு சொல்ல முடியலே?''

வாசலை நோக்கி நடந்தவள் பின் நான் தொடர்ந்தேன்.

**வ**ண்டியைக் கிளப்புகையில், ப்ரதா யோசனையுடன் பேசினாள். ''சே, எல்லாரும் உங்களை மாதிரியே பரந்த மனப்பான்மையுடன் இருப்பாங்கன்னு நினைச்சது தப்பாப் போச்சு...''

அழுது கொண்டிருந்த என் இதயத்தை அடக்கிக் கொண்டே நான் சொன்னேன்: ''ஐ ஆம் சாரி ப்ரதா....''

''நீங்க எதுக்கு வருத்தப்படணும்? நம்ப மேலே தப்பு இல்லாதபோது, என்ன பயம்? இப்ப எனக்கு எதைப் பத்தித் தெரியுமா கவலையா இருக்கு?''

''என்ன ப்ரதா?''

''ஒருவேளை உங்க நண்பர்கள் எல்லாருமே இதே மாதிரி இருப்பார்களோ? எவ்வளவு படிச்சாலும், நளினி மாதிரியே, அவ அப்பா மாதிரியே இருப்பார்களோ! ஆணும், பெண்ணும் சாதாரணமாகக் கூடப் பழக முடியும்னு ஒத்துக்க மாட்டார்களோ?''

வண்டியில் உட்கார்ந்து கொண்டே நான் கம்பீரமாகச் சொன்னேன்:

''நீ ஏன் கவலைப்படணும்? ப்ரதா? நம்ப மேலே தப்பே இல்லாதபோது கவலைக்கோ பயத்துக்கோ அவசியமே கிடையாது!''

ப்ரதாவும் உட்கார்ந்து கொண்டதும் வண்டி கிளம்பியது.

வாஸ்தவம், ப்ரதாவைப் போல் உள்ளமும் வெளியும் ஒன்றானால், கவலைக்கு ஏது இடம்?



ஒருவர்: எங்க வீட்டிலே நான்தான் மாவு ஆட்டி, அம்மி அரைக்கிறேன்னு கரெக்டா சொல்லிட்டீங்களே!

கைரேகை சோதிடர்: அதான் உங்க கையிலே .ரேகையே இல்லாம மழுமழுன்னு இருக்கிறதைப் பார்த்தாலே தெரியுதே!

—தீபப்ரியா


உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தியின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும் காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம் நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப் படியவைத்து அதற்குத் தேவையான எல்லா ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரைவளம் உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும் தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
EGG
Halo
SHAMPOO
HES. G. 6. TM.

# இரண்டே வருடங்களில் விற்பனையில் முதல் இடம்

# JOHNSON®

# மிக்ஸர் கிரைண்டர்

25 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமும், இந்தியாவிலே சமையலறைச் சாதனங்களில் ஏராளமான வகைகளும் கொண்ட ஜான்சனின் சீரிய படைப்பு ஜான்சன் மிக்ஸர்—கிரைண்டர். எங்கெங்கும் அறிமுகப் படுத்தினதால் ஐயமின்றி தலை சிறந்ததென இரண்டே வருடங்களில் பீடு நடை போடுகிறது.

ஏன் எனக் கேட்பின் :

---

இலவசம் ! தனி எவர்சில்வர் கிண்ணம்! உலர்ந்த அரவைக்கென தனியான எவர்சில்வர் கிண்ணமிருப்பதால் மசாலாக்களின் மணமும், ருசியும் மில்க் ஷேக்குகளில கலக்காமல் பாதுகாப்பு அளிக்கிறது.



---




அதிக சுகாதாரம் பாகங்களை எளிதாக கழட்டும்படி தயாரிக்கப் பட்டிருப்பதால் நீங்கள் துப்புரவாகக் கழுவ முடிகிறது. உணவுப் பண்டங்களின் துகள்கள் உள்ளே நின்று விடும் சந்தர்ப்பம் இல்லை.

---

முழுமையான பாதுகாப்பு. பிளேட் பாகங்கள் இரு கிண்ணங்களிலும் உறுதியாக இணைக்கப் பட்டிருப்பதால் இயக்கத் தில் பிளேட் பறந்து விடாமல் பாதுகாப்பு அளிக்கிறது.



---



கன ரக ஓட்டம் அதிக உறுதியான 450 வாட் மோட்டார் நமது இந்திய சமையலுக்கென்றே சிறப்பாக அமைக்கப் பட்டிருக்கிறது. 45 நிமிடங்கள் நிறுத்தாமல், தடையின்று ஓட்டலாம்.

---

மற்ற சிறப்பு அம்சங்கள்:

- மோட்டார் குளிர்ச்சியாக இருப்பதற்கென தனியான காற்றோட்டம்
- சீரிய கலவை மற்றும் அரவைக்கென மேம்படுத்தப்பட்ட பிளேட் அமைப்பு
- ஒரு வேகத்திலிருந்து மற்றொரு வேகத்திற்கு செம்மையாக மாற்ற இஞ்சர் ஸ்விட்ச்
- ஒரு வருடத்திற்கு உத்திரவாதம் ஜான்சன்

**JOHNSON®**

## இயக்கத்திலும், ஆற்றலிலும் இணையிலாச் சிறப்பு கொண்டது




ASP-BE-800IA

# கருகு பதில்கள்!

⌘ மதுரைக் கண்ணன், அம்பாலா

கே: பெண்கள் குழாயடிச் சண்டையை ரசிப்பீர்களா?

ப: இப்போது வீட்டுக்கு வீடு குழாய்கள் வந்துவிட்டதால் குழாயடிச் சண்டைகள் குறைந்து விட்டன. ஆகவே அதே பாணியில் நடக்கும் 'கேள்வி-பதில்' பகுதியடிச் சண்டைகளை ரசிக்க ஆரம்பித்துவிட்டேன்.

⌘ சரோஜா சக்கரவர்த்தி, திருவொற்றியூர்

கே: பிரெஞ்சுமொழி கற்க ஆசைப்படுகிறேன். ஆனால் ஐம்பது வயதாகிவிட்டதே என்று பார்க்கிறேன்.

ப: இந்த 'வயதாகி விட்டதே' என்ற பல்லவி மகா அபத்தமானது. ராஜாஜி எத்தனையாவது வயதில் 'சக்கரவர்த்தித் திருமகன்' எழுதினார்? பிகாஸோ சுமார் 400 ஓவியங்களை எண்பத்து ஐந்து வயதுக்குப் பிறகுதான் வரைந்தார். வின்ஸ்டன் சர்ச்சில் 79வது வயதில் நோபல் (இலக்கிய) பரிசு பெற்றார். எந்த வயதிலும் எதையும் செய்ய இயலும் — மனமும் திறமையும் இருந்தால்!

⌘ என். சக்கரபாணி, கோவை

கே. இந்தியர்களுக்கு நகைச்சுவை உணர்வு குறைவு என்கிறார்களே?

ப: உண்மைதான். ஏர்-இந்தியா இரண்டு துண்டுப் பிரசுரங்களை அபார நகைச்சுவையுடன் எழுதி வெளியிட்டது. 'ஆகா இப்படி யெல்லாம் எழுதலாமா?' என்று சிலர் கூக்குரல் இட, இரண்டு புத்தகங்களும் வாபஸ் செய்யப்பட்டு விட்டன. இரண்டு புத்தகங்களையும் நான் படித்திருக்கிறேன். ஏ-ஒன் ஹ்யூமர்!

⌘ வி. சண்முக சுந்தரம், போடிநாயக்கனூர்

கே. 1954ம் ஆண்டு கல்கியில் அமரதாராவிற்கு ஓவியம் வரைந்த மணியம் என்னும் ஓவியர் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ப: நல்ல கேள்வி கேட்டீர்கள்? 1954க்குப் பிறகு நீங்கள் பத்திரிகை படிப்பதையே நிறுத்திவிட்டீர்களா? அமரதாரா ஓவியர் அமரராகிவிட்டார். அவரது பிள்ளைதான் ம. செ. (மணியம் செல்வன்) என்னும் ஓவியர். (வஸந்த்! வஸந்த்! கதைக்குப் படம் போடுபவர்.)

⌘ எம். ரமணி, கிணத்துக்கடவு

கே. உலக கொடுங்கோலன் வாழ்க்கையையும் படமாக்குகிறார்கள், மகாத்மாவின் கதையையும் படமாக்குகிறார்கள் இந்நிலை பற்றி...?


ப: "திமுலருமை வெய்யிலிலே, ஈசன் கழலருமை வெவ்வினையிலே" என்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்களே. மகாத்மாக்களின் அருமையைப் பூரணமாக அறிந்து கொள்ளக் கொடுங்கோலர்களைப் பற்றியும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். இரண்டு விதமானவர்களின் வரலாறும் நமக்குப் பாடமாக அமையும்.



⌘ ஆர். திருநாவுக்கரசு, திருமருகல்

கே: ஆண்டவன் அவதாரங்கள் எடுத்தது பெரும்பாலும் நம் நாட்டில் தானே உள்ளது; வெளி நாடுகளில் இல்லையே?

ப: அவர்களுக்கு வெளிநாட்டு மோகம் இல்லாமல் இருக்கலாம். மேலும் நம்முடைய கடவுள்கள் நம் நாட்டில் அவதாரம் எடுக்காமல் வேறு எங்கு எடுப்பார்கள்?




⌘ ஆர். மார்க்கண்டன், விழுப்புரம்

கே. எனக்குக் கிரிக்கெட் பற்றி ஒன்றும் தெரியாது. ஆனால் அதைப்பற்றிப் பேசாவிட்டால், நகரங்களில் யாரிடமும் பேசிப் பழகவே முடியாது போல் இருக்கிறதே?

ப: உண்மைதான். சினிமா மாதிரி கிரிக்கெட்டுக்கும் கவர்ச்சி ஏற்பட்டு விட்டது. வாலிபால், புட்பால் போன்றவைகளை யாரும் லட்சியம் பண்ணுவதாகத் தெரியவில்லை. கிரிக்கெட்டைப் பற்றிப் பேசினால் தான் மதிப்பு என்றாகி விட்டது. (இதோ, நானும் ஒரு கிரிக்கெட் கேள்விக்குப் பதில் சொல்லி விட்டேன்!)

⌘ எஸ். நிரஞ்சனா, புதுவை

கே. 'வறுமையின் நிறம் சிவப்'பில் நீங்கள் என்ன செய்தீர்கள். என்று கேட்டால் மழுப்பி பதில் எழுதுகிறீர்கள். உண்மையைச் சொல்ல ஏன் தயங்குகிறீர்கள்?

ப: அடாடா... விட மாட்டீர்கள் போலிருக்கிறது. சொல்லி விடுகிறேன். சில காட்சிகளில் ஸ்ரீதேவிக்குப் பதில் நான் 'டூப்'பாக நடித்திருக்கிறேன். போதுமா உண்மை!

பரிசு பெறுபவர்:

எம். ரமணி
33-ஏ, கலைவாணர் தெரு,
கிணத்துக்கடவு — 642109

# நெடுங்காலமாக உபயோகித்தாலும், கேடு ஒன்றுமில்லை



OBM 6536 TM

## அவருடைய நைலான் மீன்வலைகள் உறுதியானவை, நீடித்து உழைப்பவை — அவரைப் போலவே இயற்கைச் சக்திகளை எதிர்த்து சமாளிப்பவை

இயற்கையின் தீங்கிழைக்கும் சக்திகளை எதிர்த்து தினந்தோறும் விடியற் காலையில் ஆரம்பமாகிறது மீனவரின் அன்றைய கடினப் போர்.

வெற்றி என்பது அபூர்வம். தன் வாழ்க்கைக்கு வேண்டியதை சம்பாதிக்க ஒவ்வொரு நாளும் தன் உயிரையே பணயம் வைத்து மீன் பிடிக்கிறார்.

ஆனால் இப்பொழுது... ஸ்ரீராம் ஃபைபர்ஸ் தயாரிக்கும் குதிரை மார்க் டஃப்லான் நைலான் மீன்வலை நூலினால் பின்னப்பட்ட அவருடைய மீன்வலைகள் மிக உறுதியாய் இருக்கின்றன. கடல்நீர் மற்றும் கடுமையான வெய்யிலினால் ஏற்படும் கேடுகளை சமாளிக்கின்றன.

இனி அவர் குவியல் குவியலாய் மீன் பிடிப்பது நிச்சயமே!

**ஸ்ரீ ராம் ஃபைபர்ஸ் லிட்**

நைலான் மீன்வலை நூல், நைலான் டயர் கார்ட் மற்றும் நைலான் மோல்டிங் பவுடர் தயாரிப்போர்.



# நோபெல் பரிசு பெற்ற அப்துஸ் ஸலாம்

நோபெல் பரிசு பெற்ற முதல் பாகிஸ்தானியர் என்னும் பெருமைக்குரிய பேராசிரியர் அப்துஸ் ஸலாம் அண்மையில் இந்தியாவில் மூன்று வார காலம் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

1979 ஆம் ஆண்டுக்கான இயல்பியல்(பௌதிகம்)துறைக்கான நோபெல் பரிசு இவருக்கும் ஹார்வர்டைச் சேர்ந்த ஸ்டீவன் வெய்ன்பர்க், ஷெல்டன் கிளாஷோ ஆகியோருக்கும் கூட்டாக வழங்கப்பட்டது.

'இருபதாம் நூற்றாண்டு இயல்பியல் அறிஞர்களின் மகத்தான கனவு' என்று வருணிக்கப்படுகிற ஒரு ஆராய்ச்சியில் இவர்கள் ஈடுபட்டார்கள். இயற்கையின் அடிப்படை விசைகள் என்று புவி ஈர்ப்பு விசை, மின்காந்த விசை, வலுவான, வலுக் குறைவான எதிர்வினைவுகள்–இவற்றுக் கிடையேயுள்ள ஒற்றுமையைப் பற்றிய இந்த ஆராய்ச்சி 'கிராண்ட் யூனிஃபிகேஷன்' என்று வழங்கப் படுகிறது. ஸர் ஐஸக் நியூட்டனிலிருந்து தொடங்கி,மைக்கேல் பாரடே,ஜே.ஸி.மாக்ஸ்வெல்,ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்–எனப் படிப்படியாக உருப்பெற்று வரும் இந்தக்கொள்கைக்கு இப்போது பேராசிரியர் அப்துஸ்சலாம்.இன்னமும் நிறைவடையாத ஒரு கொள்கை இது.

"நோபெல் பரிசு கிடைத்த செய்தி உங்களுக்கு அறிவிக்கப்பட்டபோது அதை எப்படிப் பிரதிபலித்தீர்கள்?" என்று பம்பாயில் பத்திரிகையாளர்கள் கேட்டபோது இவர் சொன்னார்:

"அல்லாவுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டேன். செய்தி கேட்டவுடனே, என்னுடைய இடத்திலிருந்து ஒரு மைல் தொலைவிலிருந்த மசூதிக்குச்சென்று தொழுகைநடத்தினேன்." அந்த அளவுக்கு மத நம்பிக்கை நிறைந்த முஸ்லிம் இவர்.

தமக்கு வழங்கப்பட்ட நோபெல் பரிசுத் தொகை முழுமையையும் அறிவியலை சர்வதேசியமானதாகச் செய்யக் கூடிய அமைப் பொன்றை உருவாக்க நன்கொடையாக வழங்கி விட்டார் அப்துஸ் ஸலாம். அத்துடன் நில்லாமல் இந்த அமைப்புக்கு எண்ணெய் வள நாடுகள் தாராளமாய் நிதி உதவி நல்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

வளர்ச்சி யடைந்த நாடுகளுக்கும் இன்னமும் வளர்ச்சியடையாத நாடுகளுக்கு மிடையேயுள்ள இடைவெளியை நிரப்புவதில் அறிவியல் துறை பெரும் பங்காற்ற வேண்டும் என்பதில் பெருத்த அக்கறை யுடையவர் இவர். அத்துடன், சாதாரண மனிதன் அறிவியல் முறைகளை வாழ்க்கைக்குப் பயன்படுத்தி வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறவர்.

"இந்தியாவும் பாகிஸ்தானும் அறிவியல் சிந்தனைகளைச் சாதாரண மக்களிடையே பரப்புவதில் அவ்வளவாய் அக்கறை காட்டவில்லை" என்பது இவருடைய கணிப்பு.

"அறிவியல் தொழில் நுட்பத் துறையில் மேல் மட்ட வளர்ச்சி மட்டுமே இருந்தால் போதும்,அதன் பலன்கள் தானாகவே பாமர மக்களுக்குக் கிடைத்து விடும்" என்கிற வாதத்தைத்தாம் எப்போதுமே நம்பியதில்லை என்றுகூறுகிறார் அப்துஸ்ஸலாம்.


"வளர்ச்சி யடைந்த நாடுகளில் அறிவியலும் தொழில் நுட்ப ஆற்றலும் பிரமிக்கத் தக்க அளவில் உள்ளன. அங்கு நாம் செல்கிற போது ஏதோ ஒரு தனிப்பட்ட உலகில் இருப்பது போன்ற பிரமையில் நனைகிறோம்" என்கிறார் இவர்.

ஐம்பதுகளின் தொடக்கத்தில் பாகிஸ்தான் போன்ற வளர்ச்சி யடைந்து வரும் ஒரு நாட்டில் இருந்து கொண்டு ஒற்றை ஆளாய் ஆராய்ச்சியில் ஈடுபடுவதில் இருந்த பல சிரமங்கள் இவரை ஐரோப்பாவில் குடியேறத் துரத்தின. இத்தாலியிலுள்ள ட்ரியஸ்டே என்னுமிடத்தில் 1964 ஆம் ஆண்டில் இயரிடிகல் பிஸிக்ஸ் துறைக்கான சர்வதேச அமைப்பு ஒன்றை உருவாக்கினார். தொடக்க காலம் தொட்டு அந்த அமைப்பின் நெறியாளராக இருப்பதுடன், லண்டன் இம்பீரியல் கல்லூரியில் இயல்பியல் துறைப் பேராசிரியராகவும் பணியாற்றுகிறார். நூற்றுக் கணக்கான இயல்பியல் கணித இயல் அறிஞர்களுக்கு மிகவும் ஆரோக்கியமான அறிவியல் சூழலில் ஒன்றாய்ச் சேர்ந்து பணியாற்ற இந்த சர்வதேச அமைப்பு (ICTP) வாய்ப்பளிக்கிறது. இந்த அமைப்பில் பயிற்சி பெற்ற அநேகர் தங்கள் நாடுகளின் அறிவியல் துறைகளில் முக்கிய பொறுப்பு வகித்து வருகின்றனர்.

பேராசிரியர் அப்துஸ் ஸலாம் அவர்களுக்கு இந்தியச் சுற்றுப் பயணத்தின்போது பல அமைப்புக்களின் சார்பில் பாராட்டுக்களும் பட்டங்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. கல்கத்தா பல்கலைக் கழகத்தின் சர்வாதிகாரி தங்கப் பதக்கம், அமிர்தசரஸ் குருநானக் பல்கலைக் கழகத்தின் டாக்டர் பட்டம், தவிர, இந்திய இயல்பியல் கழகம் முதன் முறையாக வழங்கிய ஆர். டி. பிர்லா நினைவுப் பரிசு இவற்றைக் குறிப்பிட வேண் வேண்டும்.

– சுப்ர பாலன்

# தகடுகள் டிஸ்க்ராலாக இருந்தால் உங்களால் சேதம் பண்ண முடியாது



பெரும் வாரியான முக்கிய தொழில் சாலைகளுக்கான இரும்பு நிலக்கரி மற்றும் பிரத்யேக தாதுப் பொருள்களை பெருமளவு கையாளுவதற்கு டிஸ்க்ரால் தகடுகள் மிகவும் உகந்ததாக இருக்கின்றன. டிஸ்க்ரால் தகடுகளின் பயனை எரிக்களவாய்—கூடைகள், தடுப்புத் தகடுகள், மதகுக்கதவுகள், வேகமாக அசைகின்ற தகடுகள், தானிய இயந்திரங்களில் உபயோகிக்கும் பிரத்யேக தகடுகள், சுத்தியல் மில்கள் போன்ற இடங்களில் நன்கு காணலாம் .... முரட்டுத்தனமான உபயோகிக்கும் இடங்களிலும், தேய்வின் பயங்காம் அதிகமாக உள்ள இடங்களிலும் டிஸ்க்ரால் மிகவும் பயன் படுகிறது.

பிரத்யேக தேய்வுத்தடுப்பின் திறத்தினாலும், புத்திசாலித்தனமான உலோகக்கலவையால் செய்யப்பட்டதாலும், டிஸ்க்ரால் தகடுகள், கீறல்களாலும், அரைத்தல்களாலும், அல்லது வெட்டுத-லாலும் ஏற்படுகின்ற சேதத்தைத் தடுக்கின்றன. இதன் பயன், அடிக்கடி இயந்திரங்களின் பாகங்களை மாற்றும் நிலைமையையும், அனாவசியமான நேரச்செலவுகளையும், பணச்செலவுகளையும் தடுக்கிறது. எல்லாவற்றைக் காட்டிலும் டிஸ்க்ரால் கருவிகளை உருவாக்குவதில் எளிமையையும் உறுதியையும் இணைக்கிறது. தகடுகளின் இணைப்பு, இயந்திர வேலைப்பாடு, வெட்டுதல், துளையிடுதல் மற்றும் வளைதல், எல்லாம் எளிது. உங்களுக்கு வேண்டுமா?

**மேலும் விவரங்களுக்கு கீழ்க்கண்டவர்களுக்கு எழுதவும்:**

- டைரக்டர் ஆப் மார்க்கெட்டிங்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி
  லிமிடெட்
  43, சௌரங்கி ரோடு, கல்கத்தா-700 071
- ஜாயின்ட் சீப் ஆப் புரொடக்ஷன் கண்ட்ரோல்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி
  லிமிடெட்
  ஜம்ஷெட்பூர் 831 001
- *சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்*
  *தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி*
  லிமிடெட்
  நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் பில்டிங்
  87, மஹாத்மா காந்தி ரோடு
  பம்பாய் 400 023
- *சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்*
  *தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி*
  லிமிடெட்
  பேங்க் ஆப் பரோடா பில்டிங்
  16, பார்லிமெண்ட் ஸ்ட்ரீட்
  புது டெல்லி 110 001
- *சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்*
  *தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி*
  லிமிடெட்
  20ஜெ, மஹாத்மா காந்தி ரோடு
  பெங்களூர் 560 001
- *சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்*
  *தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி*
  லிமிடெட்
  பார்க் ஸென்டர், 24 பார்க் ஸ்ட்ரீட்
  கல்கத்தா 700 016
- அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி
  லிமிடெட், இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்
  31 நார்த் பீச் ரோடு [மூன்றாவது மாடி]
  மதராஸ் 600 001

**டாடா ஸ்டீல்**

TIS 3563R6

"நேத்து மத்தியானம் உங்க வீட்டுக்கு யாராவது கெஸ்ட் வந்திருந்தாளா..."

—கீழ் போர்ஷன் கல்யாணி உமாவைப் பார்த்துக் கேட்க — அவள் சற்று நேரம் யோசித்தாள்.

"இல்லையே... யாராவது வந்திருந்தா மன்னி சொல்லி யிருப்பாளே...."

"சொல்ல மறந்துட்டாளோ என்னவோ? மத்தியானம் பன்னிரண்டு மணியிலேருந்து ரெண்டு மணி வரைக்கும் உங்க மன்னி யாரோ டயோ பேசிண்டேயிருந்தா..."

கல்யாணி தீர்மானமாகச் சொன்னதும் உமாவுக்குமே சந்தேகம் முளைக்கிறது.

'யாரு வந்திருப்பா.... அப்படி யாராவது வந்திருந்தா மன்னி சொல்லி யிருக்க மாட்டாளோ....'

"ஆமாம்... அவ ஒரு அசடு.... எதைச் சொல்லணுமோ அதை ஒழுங்கா சொல்லத் தெரியாது... மூணாவது வீட்டு வாண்டு தடுக்கி விழுந்து பல் உடைச்சுண்டதைப் பெரிய விஷயமா பின்னிப் பின்னிச் சொல் லுவா...."

இரண்டு படிகளுக்கு ஒரு தாவலாக மாடிக் குப் போனவள் நேரே சமையலறைக்குத் தான் ஓடுகிறாள்.

"மன்னி...."

"என்ன உமா?"

துங்கா சமையலறை யின் ஒன்றரைச் சாண் இடத்தில் தரையில் உட்கார்ந்து நியூஸ் பேப்பரில் சப்பாத்தி களை இட்டுப்போட்டுக் கொண்டு அதே நேரத் தில் அடுப்பில் போட் டிருக்கும் தோசைக் கல் அதிகம் காய்ந்து விடாமலும் பார்த்துக் கொண்டு இந்தண்டை உருட்டி வைத்திருக்கும் பச்சை மாவைத் தின் பதற்கு அலையும் ஒரகத்தியின் ஒன்றரை வயசுக் குழந்தையையும்சமாளித்துக்கொண்டு அஷ்டாவதானம் செய்து கொண்டிருக்கிறாள். எதிர்த்தாற்போல் வந்து நிற்பவளை நிமிர்ந்து பார்க்க நேரமில்லை.

"நேத்து மத்தியானம் யார் வந்திருந்தா நம்ம வீட்டுக்கு?"

துங்காவின் புருவங்கள் யோசனையில் முடிச் சிடுகின்றன.

"யாருமில்லையே... மத்தியானம் பன் னிரண்டு மணிக்கு யார் வந்தா... நான் அப்போ துணி தோய்ச்சு உலர்த்திண்டிருந் தேன். அப்புறம் இட்லிக்கு மாவு அரைச்சு வச்சேன். அப்புறம் நம்ம சுஜிக் குட்டிக்குப் பால் கரைச்சுக் கொடுத்தேன்..."

"போறும் நிறுத்தேன். அவ வீட்டுக்கு யாரு வந்திருந்தான்னு கேட்டா அதுக்கு மாத்திரம் பதிலைச்சொல்லிவிட்டுப் போயேன்



அதை விட்டுட்டு நீ செஞ்ச காரியத்தை எல்லாம் யாரு கேட்டா?''

அப்பொழுதுதான் ஆபீஸிலிருந்து வந்த சுந்தரம் துங்காவின் பக்கத்தில் மாவுக்காகப் போராடும் குழியைத் தூக்கி வைத்துக் கொண்டு மனைவியைப் பார்த்து ஒரு அதட்டல் போட — அவன் அடங்கிப் போகிறான்.

''ஒருத்தரும் வரல்லே...''

''இதைச் சொல்ல இத்தனை நாழி.... கருமம்!'' — உமா தலையில் நாசூக்காகத் தட்டிக் கொண்டு நகருகிறாள்.

''மன்னி காப்பி கலந்தாச்சா... ஒரே தலைவலி....''

—இது மைத்துனன் ரவி. அவன் பின்னாலேயே நெற்றியைத் தேய்த்து விட்டபடி வேண்டா வெறுப்பாகச் சமையலறைக்குள் நுழையும் அவன் மனைவி லலிதா.

இத்தனை பேருக்கும் ஏக காலத்தில் உபசரணைகள் நடந்தாக வேண்டும். நடுவில் சுந்தரம் வேறு.

''ஒரு காப்பி கலந்துண்டு வர இத்தனை நேரமா?'' — கூடத்திலிருந்தே கத்துவான். சூடாக இருந்தால் 'என் தொண்டையைப் பொசுக்கப் பாக்கறயா' என உறுமுவான்.

''சரியான சூட்டுலதானே இருந்தது... அதுக்குள்ளே ஆறிப்போச்சா...''

—இப்படிப்பட்ட சாதாரண வார்த்தைகளை மன்னிப்புக் கோரும் முறையில் கூட துங்கா சொல்லிவிடக் கூடாது.

''போறும் பேசாதே. உள்ளே போய்க் காரியத்தைக் கவனி'' — இப்படி ஒரு அதட்டல் போட்டால் துங்கா சமையலறைக்குள் ஓடி ஒளிந்து கொண்டுவிடுவாள்.

அது என்னவோ இந்த வீட்டில் துங்காவுக்கு இருக்கும் மதிப்பு இத்தனைதான். அவள் இந்தக் குடும்பத்தின் மொத்தப் பிரஜைகளுக்காகவும் உழைத்துக் கொட்ட வேண்டும். ஆனால் அவளது சொந்த அபிப்பிராயத்தைத் தப்பித் தவறிச் சொல்லிவிடக் கூடாது.

'ஜாயின்ட் ஃபேமிலியாக இருந்தா சிக்கனத்துக்குச் சிக்கனம் மனசுக்கும் நிம்மதியாக இருக்கும்....' — இப்படிச் சொன்னவன் சுந்தரம்தான். சுந்தரத்துக்கு அடுத்தவனான ரவிக்கு இது ரொம்பச் சௌகரியமாகப் போயிற்று. கணவன் மனைவி இருவருமே சம்பாதிக்கக் கிளம்பலாம். பெற்றுப் போட்ட குழந்தையைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொள்ள நிரந்தர பேபி ஸிஸ்டர் இருக்கவே இருக்கிறாள் துங்கா. சுந்தரத்தின் செல்லத் தங்கை உமாவின் கல்லூரிப் படிப்பும் பாட்டும் நடனமும் இதனால் பாதிக்கப்படாது....

''மன்னி, என் பிங்க் பிளவுஸ் எங்கே?''

''இதோ....''

''ஐயோ அசட்டு மன்னி... இதுவா பிங்க்? இது ரோஸ்...''

''பிங்குன்னு என்ன, ரோஸ்னு என்ன உமா... எல்லாம் ஒண்ணுதானே?'';

''கஷ்டம் மன்னி உங்களோட. இது பிங்க் இல்லே. அவ்வளவுதான் சொல்லுவேன்.''

''அது வந்து உமா....''

துங்கா செய்வதறியாமல் தடுமாறுவாள். இதற்குள் எங்கிருந்தோ சுந்தரம் பாய்ந்து வருவான்.

''இந்தா, தத்துப் பித்துன்னு கேள்வி கேட்காதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கேன். வழவழான்னு பேசிண்டிருக்கிற நாழில அவ பிளவுஸ் எங்கேன்னு தேடலாம் இல்லே...''

இந்த மிரட்டலில் அவனைத் திரும்பிப் பாராமல் பீரோவில் இருக்கிற அத்தனை துணி மணிகளையும் இழுத்து மடியில் போட்டுக்கொண்டு தேடுவாள். வா துங்கா.

'இதுவா — இந்த பிளவுசா....' —இப்படிக் கேட்கக் கூடப் பயம். மனசுக்குள் இதுவா இருக்குமோ அதுவா யிருக்குமோ என்கிற குழப்பம்.

கடைசியில் அவள் மடியிலிருக்கும் துணிக் குவியலிலிருந்து உமாவே ஒரு ரவிக்கையை உருவுவாள்.

''இதோ இங்கேயே இருக்கு.''

''அதை அவ கிட்ட ஒரு தடவை நன்னாக் காமி. பிங்குக்கும் ரோஸுக்கும் வித்தியாசம் தெரிஞ்சுக்கட்டும்.'' — சுந்தரம் எலெக்ட்ரிக் ஷேவரால் முகத்தில் இழுத்துக் கொண்டே தங்கையிடம் சொல்லுவான்.

'ஆமா... இந்தச் சட்டைக்கும் அந்தச் சட்டைக்கும் என்ன ஏகமா வித்தியாசம் இருக்கு...இது கொஞ்சம் லைட் கலரா இருக்கு; அது சித்த டார்க்கா இருக்கு...'

இப்படி துங்கே கேட்டுவிட அதிக நேரம் ஆகாது. ஆனால், அப்படிக் கேட்டுவிட்டால் வீட்டிலுள்ளோர் வார்த்தைகளாலேயே அவளைப் பிய்த்து விடுவார்கள்.

'என்னைக் கல்யாணம் பண்ணிக்கறப்ப என்னைப் பிடிச்சுத்தானே இவர் பண்ணிண்டார்? இப்ப ஏன் எரிஞ்சு விழறார்? லலிதா, உமா ரெண்டு பேரும் அசட்டுப் பிசட்டுன்னு பொம்மனாட்டிகள் பேசக் கூடாத பேச்சையெல்லாம் பேசறா... அப்போ அதையெல்

சப்-இன்ஸ்பெக்டர்: நீ ஒரு நக்ஸலைட்னு சொல்ருங்களே! உண்மைதானா?



ஏழுமலை: இல்லீங்க! என்னை டியூப் லைட்னு தான் என் சினேகிதங்க கூப்பிடுவாங்க!

-மரிய ஜோசப்

லாம் ரசிக்கச் சிரிக்கிறார். அன்னிக்குநான் புஸ்தகத்திலே படிச்ச ஜோக்கைச் சொல்ல வந்தப்பமாத்திரம், 'போறும். உன் புத்தி சாலித்தனத்தை எல்லாம் முன்னாடியும் காட்டாதேன்னு' எதுக்காகத் திட்டணும்? நான் என்ன அத்தனை அசடாவா இருக்கேன்?'

இது துங்காவின் மனத்துக்குள் எப்பொழுதும் அலை எழுப்பும் கேள்வி.

அன்று அப்படித்தான்.—

உமாவுக்குப் பாட்டுச் சொல்லித் தரும் அம்மாள் வர துங்கா ஓடிப் போய்ப் பாயை விரித்துச் சுருதிப் பெட்டியைக் கொண்டுவந்து வைத்தாள்.

''உமா டிபன் சாப்பிட்டுண்டிருக்கா. உட்காருங்கோ. இதோ வந்துடுவா...''

பாட்டு வாத்தியாரிடம் இதற்குமேல் என்ன பேசுவது என்று தெரியாமல் சற்று நேரம் மௌனம்.

''காப்பி குடிக்கிறேளா?''

''வேண்டாம்மா....இப்பத்தான் குடிச்சுட்டு வந்தேன்....''

''ஆமா.... காம்போதியில மரகதவல்லின்னு பாட்டு இருக்கோல்லியோ... அதுல சரணத்துல கடைசி வரி என்ன... எப்பவோ கத்துண்டது மறந்து போச்சு....''

துங்கா விசாரித்துக் கொண்டிருக்கையிலேயே உமா பாதி தோசையைத் தட்டில் வைத்துக் கொண்டு முணகித் தீர்த்தாள்.

''அண்ணா... மன்னி பாட்டு டீச்சரைச் செமை பிளேடு போடறா....''

''துங்கா!''

சுந்தரம் டைனிங் ஹாலிலிருந்து குரல் கொடுக்க அலறிப் புடைத்துக் கொண்டு உள்ளே ஓடிவந்தாள் துங்கா.

''என்ன...சங்கீத ஞானம் ரொம்ப அதிகமா விடுத்தா அம்மாவுக்கு... கொஞ்சம் பேச விட்டா போறுமே எதிராளி அலறிண்டு ஓடற மாதிரிப் பண்ணிடுவியே... போடி உள்ளே போடின்னு....''

கூடத்திலிருக்கும் பாட்டு டீச்சரின் காதில் விழாத வண்ணம் இகஇகப்பான உறுமல். உமா, மன்னியை எரித்து விடுவது போலப் பார்த்தாள்.

அந்தப் பார்வைக்கு அர்த்தம்:
'பேச ஆளு கிடைச்சா விட மாட்டியே!'

லலிதா தண்ணீர் குடிக்கும் சாக்கில் ஃப்ரிஜ் பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டு புன்னகைத்தாள்.

அந்தப் புன்னகைக்கு அர்த்தம்:
'சரியான மரை கழண்ட கேஸ்!'

துங்காவும் எதிலும் தலையிடாமல் ஒதுங்கித்தான் இருக்கிறாள். இருந்தாலும் சில இக்கட்டான சமயங்களில் வசமாக மாட்டிக் கொள்கிறாள்.



**கண்ணன்: தாலிக்குத் தங்கம் தயார்.**
**முரளி:எங்கே?எங்கே? எப்போதருங்கசொல்.**
**கண்ணன்; நான் கட்டப் போற தாலிக்கு என் காதலி தங்கம் தயார் என்றல்லவா சொல்லவந்தேன்.**
**-லலிதா செல்லப்பா**

''டீ. வி.யில நாளைக்கு 'மதுரை வீரன்' சினிமா'' — கீழ் வீட்டு கல்யாணி உமாவிடம் சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

''அரதைப் பழசு!'' — இது உமா.

பால் பாக்கெட்டுகளும் கையுமாய் உள்ளே நுழையும் துங்காவுக்குச் சட்டெனப் பழசு மறந்து போய்விடும்.

''ஏன், பாட்டெல்லாம் ரொம்ப நன்னா இருக்கும். பத்மினி டான்ஸ் வேறே...''

''ஆமா, இப்ப உங்களைத்தான் ரெவ்யூ கேட்டா. பேசாமப் போங்கோ. அண்ணா வந்தா கோவிச்சப் பார். என்ன வெட்டிப்பேச்சுன்னு.''

இதற்கு மேல் அங்கு நிற்காமல் குடுகுடு வென மாடிக்கு வந்து சேருகிறாள் அவள்.

''இன்னிக்கு உமா, என் ஃபிரண்டோட வீட்டுக்குப் போயிருந்தேன். அவன் ஒய்ஃப் என்ன ஸ்மார்ட் தெரியுமா? ஒரு நாளைக்கு உன்னையும் லலிதாவையும் வீட்டுக்கு வரச்சொல்லியிருக்கா. உங்க ஒய்ப்பையும் கூட்டிண்டு வாங்கோன்னுதான் சொன்னா. நான் சொல்லிட்டேன். 'மேடம், என் ஸிஸ்டரையும் பிரதர்ஸ் ஒய்ஃபையும் அனுப்பி வைக்கிறேன். என் பெண்டாட்டிக்கு இப்படியெல்லாம் சோஷியலா மூவ் பண்ணத் தெரியாது. அவளை அழைச்சுண்டு நான் வெளியில் போறதேயில்லேன்னுட்டேன்...''

சுந்தரம் அத்தனை பேரையும் வைத்துக் கொண்டு துங்கா எதிரில் இருப்பதையே லட்சியம் செய்யாமல் பேசும்போது குன்றிப் போகிறாள் அவள்.

'சமர்த்துப் போறாது... நாலு மனுஷர்களிடம் பழகத் தெரியாது. வாயைத் திறந்தால் ரம்பம்தான்' - இப்படிப் பட்டம் கொடுத்து எத்தனை வருஷங்களாகிறது. கல்யாணமாகிப் பத்து வருடங்களில் எந்த இடத்துக்கும் அழைத்துக் கொண்டு போகாமலேயே எப்படி சுந்தரம் தானாக ஒரு அபிப்பிராயம் கொண்டான்?

லலிதா, உமா இவர்களை விட துங்கா படிப்பில் மட்டம்தான். வெறும் பத்தாங் கிளாஸ்தான்.

பிரமாத அழகில்லா விட்டாலும் அதற்கென்று பங்கரையாக இருக்க மாட்டாள். துங்கா. சுமாராகச் சராசரிப் பெண்ணாகத்தான் இருப்பாள்.

ஒவ்வொரு பெண்ணைப் போல ஆங்கிலமும் தமிழுமாகக் கலந்து பேசத் தெரியாது. அதற்காக ஒரேயடியாய் ஆங்கில அறிவு பூஜ்யமுமில்லை. ஆங்கிலம் தெரிந்த அத்தனை பெண்களுமா தைரியமாகப் பேசுகிறார்கள்?

இதையெல்லாம் இவளைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு முன்பாவது சுந்தரம்

யோசித்திருக்க வேண்டும். இப்பொழுது இவனைத் திட்டி என்ன பயன்?

அடுத்த வீடு, கீழ் போர்ஷன் யாரிடமும் அவள் பேச்சுக் கொடுக்கக் கூடாது. இப்படி சுந்தரம் சட்டம் போட்டு வைத்திருக்கையில் யார் வந்திருக்க முடியும்?

முதலில் உமா அலட்சியமாகத்தான் இருக்கிறாள். ஆனால் அடிக்கடி கல்யாணி சொல்லும்போது உஷாராகிறாள். எல்லாரும் காலையில் கிளம்பிப் போனால் மாலையில்தான் வீடு திரும்புவார்கள். இடைப்பட்ட நேரத்தில் வீட்டில் துங்காவும் சுஜியும்தான்.

சுஜிக்குப் பேச்சு இன்னும் வரவில்லை.

வேறெ யார் வருகிறார்கள்...?

''மன்னிக்கு உறவுக்காரா யாராவது வந்திருப்பாளோ?''

ரகசியமாய் அண்ணனைக் கேட்கிறாள்.

''மெட்ராஸ்லே இவளுக்கு யார் இருக்கா? எல்லாம் கொறநாடாச்சேரி கிராமத்தோட சரி....''

இளக்காரமாய்ப் பதிலளிக்கிறான் சுந்தரம்.

''என்ன உமா, இப்பல்லாம் மாடியில அடிக்கடி பேச்சுக் குரல் கேட்கிறது. உங்க மன்னி வீட்டில யாருமில்லேங்கற தைரியத்துல என்னமா சத்தம் போட்டுப் பேசறா... ஒரே சிரிப்பும் அமர்க்களமும்...''

''யாரு வாரான்னு நீயாவது பார்க்கக் கூடாதா கல்யாணி'' — உமா தவிதவித்துப் போகிறாள்.

குழந்தை கொஞ்சம் வளர்ந்தாலும் வீட்டுக்கு யார் வந்தான்னு சொல்லும். இந்த அசட்டு மன்னிக்கு எங்கே இருந்து இத்தனை சாமர்த்தியம் வந்தது. கேட்கக் கேட்கச் சொல்ல மாட்டேங்கறாளே... ஒருத்தருமே வரலேயேன்னு கையை விரிக்கிறாளே...

உமாவுக்கு மேல் தவித்துப் போகிறான் சுந்தரம்.

''இது அசடுன்னு தெரிஞ்சு யாராவது வந்து இப்படிப் பேச்சுக் கொடுக்கிறாப்பல கொடுத்து, வீட்ல இருக்கிற சாமான்களைக் கொள்ளையடிச்சுடப் போறா...''

மாடிக்குப் போகக் கீழ் போர்ஷனில் இரண்டு வாசற் கதவுகள் உண்டு. இரண்டில் ஒன்றை உட் பக்கமாகப் பூட்டிவிட்டு மற்றதை உபயோகித்துக் கொண்டிருந்தான் சுந்தரம். இன்று அந்தப் பூட்டைத் திறந்து, கீழ்ப் போர்ஷன் பக்கமாய்த் தாழிட்டுப் பூட்டிக் கொள்கிறான் அவன்.

''மாடியிலே பேச்சுக் குரல் கேட்டா எனக்குப் போன் பண்ணுங்கோ....''

—கல்யாணியிடம் சொல்லி வைக்கிறேன்.

இரண்டு மூன்று நாட்கள் ஏதும் இல்லை. மூன்றும் நாள் போன் வருகிறது. சுந்தரம் அவசரம் அவசரமாய் ரவியின் ஆபீசுக்கு போன் செய்து அவனையும் அழைத்துக்கொள்கிறான்.

''எப்ப வந்தா...'' — கல்யாணியிடம் ரகசியமாய் வினவிக் கொண்டே உள்ளே சுந்தரம் சத்தப்படாமல் பூட்டைத் திறந்து கொண்டு மாடிக்குப் போக, ரவியும் பின் தொடர,

மாடியில் துங்காவின் கலகலப்பான பேச்சுக் குரல்.

''மரகத வல்லி கீர்த்தனை உங்களுக்குத் தெரியுமா. — சரணத்துல கடைசி வரியை மாத்தி அன்னிக்குப் பாடிப் பார்த்தேன். சரியா வந்தது. கடைசி சங்கதிதான் கொஞ்சம் பிசிறிற்று. உமாவைக் கேட்டா சொல்லித்தர மாட்டா. ஏதாவது குதர்க்க வாதம் பண்ணுவா. மிஞ்சிப் போனா உங்களுக்குப் பேசவே தெரியலேன்னு மட்டம் தட்டி வச்சுடுவா. நீங்களே சொல்லுங்கோ. நான் ஒழுங்காப் பேசலையா? என்னவோ இவா மனசுல இவாதான் அதிமேதாவிகள்னு நினைப்பு. என் ஒர்ப்படி லலிதா பேசிக் கேட்டிருக்கேளோ... இங்கிலீஷ் உச்சரிப்பு மகா மட்டமா இருக்கும். எங்காத்துக்காரர் அதுக்கு மேலே... ஒண்ணுந் தெரியாது. ஒண்ணுந் தெரியாதுன்னாலும் என்னை அடக்கத்தான் தெரியும். பெண்டாட்டியை எப்படி வச்சுக்கணும்னு தெரியாது. இவா எல்லாரும் பின்னாடி அவஸ்தைப்படப் போறா. இப்போ என்னை இப்படி அடக்கி அடக்கி வைக்கிறாளோல்லியோ... அதுக்குக் கூலி பகவான் தருவார்...''



மகன்: அப்பா இன்னைக்கு எம்ப்ளாய்மெண்ட் ஆபீசுக்குப் போய் என்னுடைய கார்டையும் ரினுவல் செய்யணும்.

தந்தை: அப்படியே என்னுடைய கார்டையும் எடுத்துக்கிட்டுப் போய் ரினுவல் செய்திடு.

தாத்தா: என்டாப்பா இந்த வயசான காலத்திலே என்னால நடக்க முடியாது அப்படியே என்னுடைய கார்டையும் எடுத்துக்கிட்டுப் போய் ரினுவல் பண்ணிடு. -கி. மோகன்

''என்னது... நான் எதுக்கு சாபம் கொடுக்கணும்கிறேளா... அதுவும் சரிதான். ஏதோ எரிச்சல்லே சொன்னேன். அதை விடுங்கோ. இந்தக் கலரை நீங்க பிங்குன்னு சொல்லுவேளா... ரோஸ்னு சொல்லுவேளா...''

இதற்கு மேலும் பொறுக்க முடியாத சுந்தரம் கூடத்துள் பிரவேசிக்க — சுவரோரமாய்ச் சாய்ந்து உட்கார்ந்து சுவாரஸ்யமாய்ப் பேசிக் கொண்டிருக்கிறாள் துங்கா. குழந்தை தூங்கிக் கொண்டிருக்கிறது...

வேறு.... வேறு... ஒருத்தருமில்லே!

**படம் பார்ப்பதற்கு முன் எதிர்பார்ப்புகள்:**


தேவர் படம். யானைப் படம். கமல் படம். மூன்றும் நினைத்தாலே சேரமாட்டேன் என்கிறது. கமல் 'குரு' பாணியில் ஏதாவது ஓவராகச் செய்து — பயமாக இருக்கிறது.

**படம் பார்த்தபின் எண்ணங்கள்:**

கமல் இயல்பென்றெண்ணி காமெடியாகப் பண்ணுவது சோபிக்கவில்லை.
ரவீந்தர் ரொம்ப அலட்டல். ஆரம்பத்தில் வந்து அப்புறம் காணமல் போகும் ஸ்ரீப்ரியா.
இளையராஜா இசை தூக்கல். ஹிட்டாகும் பாடல்கள். கதையில் ஒரு 'இது' இல்லாமல் படத்திலும் ஒரு 'இது' இல்லாமல் போய்விட்டது. கமலும் ரவீந்தரும் அடித்துக் கொள்வதும், போலீஸ் கண்டு ஓடுவதும், விலங்கு டிரெயினில் கட்டாவதும் சுவை.
நம் பாஷையில் பேசுவதை யெல்லாம் புரிந்து கொண்டு பதில் சொல்லி, புட்பால் விளையாடி, கார் நெம்பர் சொல்லி ஸ்கூல் பெல்லடிக்கும் சினிமா யானை.
ஒரே சமயத்தில் கராட்டே, கம்பு, பாக்ஸிங், கத்திச் சண்டை என்று ஜமாய்த்துக் காதலி மனம் கவரும் சினிமா நாயகன்.
கற்பனையில் பாட்டுப் பாடி, இடையிலே வடைலாடிக் காதலனைக் கரம் பிடிக்கும் சினிமா நாயகி.
எல்லாம் நடக்கும்வரை சாவகாசமாக இருந்துவிட்டுக் கடைசிக் காட்சியில் வந்து கைது பண்ணும் சினிமாப் போலீஸ்!
எது எப்படியானாலும் கடைசி பட்டாஸ் சண்டையில் கை தட்டி, ஜெயமாலினியில் கதகதப்பாகி, கிளைமாக்ஸில் உணர்ச்சிவசப்படும் சினிமா ரசிகர்கள்!

—நளினி சாஸ்திரி

# ராம் லக்ஷ்மன்



ஹர்ஷனுக்குத் தாய்மீது ஆழமான அன்பு உண்டு. ஆனாலும் தானென்ற அகம்பாவமும் அதிகம் உண்டு. கஸ்தூரிக்கு மகனிடம் அளவுக்கு மீறிய பாசம் இருந்தது. ஆனாலும் தாயாகவும், தந்தையாகவும் இருந்து தானே வளர்த்த பின்னே, தன் பேச்சு மீறி நடப்பதா என்று உள்ளூற ஓர் ஆத்திரமும் கூடவே ஏற்பட்டிருந்தது. இதன் விளைவு இருவருக்குள்ளும் மனப் போராட்டமாக வளர்ந்து விட்டிருந்தது. தர்க்கங்கள் சிறு பூசல்கள் தலையெடுத்தன.

சில நாட்களுக்குப் பின்னர் ஊர்மிளா மறுபடியும் ஹர்ஷனைத் தேடிக் கொண்டுவந்தாள். பிறகு தொடர்ந்து வர ஆரம்பித்தாள்.

''ஹர்ஷன்!''-என்று உரிமையுடன் அவனை அழைப்பாள். பற்கள் தெரியச் சிரித்து, சாப்பாட்டறை மேஜை எதிரில் வந்துஉட்கார்ந்து கொண்டு காப்பியையும், டிபனையும் சுவைத்தாள். கஸ்தூரிக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. மரியாதையை உத்தேசித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். வீடு தேடி வந்திருக்கிறாளே!

அதே சமயம், 'இப்படியே விஷயம் போய்க் கொண்டிருந்தால்....' கவலையும், உள்ளூற அரிக்கத் தொடங்கியிருந்தது.

அன்றிரவு சாப்பாட்டறையில் ஹர்ஷன் மெல்ல ஆரம்பித்தான். உணவு வேளையில் அமைதியை விரும்புகிறவள் கஸ்தூரி. சாப்பாட்டின் இடையில், அலுவலகத்துப் பிரச்னைகள், வீட்டு விஷயங்கள், ஊர் வம்பு இவைகளைப் பேச அவளுக்குப் பிடிக்காது. ஹர்ஷன் அதற்கு நேர் எதிரி. அப்போது தான் எல்லாவிதமான பிரச்னைகளும், தட்டுச் சோற்றின் மீது ஏறிக் கொண்டுவிடும்!

அப்படித்தான் அன்றிரவு சாப்பாட்டின் போது அவன் ஆரம்பித்தான். ''ஞாயிற்றுக் கிழமைதானே. அதனால் பகல் சாப்பாட்டுக்கு ஊர்மிளாவை அழைக்கலாம்னு இருக்கேன். ஏதானும் கொஞ்சம் ஸ்பெஷலா செஞ்சா நல்லா இருக்கும்.''

விருக்கெனத் தலை நிமிர்ந்தாள் கஸ்தூரி.

''யார் கிட்டே சொல்றே? இப்பல்லாம் வீட்டு வேலையை நான் செய்யறதில்லே. தெரியுமில்லியா?''கோபத்துடன் கேட்டாள்.

''வீட்டு வேலை செய்யறவங்க கிட்டத்தான் சொன்னேன்னு வச்சுக்கிறது'' — சீறினான் மகன்.

''மாதங்கி என் மருமகள். கண்டவங்களுக்குப் பொங்கிப் போட அவள் வேலைக்காரியில்லே. புரிஞ்சுக்கோ. அந்தப் பெண் ஊர்மிளா இங்கே வரதை நான் விரும்பலே.''

''அம்மா!'' கத்தினான் மகன்.

''அவளுக்கு நம்ம கிட்ட எந்தவிதமான உறவும் கிடையாது. அவள் இங்கே வந்ததே தப்பு. தப்புக்களை நான் தொடர்ந்து அனுமதிக்கப்போறதில்லே....''

''ஆனாலும் உங்களுக்கு ரொம்பக் குறுகிய புத்தியம்மா!''

''உனக்கு விசாலமான புத்தி இருக்குதே! அது உன்னை எங்கே கொண்டு போய் விடும்னு எனக்குத் தெரியும். ஏன் வீண் வாதம் செய்யறே... அவள் இங்கே வரக் கூடாது. நான் வரவிட மாட்டேன்.'' கோபத்தைத் தாளாமல் பற்களைக் கடித்தாள் கஸ்தூரி.

பாதிச் சாப்பாட்டில் கையை உதறிவிட்டு எழுந்தான் மகன். அவள் அதைப் பாராதது போல அசட்டையாக இருந்தாள்.

''ரசம்கூடப் போட்டுக்கலையே. அதுக்குள்ளே...'' மாதங்கி முணு முணுத்தபோது கட்டுக்கடங்காத சினத்துடன் அவளை முறைத்தான் ஹர்ஷன்.

''உன் உபசாரம் தேவையில்லே. உன் மாமியாரை நல்லாக் கவனிக்கிறீல்ல. அது போதும்.'' ஏளனமாகக் கூறிவிட்டு வாஷ் பேசினில் பரபரப்பாகக் கையைக் கழுவிக் கொண்டு, வேகமாக மாடியறைக்குப் போய்விட்டான்.

கஸ்தூரிக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. மேலே சாப்பாட்டைத் தொடரப் பிடிக்காமல், அவளும் பாதியிலேயே எழுந்து விட்டாள். மாதங்கியின் மனம் மிக்க வேதனைப்பட்டது.

சமையலறை வேலைகளைத் துரிதமாக முடித்துக் கொண்டு, உட்கார்ந்து சாப்பிட மனமின்றி அவள்கொஞ்சம்மோரைக் குடித்து விட்டு கஸ்தூரியின் படுக்கை அறைப் பக்கம் வந்தாள்.

ஹார்லிக்ஸ் கலந்த டம்ளரை மேஜை மீது வைத்துவிட்டுப் படுக்கையில் சுருண்டு கிடந்த மாமியாரின் அருகில் குனிந்தாள் மாதங்கி.

''அத்தை!''

கஸ்தூரி அசையாமல் கிடந்தாள்.

''சாப்பிடாம வந்திட்டீங்க. கொஞ்சம் ஹார்லிக்ஸாவது குடிங்க'' என்று சொன்னபடி மெல்ல அவளது கன்னத்தைத் தொட்டவள் துணுக்குற்றாள்.

'சில்'லென்ற கண்ணீர்த் துளிகள் கை விரலை நனைத்தன. மிகவும் துணிவாக, அழுத்த



மாகப் பேசத் தெரிந்த கஸ்தூரி அவனுக்குப் பலவீதமாகத் தைரியம் சொன்ன மாமியார் கஸ்தூரி.... இப்போது அழுதுகொண்டிருக்கிருள்!

''அத்தே என்ன இது? நீங்ககூட....!'' செல்லமாகக் கடிந்தபடி அவளது முகத்தை நிமிர்த்தினுள் மாதங்கி.

''என்னை மட்டும் கல்லால கட்டி, சாந்தால பூசிவைச்சிருக்கா? நானும் ஒரு மனிதப் பிறவிதானே. நல்லா யோசிச்சேன். என் கௌரவத்தைக் காப்பாத்திக்கணும்னு நினைச்சுக்கிட்டே, மடத்தனமான ஒரு பெரிய தவறையே செய்துட்டோமேன்னு நினைச்சேன். துக்கமா வந்திட்டுது. அவ்வளவுதான்.'' தழுதழுத்தாள் கஸ்தூரி. கண்களைத் துடைத்தபடி எழுந்து மருமகளையே பரிதாபமாகப் பார்த்தாள்.

''இப்ப என்ன நடந்துட்டுதுன்னு நீங்க இப்படி மனசை அலட்டிக்கிறீங்க. வருத்தப்படாதீங்க அத்தை!'' மாதங்கி சமாதானம் செய்தாள்.

''கள்ளங் கபடமில்லாத உன்னை ஒரு முரட்டுப் பயலுக்குக் கட்டி வைச்சு... உன் வாழ்க்கையைப் பாழடிச்சிருக்கேனே.. அதை நினைச்சுச் சந்தோஷமா பட முடியும்?'' கண்கள் கலங்கிப் போனுள்.

மாதங்கி மௌனமானுள்.

''ஆமை புகுந்த வீடு உருப்படாதுன்னு சொல்லுவாங்க. அது போல இந்த ஊர்மிளா கால் அடி எடுத்து வச்சாலே இந்த வீடு உருப்படாதுன்னு கவலையா யிருக்குதே!'' அரற்றினுள் மீண்டும்.

''பொறுமையா இருன்னு என்னைச் சொல்வீங்களே! இப்போ நீங்க....'' மெல்ல கூறியபடி ஹார்லிக்ஸ் டம்ளரை அவளிடம் நீட்டினுள்.

அவளது அன்பான செயலை மறுக்க முடியாதவளாய் ஹார்லிக்ஸைப் பருகிய கஸ்தூரி, மீண்டும் படுக்கையில் சுருட்டிக் கொண்டாள்.

''இந்த ஊர்மிளா எதற்காக இப்போ வந்து இங்கே குழப்பம் விளைவிக்கிறுள்!'' எண்ணி எண்ணிக் கவலைப்பட்ட அவளால் உறங்கவே முடியவில்லை.

மறுநாள் காலை குளித்து முடித்த பின், ஹர்ஷன் வழக்கம் போல் முன் அறையில் உட்கார்ந்து பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

அவனது கோபமும் இன்னும் அடங்கின பாடில்லை. பக்கத்திலே மாதங்கி கொணர்ந்து வைத்த காப்பி டம்ளரைக் கவனியாதவன் போல விருக்கென எழுந்து வெளியே சென்று விட்டான். சிறிது பொழுதில் கார் தோட்டத்தினின்றும் வெளியே செல்லும் ஒலி கேட்டது.

அன்று முழுவதும் அவன் வீடு திரும்பவில்லை. கஸ்தூரிக்குத் தாங்க முடியாத தலைநோவு வந்து விட்டது. அதனுல், அவளும் படுக்கை அறையை விட்டு வரவே இல்லை.

இரவு வெகு நேரம் கழித்து. வீடு திரும்பிய ஹர்ஷன் நேராகப் படுக்கைக்குச்



சென்றுவிட்டான். மறுநாள் காலையிலும் சாப்பிடவில்லை. மாதங்கி கட்டி வைத்த டிபனைக்கூடத் தொடாது வேலைக்குப் புறப்பட்டுப் போய்விட்டான்.

மாலை சற்று முன்னதாக வீட்டுக்குத் திரும்பியபோதுதான் ஹர்ஷன் கவனித்தான். காரஜிலிருந்து கார் எடுக்கப்படவில்லை என்பதை ''அப்படியானால்...?'' அவனையும் அறியாமல் திடீரென ஒரு பரபரப்பும் கவலையும் அவனுக்குள் எழுந்தன.

வாரத்தின் முதல் நாள். அலுவலகத்தில் அவனுக்கு மூச்சு விடக் கூட நேரமின்றி வேலைகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. பகல் வேளைக்கு உணவைத் தேடிக்கொண்டு ஓட்டலுக்குப் போக நேரம் இருக்கவில்லை. மாலை நடந்த போர்ட் மீட்டிங்கில் சாப்பிட்ட காப்பி அடிவயிற்றில் மறைந்து போகவே அகோரப் பசி...

பசி வந்துவிட்டால் அவன் குழந்தை சுபாவம் படைத்தவனாகி விடுவான். வீட்டுக்குள் வந்தவன் ப்ரீஃப் கேஸை சோபாவின் மீது வைத்துவிட்டுச் சுற்றும் முற்றும் பார்த்தான். மாதங்கி அம்மாவின் அறையிலிருந்து வெளியே வருவது தெரிந்தது.

விஷயம் என்னவென்று தெரிந்து கொண்டாக வேண்டுமே! வீண் ஜம்பம் அடித்துக் கொள்ள முடியாதே. தொண்டையைச் செருமிக் கொண்டு அவளை நிமிர்ந்து பார்த்தான்.

''ஒரு நொடியில காப்பி டிபனை எடுத்து வைக்கிறேன்'' சொல்லிக்கொண்டே மாதங்கி சமையலறைக்குள் மறைந்து விட்டாள்.

பசியின் குடைச்சல் தாங்க முடியாமல் அவனாகவே சமையலறைக்குள் சென்றான்! அவள் தட்டில் உப்புமாவை அள்ளி வைத்ததை எடுத்து ஸ்பூனால் விழுங்கினான். அடுத்து வைத்திருந்த காப்பி டம்ளரை எடுத்து ஒரே மடக்கில் 'லபக்'கென்று குடித்து முடித்தான்.


மாதங்கி சிரிப்பை அடக்க முயன்றாள். அலமாரியில் பாத்திரங்களை அடுக்குவது போல் அபிநயித்தாள். மீண்டும் இலேசாக இருமினான் அவன். என்ன என்பது போல் திரும்பினாள் அவள்.

''அம்மா, சீக்கிரமாவே வேலையிலிருந்து திரும்பிட்டாங்களா?'' வலியப் போய் அவளிடம் பேச அவனுக்கு வெட்கமாகத்தான் இருந்தது. ஆனாலும் விஷயம் தெரிந்தாக வேண்டுமே!

''அத்தை வேலைக்குப் போகலே.''

''உடம்புக்கு என்ன?'' திடுக்கிட்டு வினவினான்.

செஸ் விளையாட்டை ஐரோப்பியர்கள் உருவாக்கி, ரஷ்யர்களால், அது ஆசியாவில் புகுத்தப்பட்டது என்ற ஒரே காரணத்திற்காக ஈரானியத் தலைவர் அயத்துல்லா கோமினி செஸ் விளையாட்டைக் கண்டால் பிடிப்பது கிடையாது. அவ் விளையாட்டில் கூறப்படும் 'Check mate' என்பதை ஈரானியர்கள் 'Shah mate' என்று தான் அழைக்கின்றனர். - பி. நாராயணன்



''ரத்த அழுத்தம் அதிகமா யிருக்கு. ஓய்வாக இருக்கணும்னு டாக்டர் சொன்னார்.''

''டாக்டர் வந்து பார்த்தாரா?''

''தலைவலி தாங்க முடியாம அத்தை ரொம்பக் கஷ்டப்பட்டபோது குடும்ப வைத்தியர் சிகாமணியைக் கூப்பிட்டேன். அவர் தான் வந்து மருந்து கொடுத்திருக்கார்!''

''எனக்கு எதுவுமே தெரியாதே. ஆபீஸுக்குப் போன் பண்ணியிருக்கலாமே!'' கடுகடுத்தான்.

''நீங்க கோபமா இருக்கும்போது என்ன செய்யறதுன்னு ஒண்ணும் புரியலே.''

அவன், அவளைத் தாண்டிக் கொண்டு மௌனமாகத் தாயின் படுக்கை அறைக்குள் நுழைந்தான். மருந்து மயக்கத்தில் கஸ்தூரி ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். ஓசைப்படாது மெல்ல வெளியே வந்தான்.

''டாக்டர் என்ன சொன்னார்?'' என்று மாதங்கியிடம் அடிக் குரலில் கேட்டான்.

''பயப்பட ஒண்ணுமில்லே. நல்ல ஓய்வு தேவைன்னார். கவனிச்சுக்கிறேன்னு சொல்லிட்டேன்.'' முணு முணுத்தாள் அவள்.

''தாங்க்யூ'' அதற்கு மேல் அவனுக்கே சங்கோஜமாக இருந்தது. வேகமாக முன்னறைப் பக்கம் நகர்ந்தான்.

அழைப்பு மணி ஒலித்தது. மாதங்கி ஓடிச் சென்று கதவைத் திறந்தாள். வாசலில் ஊர்மிளா நின்று கொண்டிருந்தாள்.

''ஹர்ஷன்! இங்கே உட்கார நேரமில்லே. எங்காவது வெளியே போய் நிம்மதியா ஒரு இடத்தில் உட்கார்ந்து பேசித் தீர்மானிக்க வேண்டிய சங்கதி. உம். ஜல்தி.'' அவசரப்பட்டாள். அவனையும் புறப்படும்படி அவசரப்படுத்தினாள்.

மாதங்கியின் மனம் ஆத்திரத்தில் குமுறியது. இவளுக்கு என்ன இத்தனை உரிமை? உதட்டைக் கடித்துக் கொண்டு உள்ளே திரும்பினாள்.

''வேண்டாம். தாகத்துக்கு எதுவும் வேண்டாம். அவசரமாப் போகணும்'' என்றாள் ஊர்மிளா.

ஹர்ஷன் மந்திரத்தால் கட்டுண்டவன் போல் கார் சாவியைக் கையிலெடுத்தான்.

''அம்மாவுக்கு உடம்புக்கு முடியலே. ரத்த அழுத்தம். படுத்திருக்காங்க.'' அவன் முடிக்குமுன் 'பக்'கெனச் சிரித்தாள் ஊர்மிளா.

''ரத்த அழுத்தம்தானே! நான் கூடப் பெரிசா என்னவோன்னு நினைச்சுட்டேன். இந்த வயசுக்கு வரவேண்டிய கோளாறு. ஊர் உலகத்திலே வராத நோயைப் போல நினைச்சுக்கிட்டுப் பயந்து போய் உட்கார்ந்திட்டீங்களே? ம்! கிளம்புங்க...''

மிரட்டினாள் அவள். கழுத்தில் பூட்டிய சங்கிலியைப் பிடித்திழுத்துத் தரதரவென இழுத்துக் கொண்டு போகப்படும் நாய்க்குட்டி போல் அவனும் அவளைப் பின்தொடர்ந்தான்.

'''டிரைவ்-இன்'னுக்கே நேரே போவோம்!'' ஊர்மிளா அசட்டையாகப் பேசியபடி அவனுடன் வெளியே சென்றது மாதங்கியின் மனத்தை உறுத்திப் புண்ணாக்கியது. மனைவி மேல் கொண்ட கசப்பு மறைந்து பேசும் அளவுக்கு மாறிவிட்டிருந்த கணவனை, இவள் எதற்காக இப்போது இடையில்.... அட கடவுளே! மாதங்கியின் மனம் புலம்பியது. (தொடரும்)



# மணவாசம்

## கண்ணதாசன்

### 17. மேய்ப்பவன் கையில் புலிக் குட்டி!

சாதாரணமாகவே அரசியல்வாதிகள் கூடுகிற கூட்டத்தில் குஷியாகி, நம்மைச் சுற்றியுள்ளதுதான் உலகம் என்று முடிவுகட்டி விடுவார்கள். ஆரவாரம், மாலை மரியாதைகளில் படம் எடுத்து ஆடுவதும் உண்டு. யாரையும் பழிவாங்க முடியும் என்று நம்புவதும் உண்டு.

இதற்குக் காமராஜரும் விலக்கல்ல; கருணாநிதியும் விலக்கல்ல. அவன் மட்டும் எப்படி விலக்காவான்!

பேரணிகள், ஊர்வலங்கள், மகாநாடுகளில் தி. மு. க. வை அடியோடு வீழ்த்தி விட்டதாகவே அவன் கனவு கண்டான். ஆனால் அடிப்படையே இல்லாத அந்த இயக்கம் நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஒரு திட்டமும் இல்லாமல் வளர்ந்து கொண்டே இருந்தது.

இப்படி ஒரு மயக்கம் அவனுக்கு வந்தது கூட அதிசயமில்லை. காமராஜருக்குமே வந்ததுதான் அதிசயமாகும்.

ஆழமான அரசியல்வாதிகள் கூட சமயங்களில் ஏமாந்து விடுகிறார்கள் என்பதற்கு, காமராஜரும் ஓர் உதாரணம்.

அவரது மதியும் அப்படி மயங்கியதற்குத் தானேதான் காரணமோ என இப்போதும் அவன் ஐயப்படுகிறான்.

பல இடத்தில் உள்ள கட்சிக்காரர்களை ஓர் இடத்தில் திரட்டிக் காட்டுவதில் என்ன பலம், பெருமை இருக்கிறது?

நாம், நம்மைத் தைரியப்படுத்திக் கொள்வதற்கு அது உதவுகிறது. ஆனால் முடிவு மோசமாகத்தான் இருக்கிறது!

இந்தச் செயற்கை ஜோதியில் அவன் தன்னை மறந்து விளையாடினாலும், இயற்கையான உள்ளுணர்வைச் சங்கீதத்தோடு இணைத்திருந்தான். அது ஒரு சுகமான அனுபவம். ஆர்மோனியத்துக்கு எதிராக உட்கார்ந்து, அந்தச் சத்தத்தைக் கேட்டுக் கொண்டே அதற்கேற்ப வார்த்தைகளை அள்ளிப் போடுவது இன்பகரமான விளையாட்டு. பாட்டெழுதும்போது மெய் சிலிர்க்கும்; ஒரு வரியை அடுத்த வரி முந்திக் கொள்ளும்.

சில பாடல்கள் எப்படி இடம் மாறி வளர்ந்தன என்பது அவனுக்கு நினைவுக்கு வருகிறது.

சென்னையில் அப்போது பாரதி பிலிம்ஸ் என்றொரு கம்பெனி துவக்கப்பெற்றது. அதற்குக் கதை வசனம் பாடல்கள் எழுத அவனை ஒப்பந்தம் செய்தார்கள். கதை விசித்திரமானதுதான்.

ஒரு கிராமம். பக்கம் பக்கமாக இரண்டு வீடுகள். ஒரு வீட்டில் இரண்டு பெண் மக்களோடு ஒரு குடும்பம் நீண்ட காலமாகத் தங்கியிருக்கிறது. இன்னொரு வீட்டில் ஓர் இளைஞனும் அவனது பெற்றோரும் புதிதாக வந்து தங்கியிருக்கிறார்கள். அந்த இளைஞன் ஒரு நாள் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கும்போது அடுத்த தோட்டத்தில் ஒரு பெண் பூப்பறித்துக் கொண்டே பாடுவதைக் காண்கிறான். அந்தப் பெண்ணை மணந்து கொள்ள விரும்புகிறான். அவசரக்காரத் தகப்பன் பெண்ணின் பெற்றோர்கள் என்ன சொல்லியும் கேளாமல் அவளை மணம் முடித்து விடுகிறான். முதலிரவில்தான் அவள் ஊமை என்று தெரிகிறது. ஆத்திரமுற்ற இளைஞன் அறையைத் திறந்து வெளியேறும் போது அவளது தங்கை பாடுகிறாள். அதே குரல். பிறகுதான் அன்றும் பாடியது அவள் தான் என்பதும் அக்காள் வாயசைத்தாள் என்பதும் தெரிய வருகிறது.

தங்கை அத்தானைக் கெஞ்சுகிறாள். அவள் கல்யாணம் செய்து கொள்ளாமல் கூடவே இருந்து பாடுவதானால், தான் மூத்தவளோடு இருந்து வாழுவதாக அவன் ஒப்புக் கொள்கிறான். தங்கை சம்மதிக்கிறாள். தன்னைத்

தியாகம் செய்கிறுள். அக்காளும் அத்தானும் அறைக்குள்ளிருக்கும்போதெல்லாம் தங்கை வெளியில் உட்கார்ந்து பாடுகிறுள். ஒரு குழந்தை பிறக்கிறது. அந்தக் குழந்தையை அவள் தாலாட்டுவதாக இரண்டு தாலாட்டுப் பாடல்கள் எழுதப்பட்டன.

'மண்ணில் கிடந்தாலும் மடியில் கிடந்தாலும்
பொன்னின் நிறம் மாறுமா?'
என்பது ஒரு பாடல்.

'தாய்பேச நினைப்பதெல்லாம்
நீபேச வேண்டும்
தாய்தூங்கத் தாலாட்டு
நீபாட வேண்டும்
நீபாடும் தாலாட்டை
தாய்கேட்க வேண்டும் — தன்
நிலைமாறி அவள்கூட
மொழி பேசவேண்டும்'—
என்பது ஒரு பாடல்.

பாரதி பிலிம்ஸ் மூடப்பட்டு விட்டதால் இந்த இரண்டு பாடல்களையும் மாற்றி 'பாச மல'ரில் ஒன்றும், 'பாலும் பழ'த்தில் ஒன்றுமாக எழுதினுன், அவன்.

பாச மலரில் வந்ததுதான் 'மலர்ந்தும் மலராத' என்ற பாடல்; பாலும் பழத்தில் வந்ததுதான், 'நான் பேச நினைப்பதெல்லாம்' என்ற பாடல்.

இப்படி தூங்கும்போது ஊற்றுக் கண்ணும் விழித்திருக்கும்போது ஆற்று வெள்ளமுமாக அவனது கற்பனை வளர்ந்தோங்கியது.

அவன்: ''எங்க வீட்டு டி.வி. திருட்டுப் போனதிலிருந்து எங்கப்பா அடிக்கடி மொட்டை மாடிக்குப் போயிடறுர்!''
இவன்: ''எதுக்குடா..?''
அவன்: ''ஆன்டென்னுவை கட்டிக்கிட்டு ஒரு குரல் அழுதுதான்!'' -உ. ராஜாஜி



இந்த நேரத்தில் அவனது சகோதரர் மகன் பஞ்சு அருணுசலம் ஒரு மிஷினைத் தென்றல் திரைப் பத்திரிகைக்காக இறக்குமதி செய்தான். அது ஒரு 'ஹைடில்பர்க்' மிஷின். விலை 55 ஆயிரம் ரூபாய். 'தென்றல் திரை'யின் பேரில் லைசென்ஸ். அதை வாங்கியவர் கே. ஆர். பாலன் என்பவர். அவர்தான் முன்பு 'தென்றல் திரை' பத்திரிகையை நடத்தியவர்.

காமராஜரைத் திருப்தி செய்யும் பொருட்டு அவன் வகுப்புவாத அடிப்படையில் பிரசாரம் நடத்தியதால், காங்கிரஸ்காரர்கள் சிலர் காலத்தை எதிர்பார்த்திருந்தார்கள்.

விலைக்கு வாங்கிய மிஷின் தங்களுக்குப் பயனற்றது என்பதால் விற்கப்பட்டு விட்டது.

'இறக்குமதிப் பொருளை இரண்டு வருடங்களுக்குள் விற்கக் கூடாது' என்ற சட்டத்தின் துணை கொண்டு வழக்குப் போட சில காங்கிரஸ்காரர்கள் முயன்றுர்கள்.

அவர்களிலே காமராஜரின் கூடவே இருப்பவர்கள் இருவர்; மத்திய மந்திரி ஒருவர்.

இந்த வழக்கில் அவனுக்கு எந்த விதமான சம்பந்தமும் இல்லை. ஆனுல் அவன் வீட்டில் வைத்துப் பேரம் பேசியதாக, வேண்டுமென்றே சேர்க்கப்பட்டிருந்தான்.

நீதி மன்றத்திலும் மத்திய மந்திரியின் செல்வாக்குப் பிரயோகிக்கப்பட்டது.

1965 நவம்பர் 10ம் தேதி அன்று, அவனுக்கும் 'மூன்று மாதம் ஜெயில்' சொல்லித் தீர்ப்பளிக்கப்பட்டது.

இங்கேதான் காங்கிரசில் அவனது இளைப்பும், ஆத்திரமும் ஆரம்பமாயின.

மறுநாள் நேரு பிறந்த நாள். அதிலே அவனும் பேசுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. 'சத்தியமூர்த்தி பவ'னில் வேலை பார்த்த ஒருவர் காமராஜரிடம் சொல்லி,, காமராஜரும் அவனைப் பேச வேண்டாம் என்று சொல்லி விட்டார்.

கடற் கரையில் நடந்த நேருவின் பிறந்த நாள் விழாவுக்கு அவனும் சென்றிருந்தான். கூட்டத்தினர் 'கண்ணதாசன் பேசட்டும்' என்று சத்தம் போட்டார்கள். மேடையிலே காமராஜர் அதையும் மறுத்துவிட்டார்.

அந்த ஒரு நிகழ்ச்சியிலேயே காமராஜரையும் அண்ணுவையும் எடை போட அவனுல் முடிந்தது.

பரம அயோக்கியனைக்கூட அண்ணு மன்னித்து விடுவார். ஒருவன் தனக்கு அடிமை சேவகம் செய்யும் யோக்கியனுக இருந்தால் கூட அவன் உயர்ந்து வந்து விடுவான் என்று தெரிந்தால், காமராஜர் அவனை அமுக்கியே வைப்பார்! இல்லையென்றுல் அவனை இன்னெருவனுடன் மோத விடுவார்.

அண்ணுவின் வெற்றிகளுக்கும் அதுதான் காரணம்; காமராஜரின் தோல்விகளுக்கும் அதுதான் காரணம்.

காமராஜர் தன்னைக் காட்டிக் கொடுத்து விட்டார் என்றே அவன் கலங்கினுன். 'இவ்வளவு மோசமான தலைவரின் கீழ் இனிப் பணியாற்ற முடியாது' என்று அவன் முடிவு கட்டினுன்.

ஜெகதாம்பாள் தெரு அலுவலக மாடியில் உட்கார்ந்து நீண்ட கடிதம் ஒன்றுஎழுதினான்.

அவன் தலையெழுத்தைப் பாருங்கள்! அந்த நேரத்தில் நண்பர் சின்ன அண்ணாமலை அங்கே வந்து சேர்ந்தார். இல்லையென்றால் அவன் அன்றோடு காங்கிரஸைத் தலைமுழுகியிருப்பான். அரசியல் ஆரவாரமில்லாமல் ஏராளமான கவிதைகளை எழுதியிருப்பான்.

தோழர் சின்ன அண்ணாமலை, 'காங்கிரசுக்குப் பிரமாதமான எதிர் காலம் இருப்பதாகவும், அவன் வாழ்க்கை பாழாகி விடக்கூடாது' என்றும் அவன் மனத்தை மாற்றி விட்டார்.

அவன் உடனே அந்தக் கடிதத்தைக் காமராஜருக்கு அனுப்பாமல் விட்டு விட்டான். ஆயினும் நெல்லிலிருந்து நீக்கிய உமி போல அவனுக்குக் காமராஜரிடம் இருந்த பாசம் குறையத் தொடங்கியது.

இப்படித்தான் காமராஜர் பல அற்புதமான நண்பர்களை இழந்திருக்கக் கூடும்!

ராஜாஜி — காமராஜர் தகராறில் தன்னோடிருந்த நண்பர்களையெல்லாம் காமராஜர் பலிவாங்கினார். அது ஒரு வகை ராஜதந்திரம் என்றே அவர் நம்பிக் கொண்டிருந்தார். அதைப் பெரியவர்களிடமும் பயன்படுத்தினார், சிறியவர்களிடமும் பயன்படுத்தினார். கடைசியில் அந்த மனப் போக்கே அவருடைய செல்வாக்குக்குக் குழி தோண்டி விட்டது!

சரித்திரம் இப்படிப்பட்ட மனோபாவத்தை அப்படித்தான் எச்சரிக்கிறது.

இந்த அதிர்ச்சிக்குப் பிறகு கொஞ்ச நாட்கள் வரையில் அவன் கூட்டங்களில் கலந்து கொள்ளாமலிருந்தான்.

அவனைக் காணுகிற தி. மு. க.வினரெல்லாம், 'அண்ணா உங்களிடம் உயிரையே வைத்திருக்கிறார்' என்பார்கள். ஆயினும் அவன் தி. மு. க.வுக்குத் திரும்பத் தயாராக இல்லை.

ஏரியில் வாழ்ந்து பழகிவிட்ட மீன், திரும்ப எப்படித் தொட்டிக்குத் திரும்பும்?

பத்து நாள் மௌனம். எப்போது எங்கே ஒரு சூனியம் ஏற்பட்டாலும், அப்போதெல்லாம் அவன் அடைக்கலம் புகுவது இரண்டு பழக்கங்களில்தானே!

அவனுடைய வாழ்க்கையில் வந்து போன பெண்கள் அவனிடம் பிரியமுள்ளவர்களாக இருந்தால், ஒன்று அவர்கள் பிரிந்து போகிறார்கள்; அல்லது இறந்து போகிறார்கள். ஆகவே, யாரிடமும் பிரியம் காட்டாமல் இருப்பது நியாயமல்லவா?

அவன் காட்டா விட்டால் என்ன? ஓரிரவு அவனோடு தங்கினாலும் மனைவியைப் போல நடந்துகொள்ளக் கூடிய பெண்கள், அவன் வாழ்க்கையில் நிறையவே வந்தார்கள்.

அன்று வந்தவளும் அப்படித்தான்!


(வளரும்)


அறிவுப் போட்டியில் கலந்து
பரிசு பெறுங்கள்

முதல் பரிசு
ரூ.2000
ரொக்கம்
கவர்ச்சிகரமான
இதர பரிசுகள்

2வது பரிசு
டேப் ரெக்கார்டர் அல்லது
ரூ. 1000/-ரொக்கம்

3வது பரிசு
புத்தகங்கள் அல்லது
ஜப்பான் மாடல்
டிரான்சிஸ்டர் (பாதி விலையில்)



சரியான விடைகளை பூர்த்தி செய்யவும்:


* தனி நபர் வருமானம் கூடுதல் உள்ள மாநிலம்.......................... (பஞ்சாப்/ஹரியானா/மகாராஷ்டிரம்)
* இந்தியர்கள் எந்தத் தொழிலில் அதிகம் ஈடுபட்டிருக்கிறார்கள் .................. (விவசாயம்/சர்வீஸ்/வியாபாரம்)
* 1869, அக். 2ல் மகாத்மா காந்தி பிறந்த இடம்.......................... (சூரத்/போர்பந்தர்)
* இந்த லைப்ரரி திட்டத்தை ஏன் விரும்புகிறேன் என்றால் .................. (குறைந்த எண்ணிக்கையில் வார்த்தைகளை பயன்படுத்தி பூர்த்தி செய்யவும்)

விதிமுறைகள்: 1. உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதே இந்த அறிவிப்பின் நோக்கமாகும். நுழைவுக்கட்டணம் கிடையாது. 2. ஒரு குடும்பத்திலிருந்து ஒரு நுழைவு மட்டுமே. 3. யோசனைகள் அங்கீகரிக்கப்பட்டால், பரிசுகள் வழங்கப்படும். 4. நிர்வாகத்தின் முடிவே இறுதியானது. 5. தில்லி சட்டதிட்டத்திற்கு உட்பட்டது. 6. 35 பைசா ஸ்டாம்புடன் கூடிய உறையில், உங்களது முகவரியை ஆங்கிலத்தில் அல்லது இந்தியில் எழுதி அனுப்பவும்.

**NATIONAL BOOKS (TM)** East Park Road, Karol Bagh New Delhi-5.



® is the registered trademark of Reliance Textile Industries Ltd.




Mudra/RTI/219 Tam.



● "1,72,210 கோடி" — எங்களது வயிற்றெரிச்சல்களை அப்படியே அப்பட்டமாகக் கொட்டித் தலையங்கமாய் எழுதிவிட்டீரே! உமது முதுகில் ஒரு 'ஷொட்டு'!
ஜெய்ஹரிந்த்புரம் என். ஹரிஹரன்

● நடந்துவிட்ட நிகழ்ச்சி வேதனையைத் தரக்கூடியதாக இருப்பினும், அந்நிகழ்ச்சியைத் தத்ரூபமாக 'கல்கி' அட்டைப் படத்தில் பார்க்கும்போது ஓவியரைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.
திருப்பூர்-2 அ. லோகநாதன்

● அட்டைப் படத்தில் வெளியிட்டுள்ள 'ரயில் விபத்துக்கள்' படம் மிகவும் கோரமாக உள்ளது. மனம் மிகவும் வேதனைப்படுவதுடன் காலையில் இதை ஏன் பார்த்தோம் என்று நினைக்கத் தோன்றுகிறது.
கோவை எஸ். ஆனந்தகுமார்

● ரயில் விபத்துக்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரை படித்தேன். ஆக்கபூர்வமான பல கருத்துக்கள் அதில் சொல்லப்பட்டிருக்கின்றன. வருடந்தோறும் பிரயாணக் கட்டணங்களை உயர்த்தும் அரசு மக்களுக்குப் பாதுகாப்பான பிரயாணத்துக்கு மட்டும் உத்தரவாதம் அளிக்க மறுப்பது வருத்தத்திற்குரிய ஒன்று. ஜப்பான்தான் இன்று ரயில் போக்குவரத்தில் முன்னணியில் நிற்கிறது. அதனுடைய ஒத்துழைப்புடன் நமது ரயில் சர்வீஸை நவீன பாணியில் மாற்றியமைப்பது உருப்படியான காரியமாக இருக்கும்.
கல்பாக்கம் சி. பி. ராஜு

● "நெருப்பும் நம் பொறுப்பும்" என்ற தலைப்பில் உள்ள கட்டுரை மீண்டும் மனத்தை நெகிழ்வித்து விட்டது. அதிலும் 'முதல் பத்தி' மிக மிக அருமை.

பாலசந்தர் படம் என்றதும் எங்கே சப்பைக்கட்டு கட்டிவிடுவீர்களோ என்று நினைத்தேன். "மூன்றடி மேலே போய் இரண்டடி சறுக்கியுள்ள பாலசந்தர்" என்ற வரிக்காகவே நனினி சாஸ்திரிக்கு சபாஷ் போடுகிறேன்.
தங்கநல்லூர் கா. மு. பாரூக்

● நியூஸிலாந்தில் வெல்வதற்குச் சாதகமான சூழல் இருந்தும் முதல் டெஸ்டில் தோற்றிருக்கிறோம். அந்த நேரத்தில் வி. சிவராமகிருஷ்ணனைப் பற்றி எழுதியிருக்கிறீர்கள். உங்கள் எண்ணம் எங்களுக்குப் புரிகிறது. தேர்வுக் குழுவினருக்குப் புரிந்தால் சரி.
மேட்டுப்பாளையம் எம்.பி. ரத்தினகுமார்

● மதுர நாயகி நாட்டிய நாடக விமர்சனம் பார்த்தேன். ஜெயலலிதாவுக்கு நாட்டியம், நடிப்பு இவற்றுக்கு ஓரளவாவது ஈடு கட்டுகிறாற்போல் வேறு யாருமே அமையாதது துரதிர்ஷ்டம் என விமர்சகர் குறிப்பிட்டிருக்கிறார். இது அவ்வளவு சரியல்ல. மதுரநாயகியாக நடிப்பவருக்கு மட்டுமே வாய்ப்பு அதிகம் என்று இருந்தும் கூட சித்ரா தேவி போன்றவர்கள் உயர்வாகவே நடித்துள்ளனர்.
சென்னை-17 குமிலி ராஜேஸ்வரி

● இசையமைப்பு சரியில்லை என்று குறைப்பட்டுக் கொண்டிருந்தார். ஆத்மநாதனின் இசையமைப்பு அவையோரைக் கவர்ந்ததாகவே இருந்தது. கண்ணதாசனின் வரிகளுக்குச் சரியான வடிவத்தை அமைத்திருந்தார்.

யானையுடனும், குரங்குடனும் ஜெயலலிதா பேசிப் பாடுவது அக்கதாநாயகி மனிதர்களிடம் மட்டுமல்ல, தன்னோடு பழகும் எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டுபவர் என்பதை விளக்குவதற்காகவே சித்திரிக்கப் பட்டிருக்கிறது.

பாடிய மேனகா, ரமா தங்கப்பன், மாரியப்பா ஆகியோரையும் பாராட்டி யிருந்தால் நன்றாக இருந்திருக்கும். இவர்களும் குறைவறச் செய்தவர்களே!
சென்னை-25 சிவராம நமசிவாயம்

● "மனவாசம்" தொடரில் பாகிஸ்தான் யுத்தத்தின்போது திரைப் பட நடிகைநடிகர்களுடன் வடக்கே பல ஊர்களுக்குச் சென்றவர்களைக் குறிப்பிட்டுள்ளார். அவர்களுடன் போய் நடனமாடியது அம்பிகா அல்ல. எனது சகோதரியும் பத்மினியின் சிஷ்யையுமான ஸரோஜாதான். அவர்தான் இப்பொழுது ஸ்ரீமதி பித்துக்குளி முருகதாஸ்.
சென்னை-4 ஜி. கே. பொன்னம்மாள்

● "காதலே எட்ட நில்" சிறு கதையில் சாருகேசி ஒரு புனிதமான பண்பைத் தோற்றுவித்து மகிழ்ச்சி அளித்திருக்கிறார். தற்சமயம் சினிமாவிலும் தினசரி வாழ்க்கையிலும் நடக்கும் டுபேட் பண்பு மாறி ஆண், பெண்களிடையே ஒரு தெய்வீக சிநேகம் பரவ வேண்டும்.
சென்னை டாக்டர் ஸ்ரீமதி அன்கோலி

● 1.3.81 இதழில் ஜமால் வரைந்த படம் அழகாக உள்ளது. இன்னும் கொஞ்சம் முயன்றால் குருவையும் மிஞ்சிவிடுவார் போல உள்ளதே!
கர்ட்பாடி ஐ. ஜி. மோகன்

● நடுப் பக்க ஜோக்கில் கடைசி ஜோக் மிக அருமை. இந்தியாவில் எப்போது ஜனத்தொகை குறையுமோ என்ற கவலை ஏற்படுகிறது.
பழவந்தாங்கல் ஆனைகூத்தன்

# பாவலாக்கள்

சு. சமுத்திரம்

அந்த அறையில் நான்கு பக்கச் சுவர்களையும் மறைத்து, அவற்றில் ஆடை ஆபரணங்கள் போல் வழுவில்லா வழுவழுப்பாய் ஜொலித்த சன்மைக்கா கலந்த காகிதக் கலவை, பல்வேறு வண்ணங்களில் தீட்டப்பட்ட ஓவிய ஒயிலுடன் சிரிப்பாய்ச் சிரித்துக் கொண்டிருந்தபோது, ஜெனரல் மானேஜர் டி. கே. ராமன் இண்டர்காமில், ஏதோ ஒரு பெரிய போருக்கு, வியூகம் சொல்லிக் கொடுப்பது போல், கத்தோ கத்தென்று கத்திக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில், பூமியின் பாரத்தைத் தனியொருத்தியாய்த் தாங்குவது போல் புருவத்தைச் சுழித்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள் சுகந்தி. ஒப்பாரி வைப்பது போல் ஒலித்த டெலிபோனை எடுத்து 'எஸ் ப்ளீஸ்' என்று அவள் படு ஒப்பாரி போட்ட போது ஜே. எம். இண்டர்காமில் 'ஒன் மினிட்' என்று சொல்லிவிட்டு அவளைப் பார்த்து, 'அந்த ஃபைலைக் கொடுக்கலியா?' என்று கேட்டார்.

ரிசீவரில் காது வைத்த சுகந்தி, ''எஸ்... சார்...'' என்று சொல்லிக் கொண்டே, 'எம். டி. வீட்டிலிருந்து பேசுகிறார் ஸார்' என்று சொல்லி டெலிபோனை நீட்டினாள். மேனேஜிங் டைரக்டரின் குரல் சலிப்போடும், வலிப்போடும் ஒலித்ததிலிருந்து அவர் தம் வீட்டில் இருந்துதான் பேச வேண்டும் என்று அவள் அனுமானித்து, புன்னகைத்தபோது, ரிசீவரை வாங்கிய டி. கே. ராமன், அவளைப் பார்த்து ''அந்த ஃபைலை என்னபண்ணினே?'' என்று சொல்லிக் கொண்டே ''ஹலோ'' என்றார்.

எதிர் முனையிலிருந்து ''என்னய்யா...இது நான் கேட்கவேண்டிய கேள்வியைநீங்க கேட்கறீங்க!... அதுவும் மரியாதை இல்லாமல்'' என்ற குரல் விழுந்தது, சுகந்தி காதில் கம்பிக் குரலாகத் தாவியது. ஜெனரல் மானேஜர், ''எஸ்... ஸார்... ஸாரி ஸார்... ஷ்யூர் சார்... டெபனட்லி ஸார்... நோ ஸார்... எக்ஸ்யூஸ்மீ ஸார்... ஓ.கே. ஸார்... உடனே ஸார்...'' என்று அஷ்டோத்ர ஸார்களைப் போட்டு, உரையாடலை முடித்துவிட்டு, ரிசீவரை அதன் இருப்பிடத்தில் வைக்கக்கூட நினைவில்லாதபடி, அதை எடுத்துத் தம் முன் நெற்றியில் அடித்துக் கொண்டார். ''அந்த ஃபைலை எம்.டி. கிட்டக் கொடுக்கலியா... என்னம்மா நினைச்சுக்கிட்டீங்க. அக்கௌண்டண்டைப் பார்த்து சம்பளத்தை செட்டில் பண்ணுங்கோ'' என்று மூச்சு விடாமல் சொல்லிக்கொண்டே போனார். இண்டர்காமிலோ, சபார்டினேட் ஒருவர், காத்துக் கொண்டிருந்தார். டி. கே. ராமனின் சுபாவத்தை அறிந்த அந்த வயசான மனிதர், ''ஸார், நீங்க ஒன் மினிட் என்று சொல்லி ஒன்பது மினிட் ஆகுதே'' என்று கேட்க முடியாமல் பெருமூச்சு விடுவது, இண்டர்காமே கொதித்து ஆவியாகிச் சத்தம் போடுவது போல் கேட்டது.

சுகந்தியின் உடம்பை நாடி நரம்புகள் இழுத்துப் பிடித்து விரைக்க வைத்தன. வியர்வைச் சுரப்பிகள் வேகமாகச் செயல்பட்டன. நெற்றி மேளம் போல் விம்மியது. வாய், உதடுகளை முன் குவித்துக் கூம்பியது. ''எந்த ஃபைல் ஸார்'' என்று கேட்கப் போனாள். பிறகு 'இதுகூடத் தெரியலியா' என்று அந்த 'பெல்லோ' கத்துவானே என்று நினைத்தவள் போல, பிறகு பேசாது, பெருவிரலால் பிளாஸ்டிக் தரையில் அரை வட்டம் போட்டாள். டி. கே. ராமன் என்ற ஜெனரல் 'மானேஜர் கம் நெருப்புக் கோழி' அவசரமாகச் சொன்னது.

'போன வென்ஸ்டேயில்... எம். டி. கிட்ட பெர்சனலாய்க் கொடுக்கச்சொல்லிக் கொடுத்தேன் பாருங்கோ, ஒரு கான்பிடன்ஷியல் ஃபைல்.... படிக்காமலே கொடுக்கும்படியாச் சொன்னேன் பாருங்கோ... அதுதான்....



பில்டிங் டெண்டர் ஃபைல்... அதுதான். ஜே. கே. பிரதர்ஸுக்கு காண்ட்ராக்ட் கொடுக்கும்படி சிபாரிசு செய்த ஃபைல்... அதை நீ கொடுக்கவில்லையா? ஹைஹலி கான்ஃபிடன்ஷியல் ஃபைல்... கொடுக்கலியா... கொடுக்கலியா... கொடுக்கவே இல்லியா?'' என்று 'மாலில் பல 'ஆ'க்களைப் போட்டார்.

சுகந்திக்கு வேலை பார்க்கும்போது ஏற்படுவது போன்ற அதிர்ச்சி ஏற்பட்டது. அந்த ஃபைலை இந்த டி. கே. ராமன் கொடுக்கச் சொன்னது நிஜம்தான். அன்று, 'வென்ஸ் டேய்' என்றதும் நிஜம்தான். படித்துப் பார்த்ததில் அது எம். டி. மட்டுமே படிக்க வேண்டிய கான்ஃபிடன்ஷியல் ஃபைல் என்பதும் நிஜம்தான். அன்று, பாய் பிரண்ட்ஸ்களில் ஒருவனான கோபால்தாஸ் வந்ததும் நிஜம். இந்த பேமிலி வேடி அவனுடன், அருகே இருந்த ஹோட்டலில் 'பேமிலி' அறைக்குள் போனதும் நிஜம். ஆளுக்கொரு டீ சாப்பிட்டுவிட்டு, அரை மணி நேரம் கழித்து, அல்லது களித்து, வெளியே வந்ததும் நிஜம். அந்த ஃபைலைக் காதலானுபவ சுக போதையில் எம். டி.யிடம் கொடுக்க மறந்ததும் நிஜம். ஆனால் அது இப்போது எங்கே இருக்கிறது என்பதுதான் நிஜமாகவே தெரியவில்லை.

சுகந்தி, தன் டெரின் புடவை முந்தானையின் முனையைப் பிடித்து, மூனைக்குப் பதிலாக அதைத் திருகியபோது, ஜெனரல் மானேஜர் டி. கே. ராமன், அவளின் மௌன சம்மதத்தைக் கலைப்பது போலக் கத்தினார்.

''என்னம்மா நினைச்சுக்கிட்டீங்க... இன்றைக்கு போர்ட் மீட்டிங் நடக்கப் போவுது... எம். டி. அந்த ஃபைலைப் படித்தால்தான் போர்ட் அப்ருவலுக்கு வாதிட முடியும்... அவர்கிட்டக் கொடுக்கச் சொல்லியும் கொடுக்காமல் இருந்தால் எவ்வளவு தைரியம் இருக்கணும்.... அவரு என்னை சஸ்பெண்ட் பண்ணுவேன்னு சொல்லிட்டார். நான் உங்களை டிஸ்மிஸ் பண்ணாமல் சஸ்பெண்ட் ஆகப் போவதில்லை. கோ அண்ட் மீட் தி அக்கௌண்டண்ட்... போற வழிக்கு அப்படியே ஸ்டெனோவையும் வரச் சொல்.''

சுகந்திக்கு இயல்பான தற்காப்பு உணர்வு தலைக்கு வந்தது.

''ஐ ஆம் நாட் இர்ரஸ்பான்ஸிபின் ஸார், நீங்க கொடுத்த ஃபைலை நேரா எம். டி. கிட்டக் கொடுத்துட்டு... அப்புறமாத்தான் என் சீட்டுக்கே போனேன்...''

''அப்போ எம். டி. கான்பரன்ஸ்ல இருந்தார்... எப்படிக் கொடுக்க முடியும்?''

''தமிழில் ஆரு பெயர்னு கேள்விப்பட்டிருக்கீங்களா ஸார்... அது மாதிரி எம். டி.யோட அறையிலே வெச்சுட்டுப் போனேன்.''

''நிஜமாவா?''

''நல்லா ஞாபகம் இருக்கு... என்னைப் போய்... என்னைப் போய்....''

சுகந்தி, கைக்குட்டையை எடுத்துக் கண்களை ஒற்றியபோது, டி. கே. ராமன் அவளைக் கனிவாகப் பார்த்தார்.

''நான் வச்சுட்டேன் ஸார்... சத்தியமா எம். டி. ரூம்லே...''

''என்னம்மா நீங்க... சாம பேத தானத்தோட பேசினால் நீங்க புரிஞ்சுக்க மாட்டீங்க போலிருக்கே... எம். டி.யிடம் நேரடியாய் ஃபைலைக் கொடுக்க வேண்டியது உங்க

# கராத்தே பயிற்சி 27

சித்திரம்: [signature] படம்: உத்ரா

பயிற்சியாளர்: டோனி பொன்னையா

தயாரிப்பு: குண்டுமணி



கராத்தே கலையில் நான்கு புறமும் தாக்கக்கூடிய முறைகள் உண்டு. இது வரை முன்புறம், இடதுபுறம், வலது புறம் உதைக்கக்கூடிய உதைகளைக் கற்றுக் கொண்டீர்கள். இனி பின்புறம் (Back Kick) நோக்கி உதைக்கக்கூடிய உதையைப் படத்தில் காண்கிறீர்கள்.

பின்புறம் உதைக்கும்போது பார்வையும் பின்புறம் நோக்கி இருக்கவேண்டும்.



பொறுப்பு.... நீங்க கொடுத்தீங்களா கொடுக்கலியா என்பது முக்கியமல்ல. கொடுத்தீங்க என்கிறதைக் கொடுக்காமல் கூட நிரூபிக்கிறதுதான் முக்கியம்... எனக்குத் தெரியாது. இன்னும் ஒரு மணி நேரத்துல கொடுத்த பைல் வரலேன்னு... டிஸ்மிஸ் நிச்சயம்... கொடுத்திட்டீங்கன்னு ஒரு பத்து நாள் சஸ்பெண்டோட நிக்கும். ஏன்னு இனிமேல் அந்த ஃபைல் கிடைச்சாலும் எம். டி. யால படிக்கவும் முடியாது. எம்.டி.க்காக அதை எந்த 'கோஷ்டும்' படிக்கவும் முடியாது. போர்ட் மீட்டிங் அஜெண்டாவுல வைக்கவும் முடியாது. ஓ.கே. நீங்க இன்னும் ஒரு மணி நேரத்துல ஃபைலோட வரப் போறீங்க... இல்லேன்னு 'டிஸ்மிஸ்ஸோடப் போகப் போறீங்க... ப்ளீஸ் கெட் அவுட்... ஐ ஸே கெட் அவுட்....''

சுகந்தி, தன்னுடல் இருப்பது தனக்கே தெரியாதவளாய், நடந்து இருக்கையில் வந்து அமர்ந்தாள். எதிர் வரிசையில் உள்ள பாதிக் கிழங்கள் பார்வை பரிமாற்றக் காதலும், அது முற்றிய வருடலும், கண்ணுக்குத் தெரிந்தாலும், கருத்துக்கு உணர முடியாதவளாய் உட்கார்ந்தாள். ஃபைல் கிடைச்சால் சஸ்பெண்டாம்; கிடைக்கவில்லையென்றால் டிஸ்மிஸ்ஸாம்... அவள் பொருமிக் கொண்டாள். இப்போது நிஜமாகவே ஒரு சொட்டு—ஒரே சொட்டுக் கண்ணீர் வந்தது. வெறுமையுடன் அங்குமிங்குமாய்ப் பார்த்தாள். தனது கண்கள் கலங்குவது, எதிர் வரிசை இளசில்லாச் சிட்டுக் குருவிகளுக்குத் தெரியவேண்டாம் என்பது போல் கீழே குனிந்தபோது, மேஜையின் கீழே மத்தியில் போடப்பட்ட கம்பியின் பாதி நீளத்தை அடைத்துக் கொண்டு ஒன்று கிடந்தது. விவசாய கூலிப் பெண்ணின் குழந்தை திண்ணையில் குப்புறக் கிடப்பது போல் கிடந்த அந்த 'ஒன்றை' எடுத்தாள். கான்ஃபிடன்ஷியல் ஃபைல்! அதுவும் ஹைலி கான்ஃபிடன்ஷியலான அதே அந்த ஃபைல்தான். அதன் 'ரேப்பரில்' சுகந்தி தெரியாமல் மிதித்த செருப்புச் சுவடு அட்சர சுத்தமாகத் தெரிந்தது. இன்னொரு சுவடும் மங்கலாகத் தெரிந்தது. ஒருவேளை கோபால் தாஸின் பூட்ஸ் சுவடோ என்னவோ?

அவள், அந்த ஃபைலை விரித்துப் பார்த்த போது, ஜெனரல் மானேஜர் டி.—கே.ராமனே அங்கு தலைவிரி கோலமாக ஓடி வந்தார்.

''ஃபைல் கிடைச்சுதா... நல்லாத் தேடுனீங்களா... நானும் தேடுறேன்...''

டி.கே. ராமன் சொல்லிவிட்டு நிற்கவில்லை! அவள் மேஜை டிராயரை இழுத்தார். அங்கே இருந்த மேக்கப்சாமான்களை எடுத்து. கையில் தூக்கி கான்பிடன்ஷியல் ஃபைலோ என்று பார்த்தார். சுகந்திக்கு அவர், தன் காதல் கடிதத்தைப் பார்த்தது கூடப் பெரிதாகத் தெரியவில்லை. கையில் உள்ள ஃபைலை மறைக்க வேண்டும். இல்லையானால் கொடுக்காமலா வைத்தாய் என்று கெடுத்துவிடுவார். 'நீங்க கொடுத்தீங்களா என்பது முக்கியமல்ல. கொடுக்காமல் கூட கொடுத்ததாய் நிரூபிக்கிறதுதான் முக்கியம்' என்று டி. கே.—ராமன் பித்துக்குளி ராமனுய்ச் சொன்னது, அவள் சித்தத்தில் இருந்த பித்தத்தை நீக்கித்



ஒருத்தி: இன்று ரேஷனில் என்ன போடுகிறா'கள்?

மற்றொருத்தி : நேற்று ரேஷனில் போட்ட அரிசி ஒரே நாற்றமாய் இருக்கிறது என்று ரேஷன் கடைக்காரரிடம் சண்டை போடுகிறார்கள்!

- ச. இராசகோபாலன்

தெளிய வைத்தது. 'ஃபைலைக் கொடுக்காமலே கொடுத்ததாய் நிரூபிக்கனும். அப்போதுதான் சஸ்பெண்ட் வராது. அப்போது தான் டிஸ்மிஸ் வராது.!

டி. கே. ராமன், 'அய்யோ... நான் பிள்ளை குட்டிக்காரனுச்சே...' என்று பச்சைக் குழந்தையைப் போல் புலம்பிக் கொண்டே திரும்பிப் போனுர். சுகந்திக்கு லேசாகச் சிரிப்புக் கூட வந்தது. 'இந்த ஜெனரல் மானேஜருக்கு நிர்வாகத் திறமை இல்லையே... நானுக இருந்தால்... 'அந்த ஃபைலை மறந்திட்டீங்க போலிருக்கு... பரவாயில்லை... ஒண்ணும் குடிமுழுகிடலை... அதுவும் நல்லதுக்குத்தான். ஒரு கரெக்ஷன் பண்ணணும். கொண்டு வாங்க' என்று பதமாகச் சொல்லி, ஃபைலைக் கொண்டு வந்ததும், குரல்வளையை ஒரே பிடியாய்ப் பிடித்திருப்பேன்.

டி. கே.—ராமன் தம் அறைக்குள் பைத்தியம் போல் சுற்றிக் கொண்டிருந்தபோது, சுகந்தி, நாற்காலியில் டங்கென்று உட்கார்ந்தாள். டி. கே.—ராமனிடம் 'கொடுப்பது முக்கியமல்ல... கொடுத்ததாய் நிரூபிப்பது தான் முக்கியம்' என்ற வார்த்தைகள் காதுகளில் வலம் வந்தன. அப்படி நிரூபித்தால் தான் தானும் தப்ப முடியும் அந்த அசடும் தப்பலாம்....அது தப்ப வேண்டும். அப்போது தான் பிரியமாய் இருக்கலாம்.

ஒவ்வொரு ஊழியரும் தனக்கு மேலே இருப்பவர் அசடாக இருந்தால், அந்த ஆசாமியை நேசிப்பது போல், சுகந்தியும், இப்போ டி. கே.—ராமனை நேசித்தாள்.

இந்த முந்தானை ஃபைலை என்ன செய்யலாம்....?

சுகந்தி, எம். டி. அறைக்கருகே போனுள். எம். டி. டி. கே. ராமனை நோக்கிக் கையைக் காலை ஆட்டிப் பேசிக் கொண்டிருந்தார். ஸ்டெனே பெண் ஒருத்தி சுருக்கெழுத்து குறிப்பேட்டுடன் குறிப்பறிய நின்றுள். 'லிவ் மீ ஒன் அவர் டயம் ஸார்' என்று அழும் குரலோடு சொல்லிக் கொண்டே டி. கே. ராமன் வெளியே வந்தபோது, சுகந்தி எதிரே இருந்த 'டாய்லட்' அறைக்குள் போய் ஒளிந்து கொண்டாள். அங்கேயே காத்திருந்தாள்.

கால் மணி நேரத்தில் எம். டி. போய் விட்டார். அவரது பியூன், குறட்டை

விட்டார். ஸ்டெனோ மங்கை எங்கேயோ போய்விட்டாள்.

சுகந்தி அடி மேல் அடி வைத்து அம்மி நகர்வது போல் எம். டி. அறைக்குள் நகர்ந்தாள்.

அந்தக் குளுகுளுப்பு அறையில் இருந்த கிளுகிளுப்பான சோபா செட்டையும், சுழல் நாற்காலியையும், பூதாகாரமான மேஜையையும் உற்றுப் பார்த்துக் கொண்டே முன்னேறினாள். எம். டி.யின் இருக்கைக்கு அருகே வந்து படபடப்புடன் நோட்டம் விட்டாள். நல்ல வேளையாக மேஜை டிராயர் ஒன்று ஒருசில உபயோகமில்லாத தட்டு முட்டுச் சாமான்களுடன் நின்றிருந்தது. அதை இழுத்து முந்தானைக்குள் இருந்த ஃபைலை எடுத்துத் திணித்து உள்ளே தள்ளிவிட்டு ஒரே ஓட்டமாகத் திரும்பி ஓடியவள் தன் சொந்த இருக்கைக்கு வந்த பிறகே மூச்சு விட்டாள்.

ஒரு மணி நேரம் ஓய்ந்தது.

எம். டி.யிடமிருந்து மீசைக்கார பியூன் வந்து, அவளைப் பார்த்து, எம். டி. அறைக்கு வரும்படி அலட்சியமாகச் சைகை மூலம் தெரிவித்து விட்டுப் போய்விட்டான். சுகந்தி, எம். டி.யின் அறைக்குள் போனபோது, அவர் டி. கே. ராமனைத் தாளித்துக் கொண்டிருந்தார்.

மானேஜிங் டைரக்டர் தமது இளமைக் காலத்தை நினைவு படுத்துவது போல் கத்தினார். ''அப்படின்னு.... அந்த ஃபைலை நான் விழுங்கிட்டேனு... பழைய பேப்பர்காரன் கிட்டே போட்டுட்டேனு....''

சபார்டினேட்டுகள் தலைகளைத் தாழ்த்திய போது, எம். டி. தம்மைப் பற்றித் தமக்குள்ளேயே எழும் சந்தேகங்களை, இப்போது கேள்விகளாகத் தொடுத்தார்.

''நான் என்ன... ஒன்றும் தெரியாத ஆளா... அப்ஸார்வ் பண்ணத் தெரியாத அசடா.... மேஜையில் இருக்கிற ஃபைலைக் கண்டு பிடிக்க முடியாத ஆபீஸரா... வாட் ஈஸ் திஸ்... டோண்ட் டாக்...''

சபார்டினேட்டுகளின் தலைகள் இன்னும் நிமிராதபோது எம்.—டி. இப்போது பெருமிதமாகப் பேசினார்.




''ஒரு குண்டூசி இருந்தால் கூடக் கண்டு பிடிக்கிற டைப் நான்... ஒரு பேப்பர் வெயிட்டை அரை அங்குலம் நகர்த்தி வைத்தாலும் அறியக் கூடிய டைப் நான்... நீ கொடுத்ததாய்ச் சொன்ன ஃபைல் இப்போ இங்கே இருந்தால் நான் இடியட்னு அர்த்தம்... இன்எபிஷியண்ட் பெல்லோன்னு மீனிங்... டோண்ட் டெல் மி காக் அண்ட் புல் ஸ்டோரி...''

டி. கே.—ராமனின் தலை முன்னிலும் அதிகமாகத் தாழ்ந்தபோது, சுகந்தி, தலையை நிமிர்த்தி, சுவரைப் பார்த்துக் கொண்டே பேசினாள்.

''நீங்க பிஸ்னஸ் ஆபீஸர் ஸார்... உங்களுக்குப் பதிலாய்...இந்த சீட்ல யார் இருந்தாலும் சமாளிக்க முடியாது. ஊழியர்கள் ஒவ்வொருவரும், எம். டி. தங்களையே தனிப்பட்ட முறையில் 'வாச்' பண்ணிட்டு இருக்கிறதாய் ஒரு பிரமையைக் கொடுக்கிற அளவுக்கு நிர்வாகம் செய்யறீங்க... பட்... ஆனாலும் நான் வச்ச ஃபைலை ஒங்க பியூனோ... தவறுதலாய் எங்காவது வச்சிருக்கலாம் இல்லியா? ஜி. எம்.—சார் வாங்க தேடிப் பார்க்கலாம்.''

புகழாரம் கழுத்தில் சுருக்குப் பிடி போட, மானேஜிங் டைரக்டர் எதுவும் புரியாமல் விழித்தபோது, டி. கே.—ராமனும், சுகந்தியும் அறையில் ஒவ்வொரு மூலையிலும் இருந்த ஃபைல் கட்டுக்களைக் குடைந்தார்கள். பீரோக்களைத் திறந்தார்கள். ரேக்குகளை இழுத்தார்கள். அலமாரிகளைக் குடைந்தார்கள். மெத்தை விரிப்பைத் தூக்கிப் பிடித்து உற்றுப் பார்த்தார்கள். சோபா செட்டுக்களுக்குக் கீழே குனிந்தார்கள்.

மானேஜிங் டைரக்டரும் — அவர்கள் தேடுவது ஒரு அனிச்சைச் செயலாக, அங்கு மிங்கும் சுற்றினார். பிறகு, தம் இருக்கையில் அமர்ந்து, டிராயரை இழுத்து, சிகரெட்டை எடுக்கப் போனார். தற்செயலாக உள்ளே ஒன்று தென்பட்டது. என்னது... அடேடே ஞாபக மறதியில் இங்கே வெச்சுட்டேன் போலிருக்கு.... அட, கடவுளே!

அலமாரிகளைப் பிடித்து, பீரோக்களை இழுத்து, கடைசியில் எம். டி.யின் மேஜையைக் குடைவதற்காக டி. கே.—ராமனும் சுகந்தியும் வந்தபோது, மானேஜிங் டைரக்டர் டக்கென்று டிராயரை மூடினார். ''ஃபைல் இங்கே இருந்தால் நான் இடியட்னு அர்த்தம்' என்று சொல்லிவிட்டு... அப்புறம்... கூடாது.... காட்டக் கூடாது... சொல்லக் கூடாது.

மானேஜிங் டைரக்டர் இருவரிடமும் ஆணையிடுவது போல் பேசினார்.

''நான் இங்கே நல்லாத் தேடிட்டேன். எதுவும் இல்லை. மிஸ்டர் டி. கே. ராமன்... ஒங்க ரூமுக்குப்போய்த் தேடலாம்வாங்கோ!''

இப்போது மானேஜிங் டைரக்டரின் மேலான தலைமையில், டி. கே. ராமன் அறையில் தான் பறக்கிறது. கான்பிடென்ஷியல் ஃபைலைத் தேடும் வேலை இன்னும் முடியவில்லை.

வெளியே—

கண்டிராக்டரும், அவரை நம்பிய தொழிலாளர்களும் காத்துக் கிடக்கிறார்கள்!

எல்லா
வயதினருக்கும்
எல்லா
தேவைகளுக்கும்
கைத்தறி!

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

மல்லிகை
20, தெற்கு சித்திரை வீதி,
மதுரை
அருகில் உள்ள
விற்பனை நிலையங்களுக்கு
வருகை தாரீர்!



ஆண்களுக்கு
தையற்கலை
வகுப்புகள்

நேரிடையாக 2 மாத / 8 மாத பகுதி நேர / முழுநேர வகுப்புகளில் பயின்று சுயமாக பொருளீட்ட ஆண்களுக்கு அரிய வாய்ப்பு. ஷிப்டில் உள்ளவர்களுக்கு வசதி செய்யப்படும். செய்முறை வகுப்புகள் தமிழ், தெலுங்கு, ஆங்கில மலையாள மொழிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. முற்றிலும் எளிய நவீன முறையில் நடத்தப்படும் ஒரே ஸ்தாபனம்.

ஹாஸ்டல் வசதி உண்டு


நேரில் வரவும் (அ) விபர புத்தகம் பெற
ரூ. 2-00 M.O. செய்க.

வளஜ் தையற் பள்ளி
32 காந்தி இர்வின் சாலை எழும்பூர் சென்னை 8
[டெக்னிக் ஸ்டுடியம் அருகில்]
எந்த தேதியிலும் சேர்த்துக் கொள்ளப்படும்.

கிளை: 23, தென்னூர் ஹைரோடு,
ஸ்டார் பில்டிங், திருச்சி-17



# டிவி நிகழ்ச்சிகளை ரேடியோவிலும் எஃப்எம் ரேடியோ நிகழ்ச்சிகளை டிவியிலும் கேட்டு மகிழ ஒரு அற்புத படைப்பு



ரூ.325/- மட்டுமே

சாலிடேர் டிவி எஃப்எம் ட்யூனரை உங்களது ரேடியோவுடன் இணைத்து, டிவி இல்லாமலேயே டிவி நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழலாம். டிவியில் இடம்பெறும் திரைப்படம், நாடகம், இசை போன்ற பல நிகழ்ச்சிகளைக் கேட்க இது ஒரு அற்புத படைப்பு.


இது தவிர உங்களது டிவியில் 'பிக்-அப்' வசதி இருக்குமேயானால் சாலிடேர் டிவி எஃப்எம் ட்யூனரை இணைத்து எஃப்எம் ரேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்கலாம்.

சாலிடேர் டிவி எஃப்எம் ட்யூனரை எந்தவொரு ஆம்ப்ளிஃபையருடனும் இணைத்து டிவி நிகழ்ச்சிகளையோ, எஃப்எம் ரேடியோ நிகழ்ச்சிகளையோ கேட்கலாம்.

## சாலிடேர்
டிவி/எஃப்எம் ட்யூனர்

HE: 250

# காந்தி பஞ்சகம்: தீர்க்க தரிசனம்!



**பா**ரதியின் அரசியல் குருவான லோக மான்ய திலகர் காந்திஜியின் ஒத்துழையாமையை எதிர்க்கவில்லை என்றாலும், அதை முழுமனத்துடன் ஏற்றுக் கொண்டார் என்று சொல்வதற்கில்லை. 'கிடைத்ததைப் பெற்று கிடைக்காததற்காகப் போராடுங்கள்' என்று இரட்டுற மொழிந்தார். அவர் கருத்திலே கிடைத்தது மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர் திருத்தம். கிடைக்காதது பூரண சுதந்திரம்!

திலகரின் சீடரும் தேசியக் கவி பாரதியாரின் அருமைத் தோழருமான தேச பக்த சிதம்பரனார் ஒத்துழையாமையை எதிர்த்து அறிக்கை விட்டு விட்டுக் காங்கிரஸிலிருந்து வெளியேறினார்.

தமிழ் நாட்டிலே அறிஞர் ராஜாஜியைத் தவிர அப்போது அனைத்திந்திய ரீதியில் செல்வாக்குப் பெற்றிருந்த தலைவர்களில் எவரும் ஒத்துழையாமையை ஏற்கவில்லை; எதிர்த்தும் ''அறிக்கைப் போர்'' நடத்தினர்.

''இந்து'', ''நியூ இந்தியா'' ஆகிய ஆங்கில ஏடுகள் ஒத்துழையாமைத் திட்டத்துக்குத் திருத்தம் கோரின.

பாரதியாரைத் துணை ஆசிரியராகக்கொண்டிருந்த ''சுதேசமித்திரன்'' தமிழ் ஏடுகூட ஒத்துழையாமையை ஏற்கவில்லை; எதிர்த்துப் போராடியது!

உலகப் புகழ் பெற்ற இந்தியக் கவிஞரான ரவீந்த்ரநாத் தாகூர்கூட, ஒத்துழையாமைச் சித்தாந்தத்தை எதிர்த்து ஐரோப்பாவிலிருந்த வண்ணம் அறிக்கை விடுத்தார்.

இந்தச் சூழ்நிலையிலே தமிழ்ப் புலவரான பாரதியார், காந்தியடிகளின் தலைமை எதிர்காலத்தில் நிகழ்த்தவிருக்கும் புரட்சிகளை முன்கூட்டி உணர்ந்தார். ஒத்துழையாமையால் தேசத்துக்கு ஏற்படவிருக்கும் நன்மைகளைத் தீர்க்கதரிசனத்துடன் அறிந்து 'காந்தி பஞ்சகம்' பாடினார்.

ஐந்து செய்யுள்கள் கொண்ட அந்தப் பாடலை ''வாழ்க நீ எம்மான்!'' என்னும் வாசகத்தோடு தொடங்குகிறார்! இது ஒன்றே காந்தி பக்தி அவர் இதயத்தில் ஏற்படுத்திய எழுச்சியை உணர்த்தும்.

காந்திஜியை இந்தியத் தலைவராக மட்டு மல்லாமல், சர்வ தேசத் தலைவராகவே கருதி, வையத்தில் உள்ள நாடுகள் எல்லாம் காந்தியம் வாழ வேண்டும் என்று கூறி, அதனை வாழ்த்துகின்றார். காந்திஜியை ஒரு தனி நபராக அல்லாமல் 'உயிர்க் குலம் அனைத்துக்கும் நன்மை தரும் ஒரு மாபெரும் தத்துவமாகவே அவர் கருதினார்.

பாரத தேசமானது தாழ்வுற்று விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றிருந்த நேரத்திலே, அதனை வாழ்விக்க காந்திஜி தோன்றினாராம்! எவ்வளவு தீர்க்க தரிசனமான நோக்கு!

முதற்செய்யுளின் இறுதியிலே ''மகாத்மா'' என்ற பட்டத்தைத் தந்துள்ளார் மோகனதாஸ் காந்திக்கு! இவருக்கு முன்பே கவிதாகூர் ''மகாத்மா'' என்னும் புனிதப் பெயரால் காந்திஜியை அழைத்திருக்கலாம். ஆனால், மோகன் தாஸ் காந்தி வெறும் மனிதாத்மா அல்ல; மகாத்மா என்பதனைத் தமிழ் மக்களுக்கு உணர்த்த ஒரு பாரதி தேவைப்பட்டார்.

ஆம்; பாரதியார் காந்தி பஞ்சகம் பாடிய பிறகே தமிழ் நாட்டார் மோகன் தாசரை மகாத்மாவாக அறிந்தனர்!

''அகிம்சை!'' என்னும் தத்துவத்தின் அருமை பெருமைகளையெல்லாம் விவரிக்கிறார் ஒரு செய்யுளிலே:

''பெருங்கொலை வழியாம்
போர்வழி இகழ்ந்தாய்
அதனிலுந் திறன்பெரி துடைத்தாம்
அருங்கலை வானர் மெய்த் தொண்டர்
தங்கள் அறவழி என்று நீ அறிந்தாய்'' என்று போற்றுகின்றார்.

ஒத்துழையாமைப் போர் முறையையும் அந்த மகா கவி வரவேற்கிறார்.

'நெருங்கிய பயன்சேர் 'ஒத்துழையாமை'
நெறியினால் இந்தியாவிற்கு வருங்கதிகண்டு பகைத் தொழில் மறந்து வையகம் வாழ்க நல்லறத்தே' என்று பாடுகின்றார்.

திலகரின் சீடராக அரசியலில் புகுந்தவர் பாரதியார். காந்தி பஞ்சகம் எழுதியபோது திலகர் வாழ்ந்திருந்தார் என்றே நம்ப வேண்டியிருக்கிறது. நாட்டிலே தலைமை மாறுகிறது. அதனுடன் சேர்ந்து தத்துவமும் மாறுகிறது. இந்த மாறுதலைத் தெளிவுறத் தெரிந்து கொள்ள இயலாமல் திண்டாடினார்கள் அரசியல் மேதைகள். தேசத்தின் வருங்காலம் இருண்டு விடும் என்று அஞ்சினார்கள். பரங்கி மொழியிலே பாண்டித்தியம் பெற்றவர்கள்! ஆனால் பாரதத்தின் தென்கோடியில் வாழ்ந்த ஓர் ஏழைத் தமிழ்ப் புலவன் அறிந்து வைத்திருந்தான் அகிம்சையின் ஆழத்தைத்தெரிந்து வைத்திருந்தான் தேசத் தலைவரின் தீரத்தை!

ம.பொ.சி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course, Road, Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran






# Ambi's

ஊறுகாய்கள்

**அம்பீஸ் சுவை,**
**ஒரு தாயின் கை தேர்ந்த**
**சுவை போல் ஆவலைத்**
**தூண்டும் சுவை.**

*16க்கும் மேற்பட்ட சுவை*
*ரகங்களில் கிடைக்கிறது.*

தயாரிப்போர்:
அம்பீஸ் பிக்கிள்ஸ் அண்ட்
காண்டிமெண்ட்ஸ் ஆப் இந்தியா
ஏற்றுமதி செய்வோர்:
வெஸ்டர்ன் எக்ஸ்போர்ட்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட்
19, நீலகண்ட மேத்தா தெரு, தி. நகர்
சென்னை–17 தொலைபேசி: 447355

3869
FPO

APRC 109

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka


# வண்ணம் பூசுவதில் உள்ள பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளுதல் போலவே, அந்தப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதும் முக்கியம் கூடவே.

## நெரோலாக் பெயிண்ட்ஸ் உங்கள் பிரச்சினைகள் தீர உதவுகிறது.

நல்ல பெயிண்ட்டை வாங்கும்போது, கடும் உழைப்பால் சம்பாதித்த உங்கள் வருமானத்தின் பெரும் பகுதி செலவாகிறது. எனவே கொடுக்கும் பணத்திற்கு அதிகபட்சம் பலனை அடையவே விரும்புவீர்கள். வண்ணம் பூசுவதில் உள்ள பிரச்சினைகளில் இருந்து விடுபட உங்களுக்கு உதவும் சில குறிப்புகள் இதோ:-

1 எந்தப் பரப்புக்கு வண்ணம் பூச விரும்பினாலும், ஒத்துப் போகக் கூடிய வண்ணப்பூச்சு முறையைப் பின்பற்றுங்கள். ஏனெனில் ப்ரைமர், பட்டி மற்றும் ஃபினிஷிங் கோட் ஆகியவை ஒன்றுக்கொன்று ஒத்துப்போகும் தன்மையைப் பொறுத்தே, வண்ணப் பூச்சின் சிறப்பு அமைகிறது. எல்லாப் பரப்புகளுக்கும் உகந்த, தனித் தனி வண்ணப் பூச்சு முறையை நெரோலாக் பெயிண்ட்ஸ் வழங்குகிறது.



2 பரப்பை எவ்வாறு தயார் செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்தும், வண்ணப் பூச்சின் சிறப்பு உள்ளது. வண்ணம் பூச வேண்டிய பரப்புகள் உலர்ந்ததாகவும், எண்ணெய்ப் பசை, பிசுக்கு மற்றும் அழுக்குகள் இல்லாதவாறு சுரண்டி சுத்தம் செய்யப்பட்டதாகவும் இருக்கவேண்டும்.

3 வண்ணம் பூசும் ஒவ்வொரு கட்டத்திலும், முந்திய கோட்டிங் நன்றாக உலர்ந்த பிறகே அடுத்த கோட்டிங் கொடுக்கவேண்டும். என்பதை நினைவில் வைக்கவும்.



4 பெயிண்ட்டை நன்றாகக் கலக்கி, போதுமான அளவு அடர்த்தி குறைவாக்கி, வடிகட்டி உபயோகிக்க வேண்டும். இதனால் பரப்புகளில் வண்ணத்துகள் சரிவரப் பொருந்துகின்றன.

வண்ணப் பூச்சு முறையின் பூர்வாங்கக் கவனங்கள் எல்லாம் எடுத்த பிறகும் கூட, பொங்குதல், உரிதல், பொடிதல் அல்லது கீறல் விழுதல், உப்புப் பொரிதல் போன்ற சில குறைபாடுகள் இருக்க கூடும். காலநிலை, பிளாஸ்டரின் மோசமான நிலை மற்றும் சுற்றுப்புற காற்றோட்டத்தின் ஈரத் தன்மை இவற்றின் கூட்டு விளைவாகவே இக் குறைபாடுகள் ஏற்படுகின்றன. எனவே வண்ணம் பூசும்போது, கொஞ்சம் கூடுதல் கவனம் எடுக்கவேண்டும்.

வண்ணம் பூசுவதைப் பற்றிய விவரங்களை



நன்கு அறிய விரும்பினால், வண்ணம் பூசுவதைப் பற்றிய "All you wanted to know about painting" என்ற எங்களின் நெரோலாக் பெயிண்ட்ஸ் இலவச ஆங்கில வெளியீட்டுக்கு எழுதவும் கீழே தரப்பட்டுள்ள கூப்பனை நிரப்பி அனுப்பினால் போதும்.




**நெரோலாக் பெயிண்ட்ஸ்**

இல்லங்களுக்கு எழிலூட்டும் வண்ணங்கள்.

ULKA-GNP-170 TAM

தயவு செய்து நெரோலாக் பெயிண்ட்ஸ் விளக்கப் புத்தகம், ஆங்கிலப் பிரதி ஒன்று அனுப்பவும்.

பெயர் ..............................................

முகவரி ..............................................

.............................................. பின் கோட் ..................

குட்லாஸ் நெரோலாக் பெயிண்ட்ஸ் லிமிடெட்
விற்பனைப் பிரிவு, தபால் பெட்டி எண் 16322
பம்பாய்-400 013

170(V)